ஐந்திணைப் பதிப்பகம்



# கல் சிரிக்கிறது

லா.ச. ராமாமிருதம்

# கல் சிரிக்கிறது

லா. ச. ராமாமிருதம்

ஐந்திணைப் பதிப்பகம்
282, பாரதி (பைகிராப்ட்ஸ்] சாலை,
திருவல்லிக்கேணி,
சென்னை-600005.

முதற் பதிப்பு : டிசம்பர் 1987
ஐந்திணை—31
உரிமை பதிவு

விலை ரூ. 9-50

KAL SIRIKKIRATHU

Novel

By

L. S. RAMAMIRUTHAM

First Edition : December. 1987
4+117 = 121 Pages
10. Pt. Letters
18×12.5 Cms.
White Printing
Box Board Binding
Devaneyan Printers,
MADRAS-5.

Published
By
KUZHA. KATHIRESAN

Phone : 845712
AINTHINAI PATHIPPAGAM
282, Pycrofts Road,
Triplicane,
MADRAS-600 005.

# சிரிப்பு

★

மரத்தை மறைத்தது மா மதயானை
மரத்தில் மறைந்தது மாமத யானை

— திருமூலர்

''உன் கடவுள் எங்கிருக்கிறான்?''
''எங்கும் இருக்கிறான், தூணிலும் இருக்கிறான்
துரும்பிலும் இருக்கிறான்.''

''அப்படியானால் இந்தத் தூணில் இருக்கிறானா?', என்று தூணை அறைந்ததும், உள்ளிருந்து சிரிப்புச் சத்தம் கேட்டது.''

— ப்ரஹலாத சரித்ரம்

தெய்வத்தைக் கல்லில் வடிக்கிறோம். நம் ஆர்வத்தி லும் ஆவாஹனத்திலும் ஆராதனையிலும் கல்லை மறந்து தெய்வத்தைப் பார்க்கிறோம். விக்ரஹத்தின் மந்தஹாஸத்தில் அத்தனை மயக்கு. உருவேற்றலில் அத்தனை உயிர்ப்பு.

நம் சமயத்துக்கேற்ப, நம் சௌகரியத்தின்படி, அந்தச் சிரிப்பில் அர்த்தத்தைப் படித்துக் கொண்டு, உத்தேசித்த காரியத்துக்குத் தெய்வத்தின் அனுமதி கிடைத்து விட்ட தாக எண்ணிக் கொண்டு, காரியத்தில் இறங்குகிறோம், காரியம், எதிர்பார்த்தபடி அனுகூலமாக முடிந்தால், தெய்வம் சிரிக்கிறது என்கிறோம். மாறாகத் திரும்பி விட்டால், கல் சிரிக்கிறது, என்கிறோம்.

ஆனால், சிரிப்பது தெய்வமுமில்லை கல்லுமில்லை. எண்ணம்தான் சிரித்துக் கொண்டேயிருக்கிறது. ஆகவே பயத்துக்குரியது எண்ணம்தான். அதுவும் அவனவன் எண்ணமே—''

லா. ச. ரா.

Plot 242, ஞானமூர்த்தி நகர்.
அம்பத்தூர், சென்னை - 600 053.
1 - 11 - 1987

# 1

"அம்மா கமலாம்பிகே! அர்ச்சனைக்குப் பதிலாக உன்னைக் கல்லால் அடிக்கணும். ஆனால் நீ தாங்கிப்பே' உனக்கு அவ்வளவு நெஞ்சழுத்தம் இருக்கு. இல்லேன்னா, இந்த ஒரு வாரமா, தட்டுலே தடவித் தடவி எடுக்கற மாதிரி வைப்பியா? இத்தனை நாளில்லாத புது ராங்கி, புது வாழ்வு என்னடி உனக்கு இப்போ வந்துடுத்து? தர்ம கர்த்தா என்னடான்னா, நீ தங்கப் படியிலே தினம் பொற் காசை அளந்துடற மாதிரி வயிறு எரியறான். அர்ச்சனைக் குச் சீட்டு ஸிஸ்டம் கொண்டு வந்துடணும்னு துடிக்கறான். ஏன்னா இங்கே பக்தர் கூட்டம் பாலாஜிக்குத் தட்டுக் கெட்டுப் போறது பாரு! மாஸச் சம்பளத்தை ஏழு தேதிக்குப் பட்டுவாடா பண்ண மீனமேஷம் பார்க்கறான். இவன் கொடுக்கற ஓட்டாண்டிச் சம்பளம் ஒரு மாஸத்துக் காப்பி, அஸ்கா, பாலுக்கு முழுக்கக் காண்றதாடி? அப் படியும் ஒண்ணும் திக்கா போட்டுக் குடிக்கறதில்லே. எட்டு அடிச்சாச்சு. முழுக்க மூணு தேறல்லே. கதவைப் பூட்டிண்டு கிளம்ப வேண்டியதுதான். வா வா, நாளைக்கு உனக்கு நைவேத்யம் அன்னம் அல்ல. ஏனம் நிறைய மண், கௌரவமா மேலே துணியைப் போட்டு மூடி."

அவள் அருண்டுவிட்டதன் அடையாளமா, கொத்தாக நாலு பக்தர்கள் பிரத்யக்ஷமாயினர். அவர்களுள் ஒருவர் அஷ்டோத்ரம்.

ஒருவர் சற்று ஒதுக்கமாகத் தயங்கி நின்றார்.

"பிள்ளைவாளுக்கு என்ன வேணுமோ?"

"வெள்ளிக் கிழமை, அபிஷேகம் பண்ணி, தோம்பு சாத்தணும்."

''அப்போ ஒரு நிமிஷம் நில்லுங்க. ஏன், உள்ளே வாங்களேன். திவ்யமா கிட்ட நின்னு தரிசியுங்க. நான் அதுக்குள், இந்த அர்ச்சனையைப் பண்ணிடறேன்.''

''நானும் அர்ச்சனை பண்ணிக்கறேங்க. தேங்காய் பழம், வெற்றிலை வாங்கி வந்துடறேனுங்க.''

''ரொம்ப விசேஷம். சுருக்க வாங்க. ஐயா, நீங்க கையிலே தீர்த்தம் வாங்கிக்கோங்க. கோத்தரம், பேர்?''

குருக்கள் அர்ச்சனை நாமாவளிகளை உருட்ட ஆரம்பித்தார்.

''ஓம் கமலாம்பிகே யெநம!''

''ஓம் சிவப்ரியே யெநம!''

''ஓம்...''

கர்மம், நாலு நாமாவுக்கே தொண்டை கம்மிப் போயிடறது. கண்டம் சற்றே பேசினா, எனக்கு இருக்கற ராக ஞானத்துக்கு அள்ளிடுவேன். ஆனால் ஆட்டுக்கு வாலை அளந்துதானே வெச்சிருக்கு!

முதல் தட்டலுக்கே 'பளார்' என்று தேங்காய் சரி பாதியில் பிளந்தது. 'பேஷ்! இன்னிக்கு, நாளைக்குச் சட்னிக்கு ஏர்வைதான். இது சரியாயிருக்கு. வாங்கிண்டு வரேன்னு போனானே, அந்த மூடி குழந்தை வாய் மாதிரியிருந்தால்?'

''என்ன குருக்களே ஒரு மூடி?''

''ஒரு மூடி குருக்களைச் சேர்ந்தது.''

''எங்க ஊர்லே — ''

''அது உங்க ஊர்; இது இந்த ஊர். எங்கள் ஊர். இங்கே பழக்கம் இப்படி. அதான் என்னடா புது முகமாயிருக்கேன்னு பார்த்தேன். ப்ராம்மணனுக்கு ஒரு தேங்காய்

மூடிக்குப் பால் மாறாதேங்கோ. அத்தோடு உங்களைப் பிடிச்ச பாபத்தில் பாதியை நாங்கள் வாங்கிக்கறோம்னு நினைச்சுக்கோங்கோ.''

''குருக்களே, கோவிச்சுக்கப்படாது.''

''நான் கோவப்படல்லே. நம் நாடு தெய்வத்தின் இருப்பிடம்னு சொல்லிக்கறோம். ஆனால் ஆஸ்திக சிந்தனை எவ்வளவு க்ஷீணமடைஞ்சு போச்சுன்னு நினைக்கறப்போ கஷ்டமாயிருக்கு.

''தட்சிணை கால் ரூபா வெச்சிருக்கேள். இதுக்கு நான் உடைச்ச கடலை வாங்கிக் கொறிக்கிறதா, உருப்படறதா நீங்களே சொல்லுங்கோ. சாமிக்குப்பண்றதுன்னா, கையை யார் பின்னாலே புடிச்சு இழுக்கறாளோ? நீங்கள் கையைத் தளர்த்தினால்தான் அவள் வாரி வழங்க முடியும். வெறுங் கையை முழம் போட முடியுமா? ஆ, வாங்கிண்டு வந்துட்டேளா?''

''அவன் கடையைக் கட்ட ஆரம்பிச்சுட்டான். அதிலேதான் சற்று தாமதம்.''

''அதனாலென்ன? இன்னிக்கு புதன்தானே! புதன் கிழமையே கொஞ்சம் டல்தான். நாளையிலிருந்து பாருங்கோ. உங்கள் அபிஷேகம் வெள்ளிக் கிழமைதானே? தோம்பு சாத்தி—? அஷ்டோத்ரமா, ஸகஸ்ரநாமமா? ஸகஸ்ரநாமம்தான் சரி. நைவேத்யத்துக்குக் காசாக் கொடுத்தாலும் சரி, சரக்காகக் கொடுத்தாலும் சரி, வீட்டிலே பண்ணிக் கொண்டு வந்துடுவேன். என்னென்னு தனியா விலை பேச முடியுமா? சுண்டல் வாஸிக்கணும்னா, தாளிதத்துலே கொஞ்சம் டால்டா காட்டினால்தான் எடுப்பாயிருக்கும். சர்க்கரைப் பொங்கல் உண்டா? சரி சரி பிள்ளைவாள், தாக்ஷண்யமே வேண்டாம். சாமான்களை நீங்களே வாங்கிக் கொடுத்துடுங்க. உங்கள்கிட்ட காசை வாங்கிட்டு அப்புறம் 'அதிலே முந்திரிப் பருப்பு இல்லையே? நெய் எங்கே?' இதுக்கெல்லாம் இடம் வேண்டாம். தெய்வத்துக்கு வஞ்சனை யில்லாமல், என்னால் முடிஞ்

சது வீட்டில் இருக்கறதையும் சேர்த்துப் போட்டு செஞ்ச வரைக்கும் நிறக்க இருக்கணும். தட்சிணை அஞ்சுக்கு மேலே உங்களிஷ்டம். நான் கசக்கிப் பிழிய மாட்டேன்' இன்னிக்கு அவள் அளந்த படி. இவ்வளவுதான்னு திருப் திப் பட்டுடுவேன். சுபாவம் அப்படி. பணமாவே தந் துடறேளா? இப்போ முப்பத்தஞ்சு கொடுங்கோ. அர்ச் சனை தட்சிணை தனி. நினைவிருக்கட்டும். சரி, வெள்ளிக் கிழமை சாயங்காலம் ஆறு மணிக்கு 'டாண்'னு ரெடி.''

ஒரு வழியா ஆளெல்லாம் போயாச்சு. குருக்கள் நோட்டை மடித்து இடுப்பில் செருகிக் கொண்டார். சன்னதி மின்சார விளக்கைக்கூட அணைத்தாகி விட்டது. கதவைப் பூட்டிண்டு கிளம்ப வேண்டியதுதான்.

கர்ப்பக்ருஹத்தில் மட்டும் அகல் சுடர் எரிந்தது. எரி யட்டும் - எரியறவரை.

''ஒரு கற்பூர ஆரத்தி மட்டும் சௌகர்யப் படுமா?''

குருக்கள் திடுக்கிட்டுத் திரும்பினார். உருவத்தின் மங்கல் மட்டும் தெரிந்தது.

''கற்பூரம் கொண்டு வந்திருக்கேளா?''

''இல்லையே ! கடை மூடிக் கிடக்கு.''

''பரவாயில்லே. தனியா ஒரு கால் ரூபா போட்டு டுங்கோ.''

தீபாராதனையின் வட்டமான பிரயாணத்தில் அம் பாளின் மூக்குத்தி மின்னிற்று. 'புன்னகையில் தனிக் கேலி தெரியறதோ? சிரிடீ சிரி ! உனக்கு எப்பவும் சிரிப்புத் தானே !' தட்டில் சுளையாக ஒரு வெள்ளி வட்டம் விழுந் தது. பெரிய வட்டம். 'இன்னிக்கு இத்தனை நாழிக்கு நரி முழி?' அந்தக் கேள்வியில்தான் குருக்கள் ஆளைச் சரி யாகத் தலை நிமிர்ந்து பார்த்தார்.

குங்கும ப்ரஸாதம் நெற்றியில் ஏறியதும், அந்த

ஆளின் முக வெளிறு தனி 'டால்' அடித்தது. துல்லிய மான வெள்ளை ஆடை. அடுத்து நேர்ந்ததைக் குருக்கள் எதிர்பார்த்திருக்க முடியாது. கையில் மிச்சக் குங்கு மத்தை அவர் குருக்கள் நெற்றியில் தீட்டினார். குருக்கள் திடுக்கிட்டுப் போனார். கூட கோபமும் மூண்டது.

''யாரையா நீ?''

''டேய், மணி!'' ஆழ்ந்து தாழ்ந்த குரல், மிருதங் கத்தில் குமுக்காரம் கொடுத்தாற்போல். குருக்களுக்குப் பயத்தில் வயிறு சுருட்டிற்று.

''தெரியல்லியே!'' முனகினார்.

''நன்னா யோசனை செய்து பார்! பின்னுக்குப் போ வெளியில் வா! இருட்டில் தடவிண்டிருந்தால் என்ன தெரியும்?''

திடீரென நெஞ்சில் ஒரு பரந்த விடிவு. குருக்களுக்கு அந்த வெளிச்சத்தில் கண்கள் அகல விரிந்தன

''யாரு, தர்மராஜனா? என்னப்பா தருமு, நிமிஷத் தில் கதி கலக்க அடிச்சுட்டியே!'' ஆமாம், தருமுவேதான். குருக்கள் ஆசையாக அவரை அணைத்துக் கொண்டார். ''அடே, எத்தனை வருஷங்களடா!''

''இன்னமும் சந்தேகம்தானா?''

''இல்லேடா தருமு, இந்தச் சிவப்பு என்னை உஷார்ப் படுத்தியே யிருக்கணும். நம் உறவில், ஏன், ஜாதியிலே இந்தக் கலர் ஏது? நீயே ஒரு அலாதிப் பிறவி. வா வா, வெளியில் சற்று உட்காருவோம். நீ இப்போ எங்கே இருக்கே? எப்போ வந்தே? ஆத்துக்கு அவசியம் வர ணும்டா. அவ ரொம்ப சந்தோஷப் படுவாள். ராஜா மாதிரி யிருக்கேடா!

''இப்படித்தான்டா தினம் மாரடிக்கறேன். கால் ரூபா பாக்கறது கடினமாயிருக்கு. என் தரித்திரம்தான்

எப்பவுமே யிருக்கு. உன்னைப் பற்றிப் பேசுடா!''

''என்னைப் பற்றி என்ன பேசணும்?''

''என்னடா பேத்தறே? நீ மறைஞ்சு போய் முப்பத்து அஞ்சு வருஷமாறது. முப்பத்து அஞ்சு வருஷத்தை ஏப்பம் விட்டுட்டு என்ன பேசணும் என்கறே? நீ கொல்லு கொலைக்கு அஞ்ச மாட்டே.''

''அபசாரம், அபசாரம்—கோவில்லே உட்கார்ந் துண்டு...''

''ஆத்துக்கு வாயேன்டா.''

''வராமலா போறேன்? இப்போ, சொல்லாமல் வந்து தொந்தரவு கொடுக்கப்படாது.''

''உனக்குன்னு என்னடா தனியா பண்ணப் போறோம்? ஆத்து மனுஷன் நீ!''

''வரேன். கண்டிப்பா வரேன்.''

''குடும்பத்தோடு வரணும். இப்பவே சொல்லிட் டேன். காலையிலேயே வந்துடுங்கோ. எத்தனை குழந்தை கள்?''

''ஹாம்... அதுக்கெல்லாம் கொடுப்பனை இல்லை.''

இங்கிருந்தே கர்ப்பக்ருஹத்தில் அகல் சுடர் லேசாகப் படபடத்தது. மலை யேறுகிறதோ?

''நீ சொல்றது விளங்கல்லியே!''

''அதிருக்கட்டும், மணி. உன்னால ஒரு தயவு ஆகணுமே!''

''மழுப்பறே!''

''சரி, மழுப்பறேன். விஷயத்துக்கு வரலாம்.''

''அதென்னடாப்பா விஷயம்?''

''வாரத்தில் ஒரு நாள் பூஜை எனக்கு வேணும்.''

மணிக்குச் சிரிப்பில் உடம்பு எல்லாம் குலுங்கிற்று. புரைக்கேறி உச்சந்தலையைத் தட்டிக் கொண்டார். சரீரம் மடி மடியாகக் குலுங்கிற்று. அந்த ஆள், இந்த அலை அடங்கும்வரை பொறுமையாகக் காத்திருந்தார்

''டேய் தருமு, நீ நல்ல தமாஷான ஆளுதான்.''

''நான் தமாஷ் பண்ணல்லே. ரொம்ப சீரியஸா இருக்கேன்.''

''என்ன தருமு, இந்த அபஸவித்துக்கெல்லாம் நீ ஆசைப் படலாமா? அதுவும் நீ—''

''இது என்ன ஐஸ்?''

''நிஜம்மாத்தான்டா சொல்றேன். நீயே ஒரு சன்னிதானம் மாதிரிதான் இருக்கே. உன்னோடே பேசிண்டு தான் இருக்கேன். 'டா' போட்டுக்கறேன், அப்பப்போ தைரியத்துக்கு. நீயும் சகஜமாத்தான் பழகறே. ஆனால் உள்ளூர என்னவோ 'திக்திக்' —''

''மணி, ப்ளீஸ்...''

''சத்யமாடா, விட்டேன்னு!''

தர்மராஜன் செவிகளைப் பொத்திக் கொண்டார்.

''விஷயத்துக்கு வரயா?''

''இது உனக்கு ஏதுக்கப்பா, விடு. இது ஒரு பிழைப்பா?''

''மணி, கத்துண்டது ஏதும் எனக்கு இன்னும் பாடம் மறந்துடல்லே. வாரத்தில் ஒரு நாள்தான் கேக்கறேன்.''

''அதெப்படி தருமு, நடக்கற காரியமாப் பேசு!''

''அப்படின்னா மாட்டேன்கறயா?'' அவர் பெருமூச் செறிந்தார்.

"ஏன் கோவப்படறே, தருமு?"

"கோபமா? கோபப்பட அவசியமேயில்லை எனக்கு. இந்தப் பூஜைக் கட்டளையில் பாதிப் பங்கு எனக்கு இருக்குன்னு தெரியுமோன்னோ? தலைமுறை தலைமுறையா, குடும்ப சாஸனமே இருக்கு ஓலைச் சுவடியில், தெரியுமோன்னோ?"

"எடுத்தாரய்யா சுயரூபத்தை, யமதர்மராஜன்!"

"மணி, இது சிரிப்புச் சமாச்சாரமில்லை!"

"நீ என்னத்தையோ ஓலைச்சுவடி எதையோ சாக்ஷிக்கு இழுக்கறயே பின்னே! அதெல்லாம் எப்பவோ எரிஞ்சு போச்சு. ஓலைச் சுவடியாவது மண்ணாங்கட்டியாவது! பழம்பாய்க்கும் குப்பைக்கும் வித்தியாசம் தெரியாமல் அப்பா காலத்துலேயே போகிக்குக் கொளுத்திட்டா!"

அவர் புன்னகை புரிந்தார்.

"அப்படி வா வழிக்கு! எப்பவுமே பெரியப்பா பிள்ளை, சித்தப்பா பிள்ளைன்னா கௌரவாள், பாண்டவாள் தானாக்கும்!"

"ஒரு வயத்துப் பிறப்பே இப்போ அப்படித்தானிருக்கு. உனக்கு நான் ஏன் விட்டுக் கொடுக்கணும்?"

"யாரும் யாருக்கும் விட்டுக் கொடுக்க வேண்டாம். உரியது உருப்படியா கிடைச்சால் போறாதா?" மணியின் தோளை லேசாகத் தட்டினார். "ஓலைச்சுவடி உசிரோட, பத்ரமா இருக்கு தம்பி. பிள்ளை குணம் பெரியப்பாவுக்கு அப்பவே தெரியும் போல இருக்கு. என்னிடத்தில் ஒப்படைச்சுட்டுப் போயிருக்கார். என்னிடம் இருக்கு."

"—ம்ம்ம்—? 'டூப்'விடறே!" ஆனால் மணிக்குக் குரல் கொஞ்சம் பின் வாங்கிற்று.

"மணி, 'போர்' அடிக்காதே. நாம் சின்னக் குழந்தைகள் அல்ல."

''அப்பிடின்னா எங்கே காட்டு!''

''அவசியம் வரப்போ, நீ வீம்பு பிடிச்சால், காட்ற இடத்தில், காட்ட வேண்டிய சமயத்தில் காட்டுவேன். ஆனால் ஒண்ணு. ருஜு உனக்கு அவசியம்தான்னு, தஸ்தாவேஜு ப்ரகாரம், என் முழுப் பங்கு பாதிக் கட்டளையும் பிடுங்கிண்டுடுவேன். அதனாலே எதை யேனும்ஆரம்பிச்சுட்டு முடிக்க முடியாமல் திண்டாடாதே. இப்போ கேக்கறது வாரத்தில் ஒரு நாள். நீயா இஷ்டப் பட்டுக் கொடுக்கற ஒரு நாள் வெள்ளி, விசேஷ தினங்கள் எல்லாம் நீயே வெச்சுக்கோ. என் கிழமையில் எனக்கு வரும் அபிஷேகம், மண்டகப்படி எல்லாம் உனக்கே திருப் பிடறேன். ஆனால் என் இஷ்டத்தில் விட்டுக் கொடுக் கறேன். என்ன சொல்றே?''

மணி சன்னிதானத்தை நோக்கி முஷ்டியை ஆட்டி னார்.

''அடியே, இப்படி வெடி வைக்கத்தான், கொடுக் கறாப்போல ''ஜாலி'' காட்டினாயா?''

''அவளை நிந்தித்தால் என்ன கிடைக்கும்? உன் எண் ணத்தைத் திருத்திக்கோ. நானும் எங்கெங்கோ சுத்தி யாச்சு. இதுதான் என் ப்ரமிப்பு. 'அடுத்துக் கெடு-' இது தான் ஆத்திச் சூடியா யிருக்கு. ஆனால் அவள் தன் அகண்ட கருணையில் எல்லாத்தையும் எப்படித் தாங் கிண்டு இருக்கா?''

''போடா ஆஷாடபூதி!''

''நீ சொல்வதிலும் உண்மை யிருக்கலாம். மனசில் இருக்கிறதை வெளியில் விட்டுச் சொல்றதிலேயே உண்மை யின் அந்த உரு கொஞ்சம் சிதைஞ்சு போறது. நான் என்ன அவதார புருஷனா ஒரு அப்பு அழுக்கு இல்லாமல் இருக்க? அப்படி என் குற்றங்களையும் அவள் தான் மன்னிக் கணும்.''

''நான் பிள்ளை குட்டிக்காரன்டா!'' மணி போட்ட

கத்தலில் தெருவில் படுத்திருந்த நாய் தலை தூக்கித் திரும்பிப் பார்த்து விட்டுப் படுத்தது.

'ஸ்டுப்பிட்!' அந்தச் சீறலில் மணி 'கப்சிப்' ஆனார். கர்ப்பக் கிருஹத்தில் சுடர் அணைந்து திரி பொசுங்கிய நாற்றம் இடம் பூராவும் பரவிற்று. அவர் எழுந்து நின்று விட்டார். நல்ல உயரம். புலு புலுவென்று உறைபோல் முழங்கால்வரை துல்லியமான மஸ்லின் ஜிப்பா. தரையில் புரளப் புரள மஸ்லின் வேட்டி. தலை நரை, ஒரு கறுப்புக் கூட இல்லாமல் அடர்ந்து, வெண்பட்டென மின்னிற்று. வெளுத்த நெற்றியில் குங்குமம் விழியாய்க் கனன்றது. கன்னங்கள் ஒரு மாசுமறு, சுருக்கம் இன்றி வழவழவென—இன்றுதான் க்ஷவரமோ? அவர் நின்ற நிலையில், அவரைப் பார்க்க ஏதோ நீர் வீழ்ச்சி போல்—என்னவோ மனுஷன் பயமாயிருந்தான்.

''எந்த நாள் கொடுக்கறே?''

''சனி!'' என்று மணி முனகினார்.

''என்னைச் சனின்னு திட்டறயா? சனிக் கிழமை என்கிறயா?''

''சனிக் கிழமை.''

''சரி, சம்மதம். இதனால் உனக்கு ஒண்ணும் நஷ்டம் இருக்காது. கவலைப்படாதே.''

''என்ன நஷ்டமில்லை?'' மணிக்கு மறுபடியும் ஸ்ருதி ஏறிற்று. ''முன்பின் நமோது இல்லாமல் புசுக்குனு முளைச்சு என்னவோ என்னை மிரட்டி வாரத்தில் ஒரு நாள் பிடுங்கிண்டுட்டியே!''

''என்னிக்கேனும் ஒரு நாள், பங்கை நீ கொடுத்துத் தானே ஆகணும்? அதை 'அபேஸ்' பண்ணிட முடியுமா? நான் கேட்கிற என் பங்குக்குக் கூட என்னிஷ்ட பாத்யம் கிடையாதா? சந்ததி சமாச்சாரமாச்சே. நானில்லாட்டா என் வழியில் ஒரு துருத்தியான் வாரிசு கொண்டாடிண்டு

வருவானே! அப்போ உன் பிள்ளைகள் அவனுக்கு ஜவாப் சொல்லியாகணுமே!''

''சரி சரி, உன் ப்ரசங்கத்தை நிறுத்திக்கலாம்!''

அவர் தோளைக் குலுக்கிக் கொண்டார். ஆமாம், பேச என்ன இருக்கிறது?

சற்று நேரம் அங்கு மௌனம் நிலவிற்று.

படுத்திருந்த நாய் வெடுக்கென எழுந்து ஓடி இருளில் மறைந்தது. தெரு முழு வெறிச்சாகி விட்டது.

லாந்தர் கம்பம் கம்பமாக நின்றது.

இருந்தாற் போலிருந்து மணி ஆரம்பித்தார்: ''ஆமா, உன்னை ஒண்ணு கேக்கணும்.''

ஏதோ சிந்தனையில் ஆழ்ந்தவர் தலை நிமிர்ந்தார்.

''இப்படியேனும் என் வயத்தில் அடிச்சு, வாரத்தில் ஒரு கட்டை நாளையேனும் வீம்புக்குப் பிடுங்கிண்டு என்ன பலனைக் காணப் போறே? உண்மையில் இது உனக்கு உதவப் போறதா? ஏதேனும் பதில் உண்டா? இல்லே, வாயை 'ஆவ் ஆவ்'னு ஓணான் மாதிரி திறந்து திறந்து மூடறதோடு சரிதானா?''

மணி ஏளனம் செய்வது போலவே பதில் சொல்ல யோசித்துக் கடைசியில் சொல்லாமலே 'கம்'மாகி விட்டார்.

'பார்த்தையா, வாயடைச்சுப் போச்சு. எனக்கு அப்பவே தெரியும். 'நானும் வாழ மாட்டேன். பிறத்தியானையும் வாழ விட மாட்டேன்' —அதானே? இத்தனை நாள் எங்கேயோ ஊர் சுத்திட்டுத் திரும்பி வந்ததுக்கு அடையாளம் கல்லை விட்டெறிஞ்சு குட்டையைக் கலக்கியாகணும். அதானே? சரி, வர்றேன். இன்னும் இங்கே இருந்தால் ஆத்திரம்தான் பொங்கும். ஏற்

கெனவே என்னை வைத்யன் உப்பைக் குறைக்கணும் என்கிறான்!''

மணி அங்கு விட்டு அகன்றதும் அவர் அங்கேயே உட்கார்ந்திருந்தார். நேரம் போனதே தெரியவில்லை.

## 2

தன் அறையை அடைந்தபோது தெரு விளக்குகள் அனைத்தும் அணைந்தாகி விட்டன. மரங்களின் மேல், மொட்டை மாடிகளிலிருந்து ஓட்டுக் கூரைகளின் மேல், ஒன்றிரண்டு ஓலைக் குடிசைகளின் மேல் பௌர்ணமி பால் ஒழுகிற்று. வானத்தில் பொதி பொதியாக வெண் பஞ்சு.

தேடிப் பிடித்த இடம்தான். தேடினாலும் இதுபோல் கிடைக்கணுமே! அதிர்ஷ்டம்தான். தெருவிலிருந்து நேரே மாடிக்குத் தனிவாசல்—வாடகை சற்று சூடுதான். ஆனால் அது தந்த சுயேச்சைக்குத் தகுதிதான். கீழே குடித்தனக் காரர்களின் தயவு வேண்டாம். கதவைத் திறக்க, மூட தனக்கும் தாக்ஷண்யமில்லை. எப்போ வேணுமானாலும் போகலாம். வரலாம். ஆனால் தான் இரவுவேட்டையாடும் பறவையல்ல என்று நினைத்துக் கொண்டபோது உதடுகள் தாமே லேசாய் முறுவலித்தன. என் தனிமை, நான் காக்கும் என் கற்பு.

மெர்குரி விளக்கைப் போட்டதும் அறை வெண்ணீயத்தில் மலர்ந்தது. சின்ன அறைதான். ஜன்னல் ஓரம் கயிற்றுக் கட்டிலில் இறுகச் சுருட்டிய படுக்கை (ஜமுக்காளம்,போர்வை, ஒரு தலையணை), அறையின் ஒரு மூலையில் மூடிபோட்ட மண் கூஜா, அதன் மேல் கவிழ்த்த கண்ணாடி தம்ளர். இன்னொரு மூலையில் முக்காலிமேல்

மின்சார அடுப்பு. அலமாரியில் ஒரு டபரா, ஒன்றிரண்டு தம்ளர்கள், ஒரு குட்டி காபி பில்டர், குட்டி பால் குக்கர், நாலைந்து டப்பாக்கள், கீழ்த்தட்டில் துணிக்குப் போடும் சோப்பு, உடம்பு தேய்த்துக் கொள்ளும் லைப்பாய்சோப்பு, க்ஷவரசெட், ஒரு அலுமினியக் குவளை, மாடியிலேயே பாத்ரூம் சௌகரியங்கள், உயரத் தொட்டி.

அலமாரியை ஒட்டி மேஜை நாற்காலி. கூஜாவிலிருந்து ஜலத்தைத் தம்ளரில் வடித்துக் குடித்துவிட்டு, கட்டிலில் படுக்கை மேல் சாய்ந்தாற்போல் உட்கார்ந்தார். பசி வயிற்றைறக்கிள்ளிற்று. ஆனால் எல்லாக்கடைகளும் 'பந்த்.' ஒரு பன், பொறை, பச்சை வாழைப் பழத்துக்குக் கூட வழியில்லே. வெறும் வயிறு இரைந்தது. சுருக்கப் புண்ணாகி விடுகிறது; தூக்கத்தை வேறு கெடுத்தது.

''தர்மராஜனா? யமத்தீனிக்கு மறுபெயர்னா?'' என்று யாரும் வியந்தது ஒரு காலம் உண்டு. ''அந்தப் பாம்பு வயிற்றில் எப்படி 'பேக்' பண்றானோ?''

யார் அழைத்தாலும், எப்போ வேணுமானாலும், எத்தனை தரமானாலும் வயிறு தயார்.

பெற்றோர் இருவரையும் இழந்து விட்டாலே, அந்த அகதி உணர்வு ரத்தத்தில் தோய்ந்து போய் எல்லா ஆத்திரங்களுக்கும் காரணமாக, வாழ்க்கையின் அடிப் படைத் தத்துவமாக அமைந்து விடுமோ?

சர்வம் கபளீகரம்:

குண்டோதரப் பசி:

பஹாசுரம்:

வயிற்றுப் பசி மட்டுமல்ல, என்னென்னவோ பசிகள்! எல்லாவற்றையும் விழுங்கிவிட்டு இலையுதிர்ந்து கழித்த தனி மரமாய் நிற்கிறேன்; என் தனிமையை அடைகாக் கிறேன். இந்த உடம்பு விஷயத்தில் பெரியப்பா ஒரு அசகாய சூரன். நாக்கைக் கட்டி, வயிற்றைக் கட்டி...

உடம்பில் ஆயிரம் கோளாறு—சர்க்கரை, இரத்தக் கொதிப்பு, மூத்திரக்கட்டு, மூலம், சின்ன வயதில் இளம் பிள்ளை வாதத்தில் வலது கால் திரும்பி விட்டது. இதே ரீதியில் கத்திமேல் நடந்தே மனிதன் முழு ஆயுசும் இருந்திருக்கிறார் என்பதைச் சிந்திக்கையில், மனித சாதனைக்கு அத்தாக்ஷியாக விளங்கியிருக்கிறார். சாவுக் கடுதாசு எட்டு தபால் முத்திரைகளைத் தாங்கிக் கொண்டு என்னைத்தேடி அடைவதற்குள் முதல் மாஸிகம் ஆகியிருக்கும். ஆளே போய்விட்ட பின் இருப்பவரைக் கட்டியழுவதும் இருப்பவர் நடத்துவதும் நாடகம்தானே! அதுவும் மணி... மூணு மாசத்துக்குப் பின் பெரியம்மாவும் காலமாகி விட்டாள். கணக்கே பைசல். நான் போகாததைச் சரியென்று சாதிக்கவில்லை. பெரியப்பா இருந்தாலே அப்படித் தான் சொல்லியிருப்பார். 'என்னடா தருமு, நீ எதை வந்து தடுக்கப்போறே?'ன்னு. மனிதன் அப்படிப்பட்டவர். உடம்பில் வாழவில்லை. திட சித்தத்துள் வாழ்ந்தார். வாழ்ந்து காட்டினார்.

ஆகாரத்தில் உட்கார்ந்தால் தப்பு, நின்றால் அபராதம், திரும்பினால் தண்டனை. வயிற்றுக்கு நிரம்பவும், நாக்குக்கு ருசி பார்க்கவும் மறந்தே போயிருக்கும். நாக்குக்குப் பேச்சு ஒண்ணுதான் மிச்சம். அதையும் அடக்கி விட்டார். லேசாய் மணிக் கணக்கில் கிழக்கைப் பார்த்துக் கொண்டு அசைவற்று அப்படி வேறு யாரால் உட்கார்ந்திருக்க முடியும்? அப்படியெல்லாம் யிருக்கணும் என்று எனக்கும் ஆசைதான். ஆனால் எல்லாருக்கும் முடியற காரியமா?

அப்போது என்னத்தை நினைத்துக் கொண்டிருப்பார்? தன்னையே தின்று கொண்டிருந்தாரா?

மிச்சப் போதுக்கு எழுதிக் கொண்டிருப்பார் தேவநாகரி. நோட்புக் நோட்புக்காய்க் குவித்துக் கொண்டிருந்தார் ஒன்றிரண்டாவது ஞாபகார்த்தத்துக்கு... மணியிடம்?...ஊஹூம். ஆத்திரம் பிடிச்சவன், போகி

கொளுத்தியிருப்பான். பெரியப்பா என் மேல் கனிவா யிருந்தது அவனுக்கு எப்பவுமே ஆகாது. தாய் தகப்பனில் லாதவன். தருமச் சோறு தர்மராஜன். எதிர்த்துப் பேச எனக்கு வாயேது?

கோவில் பூஜை தவிர, வீட்டில் சின்ன மர விமானத் தில் ராஜ ராஜேஸ்வரி ப்ரதிஷ்டை, நவராத்ரி தோறும் அமர்க்களப்படும். எப்போது பார்த்தாலும் அவள் மேல் ஏன் இந்த வேட்கை? உனக்காச்சு எனக்காச்சு பலப் பரீக்ஷையா? இல்லை, உன்னை விட்டால் வேறேது கதியென்று சரணாகதியா?

கடலில் துள்ளி யெழுந்து அதிலேயே விழும் மீன் போல், அந்த அகண்ட மோனத்தில் அவ்வப்போது எழும் பேச்சுக்கள் ப்ரஸாதம் போல் காத்திருந்தவர்கள் அதிர்ஷ்டம்.

மோனத்தில் சோதனை நடத்த எவ்வளவோ இருக்கு. வெறும் பேச்சை அடக்குவது மட்டும் அல்ல. இன்னும் என்னவோ இருக்கு. அந்த நிலையில் அந்த உலகமே தனி

ஆனால் பெரியப்பா ஏதோ ஒரு கட்டத்தில்தான் இருந்திருக்கிறார். சந்தேகமேயில்லை. அத்தனை வியாதி கள் படுத்துகையில் ஏதோ ஒன்றின் காரணியாக ரத்து ஆகாமல், உசிரை உடம்போடு பிடித்து வைத்துக் கொண்டிருந்ததே ஒரு அமானுஷ்ய வித்தையல்லவா?

ஒரு நள்ளிரவு. பக்கத்தில் தூங்கிக் கொண்டிருப் பவனைத் தட்டி எழுப்பி, 'தருமு, யாருக்காகவும் யாரும் காத்திருப்பதில் அர்த்தமில்லை. உண்மையில் யாருக்காக வும் யாரும் காத்திருக்கவில்லை. ஆகையால்' யாருக்காக வும் யாரும் காத்திருக்க வேண்டாம்—'

காத்திருந்தேன்.

கை விரித்தார். ''நீ வந்த வேலையைப் பார்.''

''என் வேலை என்ன பெரியப்பா?''

''உன் பிரக்ஞை.''

''அப்டின்னா?''

''நீயே கண்டு பிடித்துக்கொள்.''

திரும்பிப் படுத்துக் கொண்டு விட்டார்.

என்னைப் போவென்று சொல்கிற அவர் முறை அது போலும். இனி இங்கிருந்து உனக்காக வேண்டியது ஒன்றுமில்லை என்று அவர் விளக்கும் முறை அது.

அடுத்த நாளே கிளம்பி விட்டேன். இன்னும் என் ப்ரக்ஞையைத் தேடிக் கொண்டிருக்கிறேன்.

ஊர்களில் திரிந்த அந்த நாட்களில், வாழ்க்கையின் மேடு பள்ளங்களுக்கேற்ப, மரத்தடியில் வானத்தைப் பார்த்துக்கொண்டோ, கட்டிலில் விட்டத்தைப் பார்த்துக் கொண்டோ, குருட்டு யோசனை செய்கையில் தோன்றும், பெரியப்பா என்ன நாடக பாணியில் பேசினாரே, செயற்கையா? என்ன அர்த்தம்? என்ன மனசில் வெச்சிண்டிருந்தார்?

'இப்போ கொஞ்சங் கொஞ்சம் ஏதோ வெளிச்சம். அப்படி ஒண்ணும் பளிச்சுனு இல்லே—எந்தத் தர்க்கமும்—அது தர்க்கமோ, குதர்க்கமோ; ரெண்டும் ஒண்ணில் ஒண்ணு குமைஞ்சு ஒண்ணுதானே! அதனுடைய உச்சத்தில், அதி நுட்ப கதியில், எனக்கு நானே சட்டம், நானே தண்டனை, நானே நியாயம்.'

நீண்ட பெருமூச்சு தன்னிடமிருந்து கிளம்புவதை உணர்ந்தார். தொப்புளிலிருந்து புறப்பட்டு, உடலின் அத்தனை நரம்புகளிலிருந்து அவைகளின் அசதியை உருவிக் கொண்டு புகைப்போக்கி வழி வெளிப் போவது போல், நாசி வழி, பிராணனில்ருந்து ஒரு சட்டை கழன்று உதிர்ந்தாற்போல்...

இதென்ன வாழ்க்கையின் அலுப்பா? உயிரின் விசுவ

ரூபம் கண்ட திகைப்பா? தேன் குருவி போல், சிட்டுச் சிறகுகளை அடித்துக் கொண்டு அந்தரத்தில் ஸ்தம்பம் எத்தனை நாழி செய்ய முடியும்? தலை சுத்தறது.

எண்ணம் இந்தக் கட்டத்தை அடைந்ததும், ஏதோ நினைப்பு வந்தது. கட்டிலடியில் பெட்டியை இழுத்துப் புல்லாங்குழலை யெடுத்து வாசிக்க ஆரம்பித்தார்.

எந்தக் குருவிடம் என்ன ஒழுங்காய்ப் பாடம்?

என்றோ எங்கோ, ஒரு சப்பாத்திப் புதரடியில், மறந்தோ துறந்தோ எந்தப் பிடாரனோ விட்டுப் போனதைக் கண்டெடுத்து இப்போ எத்தனை வருஷங்கள் ஆகியிருக்கும்!

எனக்கே பண்டங்களைப். பத்திரமாய் வைத்துக் கொள்ளும் சுபாவம் உண்டு.

நான் காரணங்கள் காட்டி ஒரு சித்தாந்தமே விருத்தி செய்வேன்.

பண்டங்கள் மனிதனால் உருவாக்கப்பட்டாலும், பண்டங்கள், மனிதன் இரண்டுமே அநித்யமானாலும் பண்டங்கள் மனிதனை விட நித்யம்.

நான் வந்து எடுக்கும் முன் சப்பாத்திப் புதரண்டை எத்தனை நாள் கிடந்ததோ? அதன் இசை அதனில் உறங்கிக் கொண்டு ! கற்பு தன்னைக் காத்துக் கொள்ளும் வழி யார் கண்ணிலும் படாமல் இருப்பதே. தனிமை — எதிலும் ஒட்டாத தனிமை, தனித் தன்மை, ஒரு எட்டாத சொத்துதான். ஜடப் பொருள் என்பதால் உறவு போய் விடுமா என்ன? பழகிப் பழகி இடையே ஒரு ஊமை அந்யோன்யம் வளர்ந்து எனக்கு மட்டும் உயிர் கொள் வதை உணர்வதில் தெரியும் மகிழ்ச்சியின் அருமை, அறி யத் தெரிந்தவர்களுக்குத்தான் புரியும். இல்லாட்டா ஒரு

புதுக்குழல் இப்படிப் பேசுமா? உனக்காக நான், எனக்காக நீ.

ஸத்ஸகரி த்ருதன் கதக நிதமாகரி.

பதஸா கபதிஸா ரிகபதஸா ஸரிகபதஸா.

இதென்ன ராகம்? மீண்டும் இதே ஸ்வர ஸ்தானங்களை எனக்கு வாசிக்க வருமோ?

மறுபடியும் ஒரு தம்ளர் தண்ணீர் முழுங்கு.

ஜிப்பாவைக் கழற்றி எறிந்தார்.

தோல் சுருக்கத்தால் இறுக்கத்தில், விலா எலும்புகள் எண்ணிக் கொள் என்று பிதுங்க ஆரம்பித்து விட்டன.

கட்டிலில் படுக்கையை விரித்துப் படுத்து விட்டால் தூக்கம் வந்து விடுகிறதா? என்ன வேணுமானாலும் ஆகட்டும். இன்று மாத்திரை போட்டுக் கொள்ளக் கூடாது. தூக்க மாத்திரைப் பழக்கத்திலிருந்து என்னால் முற்றிலும் விடுபட முடியுமோ? உத்யோகம் பண்ணுகிற நாளில் ஒரு டாக்டர் சினேகிதன் இந்தப் புண்யத்தைக் கட்டிக் கொண்டான். கெடுதல் இல்லை, தர்மராஜன் பின் கோளாறுகள் கிடையாது. அவன் சொல்லிட்டுப் போயிட்டான். இப்போ அது இல்லாமல் இருக்க முடியலே. மாத்திரையை விழுங்கிவிட்டு மூர்ச்சையில் ஆழ்வது, அதுவும் ஒரு தூக்கமா? இயற்கையான தூக்கத்தில் குளித்தெழுந்த ஒரு புத்தொளி இதில் எங்கே இருக்கு? ஒரு தன்மானம் கெட்ட பிழைப்புத்தான்!

வேலையில்லாமல் இருந்தால் பொழுது போகாமல் இருப்பது மட்டுமல்ல, உடம்பே வசத்தில் இல்லை. வயிற்றில் ஏதோ ஒரு இரைச்சல். உடம்பை முறித்துப் போட்ட மாதிரி ஒரு வலி. என்னவோ நினைத்தேன். உழைப்பின் பிடுங்கல் இல்லாமல் இனி ஹாய்யா படுத்துண்டேயிருக்க வேண்டியதுதான். ஆனால் நாம் ஒன்று நினைக்க...

தூக்கம் என்பதே உடலின் ஓய்வுக்கா? மனதின் மறதிக்கா? எதை மறப்பேன், எதிலிருந்து ஓய்வு பெறுவேன்?

இன்று பேப்பரை வாங்கிச் சுருட்டி, தொடையில் அடித்துக் கொண்டு வந்தேனேயொழிய இன்னும் பார்க் கலையே! அரசியலில் அனைத்தும் உள்ள ஊழல் புதுமை யுமில்லை. படிக்கவும் பிடிக்கல்லே. விளம்பரங்கள் பார்ப் போமா? — ஆ, இதோ, இது என்ன?

தேவை — வீட்டோடு தங்கியிருக்கும் சமையல்காரர். ஆணோ, பெண்ணோ அவசரமாகத் தேவை. சைவ பதார்த்தங்கள், ருசியாகத் தித்திப்பு, கார டிபன், சாப் பாடு செய்யத் தெரிந்திருக்க வேண்டும். ஸிந்தி சமையல் என்று அவசியமில்லை. தமிழர் சமையல் தெரிந்திருந்தால் கூடப்போதும். அவசரமாகத் தொடர்பு:

மானக்சந்த் ஸர்க்கார்
37, பெல்ஸ் ரோடு,
சேப்பாக்கம், சென்னை - 5.

பயலுக்கு நாக்கு ரொம்ப செத்துப் போயிருக்கும் போலிருக்கே! விளம்பரமும் வயிற்றுப் பசியை நினைவு படுத்தணுமா? பேப்பரைச் சுருட்டி மூலையில் அடித்தார். இன்று தூக்க மாத்திரை யில்லாமல் முடியாதே என்று போட்டுக் கொண்டு ஒரு தம்ளர் தண்ணி.

பாதிக் கண் செருகலில், கண்ணுள் ஒரு கை:

அபய ஹஸ்தம்.

நடன முத்திரை.

உள்ளங்கையில் மருதாணியில் சக்கரம் எழுதி அதன் நடுவே ஒரு முத்து அவர் முகத்தில் ஒளி வீசிற்று. படுக் கையில் புரண்டார். முயன்றும் இமைகளைத் திறக்க முடியவில்லை.

"மது ! மது !! பாவி!!!" இமைகளை இறுக மூடி அத் தோற்றத்தைக் கசக்க முயன்றார்.

கசங்கிப் போயிற்று. இதழ் இதழாய்ப் பிய்ந்து போயிற்று.

இப்போது இமைகளைத் திறக்க முடிந்தது.

ஆனால் திறக்கவில்லை.

விழியோரங்கள் நனைந்திருந்தன.

# 3

எழுப்பி விட்டதே புகைப்போக்கி வழியாகத் தோசை வாசனைதான். நாசி வழி மூளைக்குச் சென்று மூளை யிலிருந்து விழிப்புக்குச் சேதி தந்தி பறந்தது: "எழுந்திரு எழுந்திரு. வெயிலே வந்தாச்சு !"

விடி வேளையின் அசர்த்தல். விழிப்பு வந்ததும் கண் ணைத் திறவாமல் உடற் சோம்பல் விழிப்போடு ஊட லாடும் ஸ்வாரஸ்யமான கட்டம். கொஞ்ச நேரம் அனு பவிக்கலாம், பிறகு சரிப்படாது. ஆனால் அனுபவிக்கும் வரை வெகு சுகம்.

சொய்ஞ்ஞ்...

கல்லில் மாவு விழுந்து புதுசாய்த் தோசை எழுதி யாறது. கமகம...அப்பப்பா...நாக்கு ஊறுகிறது. வயி றோடு நாக்கும் சேர்ந்து கொண்டு விட்டது. நெய்யில் மொறுமொறுக்கிறது.

கீழே, காலைப் பலகாரப் பழக்கம். நாடார். சமையல் எப்படியோ? தோசைக்கும் இட்டிலிக்கும் திருநெல்வேலி

ஜில்லாவை மிஞ்சித்தான். தோசைக்குத் தொட்டுக்க இல்லாமலே தின்னலாம்.

நாடார் பாத்திரக் கடை வைத்திருக்கிறார். ஒரு நாள், வீதியில் நடந்து கொண்டிருக்கையிலேயே சர்க்கரைக்கு ஸ்பூனில்லை... ஞாபகம் வந்து, அந்த நிமிஷத்தில் எதிர்ப்பட்ட எவர்ஸில்வர் கடையுள் நுழைந்தால் கல்லாவில் நாடார் உட்கார்ந்திருக்கிறார், முக்குருணிப் பிள்ளையார் மாதிரி. உடனே கண்ணில் அடையாளம் பளிச்சிட்டது. தேங்காய் உடைத்தாற்போல் வெள்ளைச் சிரிப்பு. எழுந்து கை கூப்புகிறார். கண்ணில் ஒரு மருட்சி.

''ஐயா ! வாங்க வாங்க, இங்கே குந்துங்க, இதோ பக்கத்துலே—''

உள்ளே போனதும் வெட்கமாப் போயிடுத்து. உள்ளே நெரியற அந்தக் கூட்டமும்...ஓடியாடற சிப்பந்திகளும் !...சரக்கே பெரிய ரெண்டுக்குக் குறைவில்லை. இங்கே ஒரு ஸ்பூன் வாங்க வந்தேன் என்று எப்படிச் சொல்ல? நாடார் பின்வாங்க விடவில்லை.

''ஏலே பையா, யாரங்கே, காபி ஒண்ணு வாங்கி வாடா.''

''பாக்கிமுத்து, சாமி நம்ம வீட்டு மாடியிலே குடியிருக்காஹ.'' இளிக்கிறான், வணங்குகிறான். எல்லோரும் ஒரே ஊர், ஒரே ஜாடை. உறவு ஜாடையோ என்னவோ தெரியாது. ஆனால் ஒரே ஊர் ஜாடை. அந்த ஸ்பூனுக்கு, தனி சொட சொடாப் பேப்பரில் சுத்தி, தனி பில், துணைக்கு ஒரு பெரிய ஷீட் காலெண்டர். எழுந்து நின்று இரு கரங்களாலும் சமர்ப்பணம்.

''ஐயா! வாங்க. ஐயா வந்துக்கிட்டே இருக்கணும். இத்தனை நாளைக்கு இன்னிக்குத்தான் கடையை மிதிச்சிருக்கீங்க-'' மறுபடியும் கண்களில் ஏதோ ஸான்னித்ய பயம்.

ஏன்? — "ஐயாவோடு சாவகாசமா நான் பேச ஒரு நாள் இடங் கொடுக்கணும்."

அது போய் நாளாச்சு. நாடார் கேட்ட வரம் பலிக்க வாய்ப்பில்லை. மறந்தும் போச்சு. நானும், இவ ரும் பேச என்ன இருக்கு?

பல் விளக்கி முடிவதற்குள் நறுமண ஆஹுதியில் ஜட ராக்னி ஜ்வாலை கண்டுவிட்டது. வைராக்யமும் சேர்ந்து ஆஹுதி. அறியாமலா அந்த நாளிலேயே சொன்னார் கள் : பசி வந்திட...

புகைப்போக்கி வழியாக : "அம்மா ! அம்மா!"

கப்சிப். மறுபடியும், "யாரும் கீழே யில்லையா? யாராயிருந்தாலும் சரி, அம்மா !—"

அடுப்படியிலிருந்து யாரோ ஓடிப்போய், யாரோ அடுப்படிக்கு ஓடிவரும் சப்தம். கனத்த அடிகள். கீழே யிருந்து பக்தியுடன், பயத்துடன் : "ஐயா ! அளைச் சீங்களா?"

"நாடார், தோசை கமாளிக்குது. நான் ராத்ரி சாப் பிடல்லே !"

"ஐயா வந்தேனுங்க, இதோ ஒரு நிமிஷம்."

அறையுள் போய், கட்டிலில் உட்கார்ந்து கொண் டார். தீனி இதோ வருகிறதென்று தெரிந்ததும் உலைக்கு மூடி கழன்றாற்போல், பசி வாய் திறந்து கொண்டது.

மொட்டை மாடிவாசலில் நாடார் உதயமாகிறார் காலையின் இள வெயிலில் நாடாரின் கறுப்பு, எண்ணெய் பூசினாற் போல் பளபளக்கிறது. அவர் கையில் விபூதி மடல். பின்னால் ஆச்சி, துல்லியமான வெள்ளைத் துணி போட்டு மூடிய தட்டுடன்.

விபூதி மடலைக் கையில் கொடுத்துவிட்டு, ஆச்சி ஏனத்தை மேசை மீது வைத்துவிட்டு, இருவரும் எனக்கு

ஆச்சரியம் தெளிய நேரம் வைக்கவில்லை — தடாலென்று காலில் விழுகிறார்கள். நாடார் முதுகு யானை முகம் போல் - நெற்றி மேடு மத்தகத்தோடு ஒட்டும் பிளவு — தோன்றுகிறது. உற்சவத்துக்கு முன்னால் போகும் இரு பூதங்கள். பதறி யெழுகிறார்.

''என்ன நாடார் இது?''

''ஐயா! திருநீறு இடுங்க.''

அவருக்கு இடுகிறார்.

''அவளுக்கும் இடுங்க !''

கை பதறுகிறது. பழக்கமில்லை.

''இடுங்க, எங்கள் பழக்கம்.''

இடுகிறேன்.

குழை கனத்தில் ஆச்சிக்குக் காது அறுந்துவிடுமோ?

''நாடார், நான் தோசை கேட்டேன். வாஸ்தவம். பூசை கேட்கவில்லை.''

ஏதோ நினைப்பு வந்து நாடார் கன்னத்தில் போட்டுக் கொள்கிறார். சரி, சரி. நான் தப்புப் பண்ணினேன். உறவு கொண்டாடினேன். மாட்டிக் கொண்டேன்.

ஆச்சி துணியை எடுக்கிறாள். எவர்ஸில்வர் புத்தம் புதிது. பாம்பே மீல்ஸ் குழித்தட்டு. ஒரு குழியில் சட்னி மேல் நெய் பளபளக்கிறது. ஒரு எவர்ஸில்வர் பேலா. புத்தம் புதிதில். உருளைக்கிழங்கு, கத்தரி, சௌசௌ எல்லாம் சேர்த்துத் தளர ஒரு கூட்டு. தட்டில் நடு இடத்தை நாலைந்து தோசை அளவாய் அடைத்துக் கொண்டு நடுவில் புள்ளி விழுந்து, மெத்து மெத்தென வெளுப்பாக...

''ஐயா! சாப்பிடுங்க, காப்பி தயாராவுது. ஏதாச்சும் வேணும்னா சிமணியிலே கை தட்டுங்க...''

நாடாரும் அவளும் அவசரமாய்க் கீழே யிறங்கிப் போகிறார்கள். ஏனோ இந்தப் பயம்? ஒரு பக்கம் வேடிக்கையாக இருக்கிறது. ஒரு பக்கம் வியப்பாக இருக்கிறது. ரொம்ப வியப்பாக. இந்தக் காலத்தில் மனிதனுக்கு மனிதன் இவ்வளவு பக்தி சிரத்தை உண்டா?

தோசையை விண்டால் ஒவ்வொரு விள்ளலும் வெட்கித் துவள்கிறது. வாயில் போட்டுக் கொண்டதும் காணோம் என்பதுதான் தெரிகிறது; கடித்தேன் என்பது நினைவில்லை. நெஞ்சு முள்ளில் லேசாகத் தடுக்கி உள்ளிறங்குகையில் ஒரு தளிரு தெரிகிறது.

சட்னி பயந்த மாதிரிக் காரமாக இல்லை.

கூட்டு—ஹூம், இங்கு வந்து இவர்களும் நன்றாகச் செய்யக் கற்றுக் கொண்டு விட்டார்கள்.

காபிதான் வாயில் வைக்க வழங்கவில்லை. காபி சூத்ரம் இன்னும் பிராம்மணன் கையில்தான் இருக்கிறது. அதற்குக் குருக்கள் ஜாதி, நாங்கள் கூட லாயக்கில்லை. கும்பகோணம், கோயமுத்தூர் டிகிரி—நாக்கை அறுத்துப் போடு. நேற்றிரவு நினைத்ததெல்லாம் நேற்றோடு போச்சாக்கும்.

பசி வந்திட...

பசி அடங்கியதும் உலகம் எவ்வளவு ரம்யமாகி விட்டது! இன்று ஆனால் தன்னிலேயே வேளை ரமணீயமாகத்தானிருக்கிறது! வெண்மேகம் கோன் ஐஸ் மாதிரி வானத்தில் பொங்கி வழிகிறது. புகைப்புலன் நீலம்கூட ஒரு தினுசாய்க் கண்களைக் குளுமையில் குளிப்பாட்டும் நீலம். நடந்து கொண்டே யிருக்கிறேன். வேலைக்குச் செல்வோரும் பள்ளிக்குச் செல்வோரும்...காலை 'ஷிப்டின்' சுறுசுறுப்பு தனியாய்த் தெரிகிறது.

ஒரு பஸ்ஸில் ஏறுகிறேன். எங்கே போகிறேன், என்ன

செய்யணும் என்பது தெரியாமலே ஏறுவதில் ஒரு குஷி

ஆ! இவ்வுலகம் எவ்வளவு அழகாயிருக்கிறது!

ரூட் வளைந்து வளைந்து எங்கெங்கோ செல்கிறது. இன்றுதான் இந்த உலகத்தை ஸ்பெஷலாக அனுபவிக்கிறேனா?

பாங்க் ஆஃப் பரோடா, ஒரு பெரிய பலகை, ஒரு சந்து திருப்பத்தில் பஸ்ஸோடு தானும் சேர்ந்து பார்வையில் சொகுஸாக வளைகிறது. ஒரு கணக்கு இங்கு ஆரம்பித்தால் என்ன? இன்று மனம் போன போக்கெல்லாம் போவது என் விதியென்று கொண்டால் என்ன? அப்படியிருந்தால் தானே அப்படித் தோன்றும். ''ஸ்டாபிங் ஹோல்ட் ஆன்!'' கண்டக்டர் விசிலில் கற்கண்டு தெறிக்கின்றது.

இறங்கிப் பின்னோக்கி வங்கிக்கு நடக்கிறார்.

கௌன்டர்களே மாறிவிட்டன. முன்னெல்லாம் கௌன்டர் என்றால் உள்ளிருப்பவன் இரும்புக் கிராதிக்குப் பின் சிறைக் கைதி போல் காட்சி அளிப்பான். இப்போ கௌன்டர் தழைந்து வெளியிலிருப்பவனும், உள்ளிருப்பவனும் சகஜமாகப் பேசி வங்கியைப் புரிந்து கொள்கிறார்களாம்.

இது மரியாதை வாரம். இது உங்கள் வங்கி. என்ன வேணும். கேளுங்கள். செய்யக் காத்திருக்கிறோம்.

'ஹலோ மிஸ்—மன்னிச்சிக்கோங்க. நான்...'

ராக்ஷதப் புத்தகத்திலிருந்து அவள் தலை நிமிர்கிறாள்.

மண்டையுள் மணிகள் அடிக்கின்றன. வெள்ளி மணிகள் நினைவில் சிறபக் கதவுகள் திறக்கின்றன. பெரிய ஜாலர் ஒன்றுடனொன்று அறைகின்றது.

அவள் கண்களிலும் குழப்பம், ஆச்சரியம் அடையாளம்—எழுந்து நின்று விட்டாள்.

''கோமதி!''

''ஸார்! தர்மராஜன் ஸார்!''

''ரொம்ப சரி. நானே தான்!''

''ஸார், உள்ளே வாங்கோளேன். ஸார், எத்தனை நாளாச்சு!''

சுழல்கள், பிம்பங்கள், கல்லெறிகள், கலைவுகள், மீண்டும் பிம்பங்கள், கால்வாரிகள், கொடிச் சுற்றல்கள். நேற்று கமலாம்பிகை ராப்பசி, இன்று நிறைவு, மனோகர வெய்யில், கண்ணில் கலிக்கம் எல்லாமே இந்தச் சந்திப்பின் விதியை நிறைவேற்றத் தன்னை உந்திச் செலுத்திய படிப்படியான கூம்பல்கள். கோபுரக் கட்டிடம் போல் இது ஏன் இப்படி நேர்கிறது? அது தெரிந்தால் பெரியப்பாவுக்கு முன் கட்டத்துக்கு என் காய் நகர்ந்திருக்குமே! நகர்த்துபவன் எவன்?

ஒருவரை யொருவர் பார்த்துக் கொண்டு மனம் நெகிழ்ந்து மௌனமாய் நின்றனர். கௌண்டருக்கு உள்ளும் வெளியிலும் நாலு பேர் அவர்கள் நிலை கண்டு முறுவலிப்பது கூட அவர்களுக்குத் தெரியவில்லை.

''சௌக்யமாயிருக்கையா, கோமதி?''

''ஆஹா! நீங்கள்?''

''பார்த்தால் எப்படித் தோணறது?''

''அப்படியேதான் இருக்கீங்க ஸார்!''

''நீயும் இன்னும் கோண வகிடை விடவில்லை!''

''விமலா வகிடு ஸார்!'' இருவரும் சிரித்தனர். சட்டென எழுந்தாள். ''வாங்கோ ஸார், மானேஜருக்குப் பரிச்சயம் பண்ணி விடுகிறேன்.''

''இந்தச் சம்பிரதாயமெல்லாம் ஏதுக்கம்மா? வேண்டாம்.'' அவர் குரலில் சலிப்புத் தொனித்தது.

''உங்களுக்கு வேண்டாட்டாலும் எனக்குப் பெருமை ஸார், வாங்கோ ஸார்—''

கண்ணாடி அறையுள் மானேஜர் உட்கார்ந்திருந்தார.

மானேஜர் முகம் மலர்கிறார். எதிர் நாற்காலியைக் காட்டுகிறார்.

''ஸார், என்னுடைய முன்னாள் அதிகாரி.''

''ஆகவே?'' பட்டனை அழுத்துகிறார். ''பையா! ஒரு ஃபான்டா கொண்டு வா!''

''இல்லை, வேண்டாம். காலையில் அதெல்லாம் நான் சாப்பிடுவதில்லை.''

''அப்படின்னா என்ன சாப்பிடுவீர்கள்? காபி? ஹார்லிக்ஸ்?''

''எதுவும் வேண்டாம், மன்னிச்சிடுங்க—''

''ஸார், நான் வேலை கத்துக்கிட்டதே இவர்கிட்ட தான் ஸார்—''

''நான் நம்பறேன். கோமதி கெட்டிக்காரப் பெண். நீங்கள் என்னவா யிருந்தீர்கள்?''

அது ஒரு தனியார் வங்கி-இந்தப் படாடோபம் அமர்க்களத்திடையில், அதன் பேரைச் சொல்லவே கூச்சமா யிருந்தது. கோமதி பைத்தியம்! என்னை ஏன் இப்படி யெல்லாம் இழுத்து விடறாள்? உண்மையில் பெருங் கோபமாக வரவழைத்துப் பார்த்தாலும் அவள் மேல் பார்வை சாய்ந்தவுடனேயே பிசுபிசுத்துப் போய்விடறது.

பிய்த்துப் பிடுங்கிற்று. அவசரமாக எழுந்தார். ''இனியும் உங்கள் நேரத்தை எடுத்துக் கொள்ள விரும்ப வில்லை. ஒரு தயவு. கோமதிக்கு நீங்கள் இரண்டு மணி நேர பர்மிஷன் தர முடியுமா? எனக்குக் கேட்க உரிமை கிடையாது. என்னவோ வாயில் வந்துவிட்டது. என்னைப் பொறுத்துக் கொள்ளுங்கள்.''

மானேஜரின் மோனச் சிரிப்பில் புளிப்பு தெரிந்தது. எந்த அதிகாரிக்கு, சிப்பந்திக்கு லீவு—அதுவும் மூன்றாம் மனிதன் கேட்டால் - பிடிக்கும்?

''ஆமாம்! அவள் அப்படி விரும்பினால்...'' என்று அவளைப் பார்த்து முனகினார்.

''நீங்கள் தயவு வைத்தால், நாங்கள் பல வருஷங்களுக்குப் பின் இப்பத்தான் அகஸ்மாத்தாய்ச் சந்திக்கிறோம்.''

முன்னால் அவர், பின்னால் அவள் தன் பையைத் தோளில் மாட்டிக் கொண்டு 'பேங்கின்' ஹாலை விட்டு வேகமாக வெளியேறுகையில், ஒரு சிலர் அவர்களை வியப்புடன் நோக்கினர். சில பார்வை ஏளனம். இத்தனை கவனத்துக்கு ஆளாவதே ரொம்பவும் கூச்சமாயிருந்தது. ஆனால் என்ன செய்ய முடிகிறது?

இருவரும் பேசக்கூட இல்லை. எங்கே போகிறோம் என்று கூடத் தெரியாமல் நடந்து கொண்டிருந்தனர்.

ஒரு குளிர்சாதன ஓட்டல் தென்பட்டது.

''காபி சாப்பிடுவோமா, ஸார்?''

''ஆஹா!''

குடும்பம், ஒரு தடுப்பு அறைக்குள் நுழைந்து அமர்ந்தனர். வேறு யாருமில்லை. அவர்கள் இருவர் மட்டும்தான்.

ஸர்வர் இருவர் எதிரிலும் வைத்துவிட்டுச் சென்ற காபியிலிருந்து ஆவி நறுமணத்துடன் கிளம்பிற்று.

''கோமதி, சௌக்யமா யிருக்கயா?''

புன்முறுவலுடன் தலையை ஆட்டினாள்.

''கோமதி! உன்னைப் பார்த்துப் பத்து வருடங்கள் ஆகியிருக்குமா?''

''ஏன், மேலேயே ஆகியிருக்கும். நீங்கள் பாங்கை விட்டுப்போய் இரண்டு வருஷங்களுக்கு அப்புறம் எனக்குக்

கல்யாணம். அதற்கு இரண்டு வருஷங் கழித்து ப்ரஸாந்த் பிறந்தான். ஆகவே பன்னிரண்டு வருஷங்கள்—''

ஆனால் கழுத்தில் சரடு மட்டும்தான் தொங்கிற்று. வேறு நகைகள் காணோம். இப்போது கனத்த நகைகள் ஃபாஷன் இல்லை. நாசுக்கா மெல்லியதாய் செயின்—

''உன் எசமானர் என்ன செய்கிறார்?''

''இன்ஷுரன்ஸில் இருக்கிறார் — ஸார், இன்னி ராத்திரி சாப்பிட வாங்கோளேன்! அவரையும் சந்திக்கலாம். அவகாசமாய்ப் பேசலாம்.''

யோசனை. ''விலாசம் கொடேன்.''

தன் பையில் ஏதோ கடிதாசைத் தேடி—ஏதோ ரொக்கச் சீட்டு பின்புறத்தில் எழுதித் தந்தாள்.

''ஸார், உங்களுக்கு என்ன பிடிக்கும்?''

''உனக்குத்தான் தெரியுமே! வத்தல் குழம்பு, சுட்ட அப்பளம்.''

இருவரும் சிரித்தனர்.

''சார், உங்கள் பல்லை நம்ப முடியவில்லையே! பொய்ப் பல் மாதிரி அவ்வளவு வரிசையா, முத்தா, வெள்ளையா—''

''என்னை அவமானப் படுத்தாதே—'' பல்லை விரலால் இறுகப் பிடித்து ஆட்டிக் காட்டினார்.

''எனக்கு அவ்வளவு தைரியம் வரல்லியே ஸார்''—முனகினாள். ''கடைவாய்ப் பல்லை எடுக்கணும் என்கிறான்.''

''இதெல்லாம் பரம்பரை வழி. ஆனால் என் மாதிரி எந்தக் காரணத்திலும் ஒட்டாத இரண்டுங் கெட்டானை வெச்சிண்டு எந்த ரூலும் பேச முடியாது.''

''நீங்கள் சொல்றது சரிதான். என் தகப்பனார்

அம்பது வயசிலேயே குதப்பு மாஸ்டர். பல் கட்டிக்க வசதியில்லை. என்ன சிரிக்கிறேள்?''

''ஒண்ணுமில்லை, பன்னிரண்டு வருஷங்களுக்குப்பின் சந்திச்சி பல்லைப் பத்திப் பேசத்தானா குளிர் சாதன ஒட்டல், இரண்டு மணி அனுமதி—கோமதி! உனக்கு எத்தனை குழந்தைகள்?''

''ஒரு பையன். ஒரு அபார்ஷன்—''

''திரும்பவும் வம்ச வழியா?''

அவள் கன்னத்தில் லேசாகச் செவ்வரி படர்ந்தது. தன்னைப் பார்த்துக் கொண்டாள். ''ஏன், தெரியறதா என்ன, அதுக்குள்ளேயா?''

''இல்லை. ஆனால் சில சமயங்களில் சம்பந்தமே யில்லாமல் எனக்கு இப்படித் தோணும். சரியான்னு கேட்டு, சரி பண்ணிப் பார்த்துக் கொள்வேன்.'' சட் டென்று நாக்கை நீட்டினார்.

''தெரியறதா?''

''மச்சம்.''

''அதான் சரி. நான் நாலிடங்களில் திரிஞ்சதில் ஒருத் தன் என்னவோ சொல்லிட்டான். நாக்கு மச்சம் சொன்ன தெல்லாம் பலிக்கும் என்று. இது மாதிரி விஷயங்களில் நம்பற மக்களுக்கு நம் நாட்டிலா குறைச்சல்? உடனே அவர்கள் கேள்விகளுக்குமா குறைச்சல்? நானும் பதிலுக்கு என்னத்தையோ உளறுவேன். இதனால் இதுவே ஒரு கெட்ட பழக்கமாப் போச்சு. நாக்கில் மச்சம். நாக்கை நீட்டிக் காட்டுவேன்.''

வாய் விட்டுச் சிரித்தாள்.

''ஸார்! மது என்ன பண்றாள், எங்கே யிருக்கா? மாமி சௌக்யமா?''

''யாருக்குத் தெரியும்?''

அவளுக்குத் தூக்கி வாரிப் போட்டது. ''அப்பிடின்னா?''.

அவர் தோள்கள் தூக்கித் தாழ்ந்தன. காத்திருந்தாள். பதில் வரவில்லை. வருவதாயில்லை.

''உங்கள் மூணு பேர் மாதிரி ஒரு ஜோடிபார்க்க முடியாது சார். எல்லாரும் சிவப்பு, எல்லாரும் அழகு.''

''மூணு பேர் ஒரு ஜோடியாக்கும்! இது புது கணிதம் ஆக்கும்!''

மறுபடியும் சிரிப்பு. பீங்கான் சிதர்கள். ஆனால் காபி கோப்பைகளும் சாஸர்களும்—ஒரு சாஸர் அதிகப்படி—அதில் பில்லுடன்—எதிரே பத்திரமாய்த் தானிருந்தன. இரண்டு பேருக்கும் சொந்த விஷயங்கள் எல்லைக்கப்பால். ஆனால் நெடு நாளைய இடைவேளைக்குப் பின், சந்திப்பின் உணர்ச்சிப் பிழம்பில், இந்த தவிப்பு பேசவும் விடமாட்டேன்கிறது, விட்டுப் பிரியவும் முடியவில்லை.

ஸர்வர் ஒரு முறை எட்டிப் பார்த்து விட்டுத் தலையை யிழுத்துக் கொண்டான். 'பில் கொடுத்து எத்தனை நேரமாச்சு? வெறும் காப்பிக்கா இத்தனை நேரம்? சாவு கிராக்கிங்க.'

''கோமதி, ஸர்வர் முறைக்கிறான்.''

''முறைக்கட்டும். ஸார். ஆத்துக்கு நிச்சயம் வருவேளா? வரணும்.''

புன்னகை புரிந்தார். ''உனக்கென்ன சந்தேகம்?''

''அதுக்கில்லே சார். இப்போ சொன்னால் எங்கே நம்பப் போகிறீர்கள்? இரண்டு மூணு நாளா உங்கள் முகம் சம்பந்தமில்லாத இடங்களில், வேளைகளில், உங்கள் முகம் மட்டும்—பட்டுப் போல் அந்த வெள்ளை கிராப்–அந்த மேட்டு நெற்றி—தோணும். அதனால் உங்களை இன்னிக்குப் பார்த்ததும் எனக்கு ஷாக்—''

''மறுபடியும் நாக்கை நீட்டவா? நான்தான் அந்த மந்திரவாதி.''

''விளையாடாதேங்கோ ஸார்...''

''ஓ. கே. பரஸ்பர ஈர்ப்பு. காந்த சக்தி.''

''கண்டிப்பா இருக்கணும். இருக்கு. திடீர்னு அலுத்துண்டு நீங்கள் வராமல் போயிட்டா—?''

''தோ பார். வாழ்க்கையில் எதுதான் நிச்சயம் இதோ இறங்கிப் போறேன். மேலே லாரி ஏறிடுத்து...''

காதைப் பொத்திக் கொண்டாள். ''வாயை மூடுங்கோ!'' சீறினாள்.

அந்தக் கோபத்தைக் கண்டு அவரே அடங்கிப் போனார். ''ஏன் கோமதி? என்ன விஷயம்?''

''எனக்கே தெரியல்லே. வருத்தம் தெரிவிக்கணுமா? ரொம்ப சீண்டறீங்க ஸார். அதுலே நீங்கள் கொஞ்சம் கூட மாறல்லே.''

''நீயும்தான் மாறவில்லை.''

''எப்படி?''

''உன் கோபம். உனக்கு ஞாபகம் இருக்கா? உனக்கு ஓவர் டைம் அனுமதிக்கல்லேன்னு ஏகத்தாறா முறைச்சயே?''

''முறைச்சதோடு சரி, நீங்கள் கடைசிவரை கொடுக்கல்லியே!''

''நீயா கேட்டே? உங்கள் தொழிற் சங்கத் தலைவரின் தூண்டுதல். ஓவர் டைம் செய்யாமலே ஓவர்டைம் கொடுக்கணும்னா அது என்ன நியாயம்? நீ மூணு நாள் என்னோடு பேசல்லே. நினைவிருக்கா?''

''அப்புறம் நானேதானே உங்களிடம் வலியப் பேசினேன். எனக்கு மனசு கேட்கல்லே சார்.''

"கடவுள் புண்ணியத்தில் நீயாவது மாறாமல் இருக்கையே. லுக்—" கைக் கெடிகாரத்தின் மீது கண மின்வெட்டி மீண்டது. "உனக்கு நேரமாயிட்டுதுன்னு நினைக்கிறேன். இத்துடன் நம்ம காவல்காரன் மூணு தடவை எட்டிப் பார்த்தாச்சு. நீ போ!"

எழுந்து நின்றாள். "இன்று சாயந்திரம் வருகிறீர்கள், இல்லையா?"

"அட ராமா!"

"இல்லே ஸார். உங்களிடம் இப்போ புதுசா ஒரு தன்மை கவனிச்சேன், ஏதோ நீங்கள் பூமியில் பாவவில்லை போல், காற்றில் கரைந்து விடுவீர்கள் போல!"

"அ—ஹ்—ஹா! தருமராஜா ரத சக்கிரம் பூமிக்கு ரெண்டு விரல்கடை உயரத்தில். நான் இன்னும் என் முதல் பொய்யைச் சொல்லவில்லை—"

அவள் சென்ற மூன்று நிமிடங்களுக்கெல்லாம் ஸர்வர் வந்து பில்லையும் பணத்தையும் எண்ணிப் பார்த்து எடுத்துக் கொண்டான். 'டிப்' பத்து காசுதான். எரிச்சல் வந்தது. 'இவங்க எல்லாம் என்னத்துக்கு இங்கே வராங்க? இவங்களுக்குத்தான் தண்ணிப் பந்தல் ஓட்டல் இடறி விழுந்தா இருக்கே! இப்படி ரெண்டு கிராக்கி வந்துச்சுன்னா குளிர் சாதனத்தை மூட வேண்டியது தான். என்னவோ தேனிலவு ஜோடியாட்டம் இங்கே வந்து 'டாவு' அடிக்கறதில் குறைச்சல் இல்லே—"

தெருவில் இறங்கியாச்சு. வெய்யிலில் வெம்மை ஏறி விட்டது. திடீரென விவரிக்கொணா ஒரு தனிமை, இத்தனை நெரிசல், இரைச்சல், வண்டி, மனிதர்கள் போக்குவரத்து நடுவே.

நடை, இதுதான் முடியும். நடந்துண்டேயிரு. புஸ்தகக் கடை உள்ளே நுழைந்து ஒரு சில ஏடுகளைப் புரட்டு. ஊஹூம்.

நட, நட. 'வேக் வேக்'கென்று நட, நட.

காலத்தைக் கொல்ல முயலும் சித்ரவதையை விட வேறு வேண்டாம். காலத்துக்கல்ல. கொல்பவனுக்கு. ஒரு புழு ஒன்பது புழு ஒன்பது தொண்ணூறு தொள்ளாயிரம் — எல்லையில்லை. அதில் நானும் ஒரு புழு. நெளிகிறேன், தவிக்கறேன். பசிக்க ஆரம்பிச்சாச்சு. நானா உபவாசம் இருப்பவன்? ஊ-ஹூம்-பெரியப்பா கால் தூசு பெறு வேனா? சந்தர்ப்பம் இல்லை, ஒட்டக் கூடாது. உதற ணும்னு நினைக்கறேன். செயல்படற மாதிரி நினைச்சுக் கறேன். ஆனால் மாட்டிக்கறேன். உழல்றேன். தனிமை யைத் தேடறேன்னு வாய் சொல்றது. தனிமை தோணி னதும் மனம் ஓடறது — இது என்ன மர்மமோ? எதிர்ப் பட்ட ஓட்டலில் என்னத்தையோ சாப்பிட்டு விட்டு — ஆறிப்போன எல்லா ஓட்டலிலும் சேனைக் கிழங்கு தவிர மற்றெல்லாக் காய்கறியும் மறந்தே போயாச்சு. மறு தடவை கேட்டால் காது கேட்பதேயில்லை. போயிண்டே யிருக்கான். மோரே! உன் மாற்றுப் பேர் கழநீர் —

மறுபடியும் நடைதான். இந்த ஒரு நாள் நடையில் பூமியின் எல்லைக் கோடுக்கே போயிடுவேன் போலிருக்கு. அப்புறம் சமுத்திரத்தில் தொபகடீர் தான்...

நாயைச் சொல்கிறோம், நான் என்ன பண்ணிக் கொண்டிருக்கிறேன்? கணக்கெடுத்துப் பார்த்தால் குருட்டு யோசனையும் வெறிச்ச நடையும் உணவு நேரம் தூக்க நேரம் போக உருப்படியா வாழ் நாளில் என்ன மிச்சம்? என்னதான் மிஞ்சினாலும் எல்லாம் கடைசியில் கணக்கன் உயிர் கொண்டு போகையில் எல்லாம் ஸைபர். சம்பிர தாயச் சிந்தனைதான். ஆனால் அதான் யதார்த்தம்.

பார்க் ஒன்று குறுக்கே வந்தது. ஒன்று, சுற்றிப் போகணும். அல்லது குறுக்கே நடந்து எதிர்ப்புறம் போகலாம்.

உள்ளே போனதும் ஆட்கொண்ட குளிர் காற்று. ஒரு கல் பெஞ்சில் உட்கார வைத்துப் பிறகு ஆளை பெஞ்சின் மேல் சாய்த்தது. பரவாயில்லையே இங்கு. பட்சி சிறகைக் கோதிக் கொள்வதுபோல், மனதைக் கோதிக் கொஞ்சம் அடக்கலாம். மரங்களின் கிளைகளும் இலைகளும் மேலே கலக்கையில் தரையில் ஒளிப்புள்ளி வைத்த கோலக் கட்டுகள் உயிரோடு அசைந்தன. சாய்ந்த வெய்யிலில் லேசு மஞ்சள் வானத்தை இலைப் பச்சைத் தடுக்கு முடைந்து அடக்க முயன்றது. மாலைக் காற்று கிளம்பி விட்டது. கண் செருகிற்று. வண்டிப் போக்குவரத்துச் சத்தங்கள் அலை சுருண்டு மங்கித் தூர ஓய்ந்தன. தூ...ர்...இதுவரை நான் நேரத்தோடு போராடிய நேரம், இப்போது என் உடலையே ஒரு பாத்திரமாய், தான் ஒரு நீல ஸ்படிக நிற பானமாய் நிறைந்து ஆனால் ஒரு சொட்டுகூடக் கீழே வழியாமல் விளிம்பு துளும்புகிறது. தூக்கத்துக்கும் விழிப்புக்கும் இதுதான் இடை விளிம்போ? தூங்காமல் தூங்கிச் சுகம் பெறுவதைக் காலம் பாடினவர் என்ன அர்த்தம் கொண்டாரோ? அதன் கோடி இதுதானோ? என்ன சுகம்! என்ன சுகம்! தூக்கம் விழிப்புள் நழுவுகையில், விழிப்பு தூக்கத்துள் நழுவுகையில் எதனின்று எது?

அந்த அரைக்கண் மரண சுகத்தை, உடலினின்று ப்ரக்ஞையின் விடுதலையை, ஏதோ காற்றில் சுழன்று சுழன்று மார்மேல் இறங்கி, விழிப்பு வெடுக்கென்று பிராணனை மீண்டும் உள்ளுக்கு இழுத்து விட்டது.

'முடிவுகள் முடிவுகள். விடிவுகள் விடிவுகள். முடிவுகளே விடிவுகள்'—வாய் என்னத்தையோ உளறிக் கொண்டே எழுந்து உட்கார்ந்தார். மார்பிலிருந்து ஒரு இலை விழுந்தது. இதுவா சமயத்தில் உயிரை இப்படி வகுக்கிறது? கைக்கெடிகாரத்தில் மணி நாலரை. அட, இங்கேயே தினம் வந்து இந்த வேளைக்குப் படுக்கலாம் போலிருக்கே! ஜிப்பாப் பையுள் யதேச்சையாக நுழைந்த கை துணுக்குற்று நின்று துழாவிற்று.

பெஞ்சடியில் விழுந்திருக்குமா? தன்னையே ஏமாற்றிக் கொள்ளும் ஆசையில் இன்னும் பரவலாகத் தேடினதில் ஒரு பூந்தொட்டியுள் பர்ஸ் கிடந்தது. காலியாக. சர்வ பழசு. அடித்தவனுக்கு எடுத்துப் போக வெட்கம். அவ்வளவு கந்தல். ராசி என்று காப்பாத்தின அதன் மகிமை இன்றோடு ஒய்ந்தது. அதை யெடுத்தவன் கைக்கெடி காரத்தை ஏன் விட்டான்? அவிழ்க்கும்போது விழித்துக் கொள்வேன் என்ற பயமா? கழுத்தை நெரிக்காமல் விட்டானே, அந்த மட்டும் புண்ணியவான். உனக்கு வந்தனமப்பா. நானாக இன்று இதுவரை நடந்தது போக என் திரும்பு வழியை நீ நடக்க வைத்து விட்டாய்! இது கடவுள் அடிக்கிற ஜோக்.

மேம்பாலத்தடியில் கொத்தாய் ஒடுங்கிய பத்து வீடுகள் நடுவில் அவள் கொடுத்த விலாசத்தைக் கண்டு பிடித்துக் கதவைத் தட்டும் வேளைக்கு நன்றாக இருட்டி விட்டது.

''வந்தூட்டீங்களா ஸார்! உள்ளே வாங்கோளேன்!'' அடுப்படி வேலைப் புழுக்கத்தில் அவள் முகத்தில் எண்ணெய் கசிந்தது. அது அவளுக்கு நன்றாயிருந்தது. சில பேர் எப்படியோ — அவர்களிடம் ஏற்கெனவே அசைக்க முடியாதபடி விழுந்திருக்கும் நம் நல்லெண்ணமும் காரணமோ என்னமோ — அவர்களே தாயான பிறகும் கூட அவர்களிடம் ஒரு மழலைத்தனம் மிளிர்கிறது. பிடித்தவர்களுக்குப் பிடிக்கும். பிடிக்காதவர் பற்றி நமக்குக் கவலையில்லை. இந்த நாளில் வாடகைக்கு விடும் இடத்தில் ஒரு சதுர அங்குலம்கூட வீணாவதில்லை. வீட்டுக்காரனுக்கு எல்லாம் பணம். தாழ்வாரம் என்று சொல்வதா, நடைபாதை என்பதா? அதை அளவெடுத்து அடைத்தாற்போல் ஒரு ஸோபா செட் (''மாதத் தவணைத் திட்டம்''), மேலே ஒரு மின் விசிறி விசையாகச் சுற்றிற்று.

சதா சர்வ காலம் சுத்திண்டிருக்க வேண்டியது தான். இல்லாட்டா கொசு அப்படியே அப்பிவிடும். இந்த

இடத்துக்கு இருநூறு ரூபாய் வாடகை. இப்போ காலி பண்ணினால் அடுத்து வருபவனுக்கு இருநூற்று ஐம்பது ரூபாய்.

''முன்பசிக்குக் கொஞ்சம் நொறுக்குத்தீனி!'' சிரித்துக் கொண்டே கோமதி ஒரு கையில் ஒரு சின்ன எவர்ஸில்வர் தட்டும் மறு கையில் தம்ளரில் ஜலத்துடனும் உள்ளிருந்து வந்தாள். ''நேற்று காராசேவ் பண்ணினேன்.''

அவரைச் சில வினாடிகள் கவனித்துக் கொண்டிருந்தவள், புன்னகை புரிந்தாள். '' நிஜமாவே ஸார், நீங்கள் ஒரு நாசூக்கான மனிதன் ! உங்களைப் பற்றிய ஒவ்வொரு விஷயமும்...'' மேலே வார்த்தை கிடைக்காமல் கைவிரித்தாள். ''இது போல் நாசூக்காக இருக்கணும்னு எனக்கு எவ்வளவு ஆசை தெரியுமா?''

''நீ ஒண்ணு சாப்பிடு.'' — ஒரு துண்டு பொறுக்கி நீட்டினார்.

''இப்போதுதான் தின்னேன். போக வர என்ன வேலை? புளியம்பொந்தில் கை விடுவதுதான்'' — வாங்கி வாயில் போட்டுக் கொண்டாள். ''காபி?''

''எனக்கு வேண்டாம்.''

''ஒரே ஒரு ஸிப் — ஒரு அங்குலம்தான் அளவு—?''

''நான் நினைத்து நினைத்துக் குடிப்பது இல்லை.''

''நான் குடிப்பேனே ! உங்கள் சாக்கில எனக்கு என்ன சொல்றேள்?''

''சரி, அப்படியே. எங்கே உன் ஆத்துக்காரரைக் காணோம்?''

''அவர் வர மணி எட்டாகும்.''

''உன் பையன் எங்கே?''

''தூங்கறான்.''

''இந்த ரெண்டுங் கெட்டான் வேளையிலா?''

''விளையாடிட்டு வந்தான். பசிக்கறதுன்னான். பசி தாளமாட்டான். இருக்கிற மத்தியான சோத்தை மோருஞ் சாதம் பிசைஞ்சு போட்டேன். நமக்கும்தான் சமையல் நேரமாகுமேன்னு. அலுப்பு, தூங்கிட்டான்.''

''பார்க்கலாமா?''

இதேபோல் இன்னொரு தாழ்வாரமா? நடை பாதையின் தொடர்ச்சியா? ஒரு நிறுவையில் ஆடும் தொட்டிலில் பையன் தூங்கிக் கொண்டிருந்தான். பையன் தொட்டில் வய்தைத் தாண்டியாச்சு.

''—ஆனால் இதுதான் அவனுடைய வழக்கமான இடம். கோவிச்சுண்டாலும் சரி. சந்தோஷப்பட்டாலும் சரி. அவனுடைய முருங்கை மரம் இதில் உட்கார்ந்துண்டுதான் வீட்டுப்பாடம். கவனம் தனக்கு விளையாட்டு—''

அவளையே உரித்து வைத்திருந்தது. குழந்தையைப் பார்த்துக் கொண்டே, ஓரக்கண் அவள் மேல் போயிற்று. அந்த நிமிஷத்துக்கு அவனே — அவள் வாழ்வின் முழு நம்பிக்கையாக மாறி அந்த ஆசை பூரா குழந்தைமேல் குவிந்த மாதிரி தோன்றிற்று. உடலின் உயிர் திரண்டு கண்களில் குழுமி, வேறு யாருக்கும் பங்கு இல்லாத ஆசை. ஒரு அதீதம். மூழ்கிக் கொண்டிருப்பவன் கரைக்குக் கரை பற்றும் ஒரு வேகம். என் தாயும் இந்தப் பருவத்தில் தூளியில் என்னை இப்படித்தான் பார்த்திருப்பாளோ? பையனைக் கண்டு லேசாய் எனக்குப் பொறாமையாக இருக்கோ? இருக்கலாமோ? தோணிடுத்தே. கேள்வி ரூபத்தில் அதை என்ன பண்றது? இந்த வயசிலா, இந்தப் பச்சைக் குழந்தையின் மேல் பொறாமை? இந்தப் பார்வையின் பரிசுக்கு எத்தனை வயதானாலும் காத்திருக்கலாமே!

அவளே ஏதோ சிந்தனையுள் நழுவி விட்டாற்போல், கண் ஒளி உள்ளுக்கு இழுத்தாற்போல் மங்கிற்று. காலப்பிரமாணங்கள் துளசி மணிகள் போல் ஒன்றுடன் ஒன்று

கொக்கி மாட்டி மாலை தொடுத்துக் கொள்வதைப் புலன் பூர்வமாக நுகரலாம். வேளை அவ்வளவு துல்லியமாகத் துளிர்த்தது.

"கோமதி!"

"ஊங்ங்?" — போதையிலிருந்து அவள் சரியாக மீள வில்லை.

"என்னை மன்னிச்சுடு—"

அவள் விழிகளில் வினா.

இரு கைகளையும் இரு ஜேபிகளிலும் விட்டு உள் துணியை வெளிக்கு இழுத்துக் காட்டினார். புன்னகை புரிந்தாள். "இன்னிக் காலையில்தானே ஏ. ஸி. ஹோட்டல்?"

"மாலையில் ஜேப்படிச்சுட்டான். குழந்தைக்கு ஒரு பிஸ்கட் கூட வாங்கிண்டு வரமுடியலே. உனக்கு ஒரு முழம் பூவுக்கு வழியில்லே. இன்னி பூரா நடராஜா சர்வீஸ்!"

சொன்னது முற்றிலும் மனதில் தோய, சற்று நேர மாயது. ஆனதும் பீறிட்ட அந்தச் சிரிப்பில் அவரே அசந்து போனார். அதுக்கு இவ்வளவு சிரிப்பா? ஏதோ இத்தனை நாள் உள்ளே அடைத்துக் கிடந்த ஒரு வேகம் கார்க் எகிற! இது சாக்கில் சிரிப்பு ரூபத்தில் பீச்சி யடித்தாற் போல், சிரிப்பு ஊற்றாக வந்தது. ஓடிவந்து சோபாவில் விழுந்து வயிற்றைப் பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தாள். புரை கூட ஏறி விட்டது. உச்சந் தலையைத் தட்டிக் கொண்டாள்.

ஹிஸ்டீரியா? பொம்மனாட்டிகள் வினோதமான பிராணிகள்!

"மன்னிச்சுக்கோங்கோ. இல்லை இல்லை, மன்னிக்க வேண்டாம்." அலை ஓய்கிற மாதிரி தோன்றிய சின்னங்கள் மறைந்து, மறுபடியும் சிரிப்பு. கண்ணைத் துடைத்துக் கொண்டாள்.

''இல்லை, நீங்கள் அப்படி ஜேபியை உள் பக்கத்தை வெளியே இழுத்துண்டு நின்னப்போ எனக்கு எப்பவோ சார்லி சாப்ளின் மார்னிங் ஷோ ஞாபகம் வந்துடுத்து.''

ப்ரஷர் குக்கரின் நீண்ட ''உஸ்'' சீறல் உள்ளிருந்து வந்தது. அவளை அவர் சமையலறைக்குத் தொடர்ந்தார்.

''என்ன சமையல்?''

''சாம்பார்—என்ன முகத்தைச் சுளிக்கறேள்? சாம் பார் பிடிக்காதா?''

''காலையிலே சொன்னேனே, எனக்குப் பிடிச்சது உனக்குத் தெரியுமேன்னு. உனக்குத் தெரியாதா?''

''வத்தல் குழம்புதானே, என்ன சார், இருந்திருந்து இத்தனை வருஷங் கழிச்சு வந்திருக்கேள், ஒரு சாம்பார் கூட இல்லாமலா? அதனால் என்ன, வத்தல் குழம்பையும் வெச்சால் போச்சு.''

''இதென்ன குடித்தனமா, தடித்தனமா? வீடா, ஓட்டலா? ஒண்ணு செய். பருப்பை ரஸத்தில் போட்டு விடு.''

''அதுவும் ஐடியாதான். வத்தல் குழம்பு, பருப்பு ரஸம், உருளை மசாலா கறி.''

ஜிப்பாவைக் கழற்றி யெறிந்ததில் குறி பார்த்தாற் போல் அது சோபாவில் போய் விழுந்தது.

''என்ன ஸார்?''

''நான் சமைக்கப் போறேன்.''

''வாட்? குத்துக்கல் மாதிரி புடவை உடுத்திண்டு வீட்டுக்குப் பொம்மனாட்டியா நிக்கறேன். நீங்க என்ன சமைக்க வரது? அதுவும் சாப்பிட வந்த இடத்தில்?''

''ப்ளீஸ், நான் சமைத்தால் உனக்கு ஆகாதா?

ஆசாரக் குறைவா மடிசஞ்சி மாமியாரை அலமாரியில் பூட்டி வெச்சிருக்கையா?''

''போதுமே என் ஆசாரம்!''

''பின்னே என்ன, என்னை என் இஷ்டத்துக்கு விடு. நான் சமையல் பண்ணி, நீ சாப்பிடணும்னு எனக்கு ஆசையாயிருக்குன்னு வெச்சுக்கோயேன்.''

''எனக்கு என்னவோ மாதிரி யிருக்கு சார்!''

''ப்ளீஸ்!''

''அப்போ எனக்கென்னதான் வேலை?''

''அடுப்பங்கரையில் வேலைதானா இல்லை? சுற்றுக் காரியம் எல்லாம் உன்னதுதான். முதலில் உப்பு, புளி, மிளகாய் எங்கெங்கிருக்குன்னு நீதானே எடுத்துக் கொடுக்கணும். குழம்பு வைக்க கல் சட்டியோ மண் சட்டியோ இருக்கா? குக்கரைக் கீழே இறக்கிடலாம்னு நினைக்கிறேன். இலுப்பச் சட்டி எங்கே?''

காரியங்கள் அவைகளின் போக்கில் இதற்குப் பின் இது என்று அதன தன் வரிசைக் கிரமத்தில் விழுந்த பின் எல்லாமே படிமானமாகி விட்டது.

உருளைக் கிழங்கைத் துண்டம் போட்டுக் கொண்டே, ''இதெல்லாம் எப்போ கத்துண்டேள்? உங்களுக்குக் கைவாசம் இருக்கு ஸார். காயறபோதே குழம்பு மணம் கூரையைத் தூக்கறதே!''

''ஏதோ ஒரு வனஸ்பதிக்கு வெளிப் பிரயாணம் செய்யும் விற்பனையாளனாக மூணு வருஷம் வேலை பார்த்தேன். ஆந்திரா ஸ்டேட். ஓட்டலில் அந்த மிளகாய்க் காரம் நாம் சமாளிக்கறதா இல்லை. குடல் வெளியில் வந்து விடும்போல் ஆயிட்டுது. சரி, சமையல் களத்தில் குதித்து விட்டேன்.''

"சார், எனக்கு வயிறு கபகபகன்னு பசிக்க ஆரம்பிச்சுடுத்து. குழம்பு காஞ்சாச்சா?"

"ஒன்றும் ஆகலை. காத்திரு மகளே, காத்திரு. அது அது அதனதன் நேரத்துக்குக் காய வேண்டாமா, வேக வேண்டாமா? அப்போத்தானே பக்குவத்தை அடையும்! ஆனால் என் சமையல் சம்பிரதாயச் சமையலாயிருக்காது. நாலு திக்கும் அதில் கலந்திருக்கும்—என்ன ஒரு நாழியா என்னை முறைக்கிறாய்?"

"நீங்கள் இருக்கேளே, ஸார்?"

"நீ வேடிக்கையாப் பேசறேன்னு அர்த்தமா, நான் சிரிக்கணுமா?"

"இல்லை. நான் ரொம்ப ஸீரியஸா இருக்கேன். எனக்கு அப்படித் தோணறது. நீங்கள் இருக்கேள் — இல்லை."

அவர் ரஸத்தைக் கிளறிக் கொண்டே, புன்னகை புரிந்த வண்ணம் - "ம்ம்... அடுத்தது என்ன?..."

"இன்னி காலையிலேயே சொன்னேன் போலிருக்கு, உங்களிடம் ஒரு பிடிபடாத தன்மை — ஸார், உங்களுக்கு இந்த வயசில் தலை மயிர் இவ்வளவு அடர்த்தியா இருக்கேன்னு யோசனை பண்றேன். அவருக்கு இப்பவே உச்சி மண்டையில் நிலா காயறது."

"விரல்கடை சீரகம் அம்மியில் நுணுக்கேன், இல்லை சிரமந்தானா? கோமதி, நான் கொஞ்சம் சீலக்காரன் தான், ஒப்புக்கறேன். செளந்தர்ய உபாஸகன், ஏதோ என் வழியில், என்னால் முடிந்தவரை அழுக்குகள் எனக்கு ஆகாது. அது அது அதனதன் இடத்தில் பண்டத்துக்கேற்ற பாத்திரம், பாத்திரத்துக்கேற்ற பண்டம். ஒழுங்கு — சீர் — வரிசை."

"ஆ! நான் அப்பவே சொன்னேனே, நீங்கள் ஒரு நேர்த்தியான ஆசாமி! இதனாலேயே உங்களைச் சூழ்ந்து

ஒரு யதார்த்தமற்ற உணர்வு. நீங்கள் கவிதையாகக்கூட இல்லை, கவிதையின் ஞாபகம் போல் தோன்றுகிறீர்கள். உங்கள் கலர், உங்கள் வெள்ளை ஆடை, அதனாலேயே உயரம் போன்ற பகட்டு! எனக்குச் சொல்லத் தெரியல்லே ஸார். ஆனால் நெஞ்சில் இருக்கு. இந்த நிலையைச் சொல்ல இங்கிலீஷ்தான் திடீர்னு வரதே யொழிய தமிழ் முழுக்க முட்டுக் கொடுக்கவில்லை. இது நான்தான் பேச றேனா, இல்லை, நீங்கள்தான் இப்படிப் பேச வைக்க றேளா? தன் வெளியீட்டுக்கு இடம் தேடும் பொருள் போல்—''

''சமையல் முடிஞ்சாச்சு!''

''ஸார், மன்னிக்கணும். நெய் இல்லை!''

''யாருக்கு அக்கறை? ஆனால் எந்த தைரியத்தில் டம்பாரில் இறங்கினாய்?''

''யாருக்கு அக்கறை?''

''முகம் கழுவித் துடைச்சுக்க சரியாயிருக்கும். ஹலோ, மணி எட்டரை ஆறது, இன்னும் உன் எசமான ரைக் காணோம்.''

''நாம் சாப்பிடுவோம். எனக்கு ரொம்பப் பசிக் கறது. ரெண்டு பேரும் உத்யோகம் பண்ணினா இதுதான் ப்ரச்னை. ப்ரச்னை என்ன, அதுவும் பழகிப் போச்சு. அவர் வர நேரமானால், நான் சாப்பிட்டு விட்டு, சாதங்களைப் பிசைஞ்சு டிபன் ஸெட்டில் வெச்சுட்டு, ஒழித்துப் போட்டு விட்டுப் படுத்துடுவேன். அவர் பாட்டுக்கு வந்து சாப்பிட்டு விட்டு ஏனங்களைத் தொட்டி முற்றத்தில் போட்டு விடுவார். சாப்பிடாத நாட்களில் வேஸ்டும் ஆறதுதான். காலையிலும் வேலைக்குச் சுருக்கக் கிளம்பிப் போயிடுவார். மத்தியானம் வந்து ஆறின சோற்றைச் சாப்பிடுவார். எதுவாயிருந்தாலும் எப்படியிருந்தாலும் சரி, உண்மையில்

அவரால் தொந்தரவு கிடையாது. ரொம்பப் பேசக்கூட மாட்டார். பாங்கில் வேலை எனக்கு முதுகு நரம்பு கழண்டு போறது. நீங்கள் சௌந்தர்ய உபாசனையைப் பற்றிப் பேசினேளா, கேட்க அழகாயிருக்கு, ஆசையா இருக்கு. ஆனால் என் வாழ்நாளே ஆச்சா போச்சா அடிச்சுக்கோ புடிச்சுக்கோ அகப்பட்டதை அவசரத்தில் அடைச்சுக்கோ—அப்படியே ஆயிடுத்து ஸார். உங்களுக்கு இலை அவசியம்தானா? தட்டில் சாப்பிட மாட்டேளா? ஆபிஸிலிருந்து வரப்போ வாங்கிண்டு வந்திருக்கலாம். ஆனால் நினைப்பு இல்லை.''

புன்னகை புரிந்தார். ஆபிஸ் வேலையில் கெட்டிக் காரியா யிருந்தால் வீட்டு வேலையில் வாங்கலாய்த்தா னிருக்குமோ?

''குழந்தையை எழுப்பலியா?''

''வேண்டாம். ராத்திரி எழுந்தால் பார்த்துக்கலாம். சார், நீங்கள் உட்காரப் போறேளா இல்லையா? நான் இன்னும் கொஞ்ச நாழிலே அழுதுடுவேன். உங்களுக்குப் போட்டுட்டு அப்புறம் நான் சாப்பிடணும்.''

''ஏன், ரெண்டு பேருமே சேர்ந்து உட்கார்ந்து சாப்பிட்டால் போச்சு.''

''ஓ! தாங்க் யூ! தாங்க் யூ! உங்களுக்குப் பரவாயில் லையா? அவனவனுக்கவன், எல்லாருக்கும் பொது கட வுள். பரவாயில்லையா? சுய சேவகம் பரம சந்தோஷம்.''

தட்டில் புலுபுலுவென மல்லி போன்ற அன்னத்தின் மேல் பரவினால் போல் குழம்பை விட்டதும், அது உள் இறங்கி கலர் தோய்வதைப் பார்க்கவே சுவாரஸ்யமா யிருந்தது.

அவள் குழம்பை விரலால் தொட்டு நாக்கில் வைத்து இழுத்ததும் அவள் கண்கள் விரிந்தன.

''மை காட்! இது குழம்பா, தேவாமிர்தமா?''

குழந்தை போல் அவருக்கு உள்ளே பொங்கிற்று.

''இந்தக் குழந்தை சந்தோஷத்தைப் பார்க்க என்ன வேணுமானாலும் செய்யலாம்.''

''உங்கள் கையாலேயே ஒரு கரண்டி விடுங்களேன். இன்னிக்கு ஒரு வெட்டு வெட்டப் போறேன்!''

அவருக்குத் தொண்டை லேசாய்க் கம்மிற்று. ''குசத்தி! டோண்ட் கேர்.''

''குசத்தியோ குறத்தியோ, என்ன வேணுமானாலும் சொல்லிக்கோங்கோ. ரோசப்பட்டால் இந்தச் சமையல் கிடைக்குமா? அதுவும் இந்தக் குழம்பு, இந்தக் கறி! சார், அவருக்கு இப்பவே தனியா எடுத்து வெச்சுடணும். இல்லாட்டி அவர் பங்குக்கு நான் பொறுப்பில்லே. நீங்கள் என்ன வெறுமென கொறிச்சுண்டிருக்கேள்?''

''ஒரு வயசுக்குப் பின் அவ்வளவுதான். நீ இப்படி குழம்பையே தாண்டாமலிருந்தால் ரஸத்துக்கு எப்போ வரது? நான் ரஸத்தில் ஒரு ஸ்பெஷலிஸ்ட்.''

''அப்போ குழம்பில் ஸ்பெஷலிஸ்ட் இல்லையாக்கும்! இல்லாமலே இப்படியாக்கும்! இருந்தால் என்ன ஆயிடுமோ? நான் சொர்க்கத்துக்குப் போயிடுவேனா?''

''இப்போ எங்கிருந்து பேசறே?''

''முதலில் இந்தக் கலர்—ஸார்! எனக்குச் சொல்லிக் கொடுங்களேன்!''

அவர் சிரித்துக் கொண்டே கை விரித்தார். ''இதில் சொல்லிக் கொடுக்க என்ன இருக்கு? கண் பார்த்தால் கை செய்ய வேண்டியதுதானே. ஒரு நாள் ஒன்று ஏறும், ஒன்று தாழும். பண்ணப் பண்ணச் சரியாயிடும், அப்புறம் என்னைத் தூக்கி அடிச்சுடுவே!''

பெருமூச்செறிந்தாள். "அதெல்லாம் முடியாது. அதிலும் அம்சம்னு ஒண்ணு இருக்கு. நீங்கள் சொல்லிக் கொடுத்தாலும் எனக்கு நேரம் எங்கேயிருக்கு? போவ்— ஏப்பங்கூட வந்துட்டுது. மானம் போச்சு!" அவளுக்குக் கண் துளும்பிற்று. "இது மாதிரி நான் எப்பவுமே சாப்பிட்டதில்லே. இவ்வளவு நன்னா, இவ்வளவு சந்தோஷமா, இவ்வளவு அன்பா எனக்குப் போட்ட தில்லை."

"ஏன், ரஸம் உனக்குப் பிடிக்கலியா?"

"யார் சொன்னது? கச்சட்டியில் கிணத்தடிக்குப் போயிடுத்தே! ஆனால் அதைத் தனியாப் பண்ணி, தனியாச் சாப்பிட்டு ரஸிக்கணும். ரெண்டையும் சேர்த்துப் புகழ எனக்கு யோக்கியதையில்லை. இன்னிக்கு நான் குழம்புப் பாட்டி. விட்டுச் சொல்றேனே, வயிற்றில் இனி இடமில்லை. ஆனால் நாக்கில் இன்னும் குழம்பு ருசி துளித்து நிக்கறது. இன்னும் தணிஞ்ச பாடில்லை. இது மாதிரி ஒரு நிலை உண்டா? என்ன சொல்வேன்?"

தீராத ருசியே ஒரு தண்டனைதான்.

"நீ இவ்வளவு தூரம் அனுபவிச்சுச் சாப்பிடுவேன்னா, இன்னும் இரண்டு நாள் இங்கேயே தங்கி என் கை வரிசையைக் காண்பிக்கலாம்னு சொல்லு—" கண் சிமிட்டினார்.

"இரண்டு நாள் என்ன? வீட்டுக்குப் பெரியவாளா நீங்கள் நிரந்தரமா எங்களோடேயே இருந்துட்டால் எங்களுக்குப் பூரண சம்மதம்தான். சமைச்சுப்போடறதுக் காக அல்ல; போட்டதற்காக அல்ல; வீட்டுக்குக் காவலா யிருப்பேள் என்பதற்காக அல்ல; எங்கள் குழந்தைக்குத் தோழனாக இருப்பேள் என்பதற்காக அல்ல; உங்களை உங்களுக்காகவே—இல்லை, எங்களுக்காகவே—போங்கோ ஏார், எனக்குச் சொல்லத் தெரியல்லே. என் வீட்டுக்காரர்

இந்த விஷயத்திலெல்லாம் நல்லவர். ஆட்சேபிக்கவே மாட்டார்.''

அடுக்குள் வேலை ஒரு வழியாக முடிந்தது. இருவரும் எதிர் எதிராக சோபா நாற்காலியில் உட்கார்ந்தார்கள்.

''எப்படி சார், இவ்வளவு வேலையைச் செஞ்சுட்டு சோர்வில்லாமலிருக்கேள்?''

''நான் என்ன செஞ்சேன்? அதிகாரம் பண்ணிண்டு அடுப்பில் ஏத்தியிறக்கினேன். செஞ்சதெல்லாம் நீதான்!''

''இதென்ன புகழுரை, இகழ்ச்சி அணியா?''

''இல்லை இல்லை, சுற்றுக் காரியம் வேடிக்கை இல்லை, தெரியுமோன்னோ!''

''ஸார், நீங்கள் பாங்கிலேயே தொடர்ந்து இருந்திருக்கலாம். இப்போ ஒரு நல்ல நிலைக்கு வந்திருப்பேள். பெரிய பாங்கிற்குத் தாவியிருக்கலாம்.''

''அதெல்லாம் என் இஷ்டமா, உன்னிஷ்டமா? சகடக்கால் ஜாதகம். அப்படியிருந்திருக்கலாமோ, இப்படி செஞ்சிருக்கலாமோ என்கிற வருத்தங்கள் என் சுபாவத்திலேயே கிடையாது. வருத்தம் தெரியாத மனிதன்.''

''நீங்கள் அன்னிக்கு என்னைப் பரீட்சை பண்ணி வேலைக்கு எடுத்துண்ட என் நல்ல காலம், இன்னும் கை கொடுத்துண்டிருக்கு.''

''இல்லை, இல்லை. நீ வேலையில் பலே, தெரியுமோன்னோ? தாட்சண்யமே இல்லை. உன் சுருக்கெழுத்து, வேகம் மட்டானாலும், உன் எழுத்துக் கூட்டல் ரொம்ப நல்லாயிருந்தது. இங்கிலீஷ் அறிவு இருந்தது. நமக்கும் பந்தங்கள் வளர்ந்தன. உனக்கு ஒரு பாப்பா முகம், தெரியுமோன்னோ?''

''கொழகொழ கண்ணே—'' என்றாள்.

''இப்போ கூட தேடினால் பழைய அடையாளங்கள்

கொஞ்சம் கொஞ்சம் கிடைக்கும். அந்தக் கன்னத்துக் குளுப்பானில், கொஞ்சம் மொண்ணை மூக்கில், கோண வகிடில்—''

''இல்லை, விமலா வகிடு.''

''நீ சிரிக்கறப்போ உன் கண்ணுக்குள் ஆழத்தில்—''

மகிழ்ச்சியின் பொங்கலில் அவள் முகம் ஒளி வீசிற்று.

''உங்களுக்குத் தெரியுமா ஸார், அப்பவே நம்மைப் பத்தி சுத்துப் பட்டாளம் கதை கட்டப் பாத்தாங்க. "அப்பாவும் பொண்ணும் எப்படி இழையறாங்கபாத்தியா?'ன்னு.''

''எனக்குத் தெரியாதா என்ன? நல்ல வேளை, அத்தோடு விட்டாங்களே! அதுவும் உங்கள் யூனியன் லீடர் கொஞ்சம் கூடவே பண்ணப் பார்த்தான். நம்ம ரெண்டு பேர் மேஜையும் பக்கத்தில் இருக்கக்கூடாது. உன் மேஜையைக் கொஞ்சம் பின்னுக்குத் தள்ளியாகணும்னு அடம் பிடிச்சு — அப்போ அவன் கொடி கட்டிப் பறந்த நாள் — ஜயிக்கவும் ஜயிச்சுட்டான். நான் அப்ப வெறும் செக்ஷன் ஆபிஸர்தானே! அந்த மானேஜருக்கு நரம்பில்லே. நான் லெட்டர் டிக்டேட் பண்ற மாதிரி உன் பக்கமா சாஞ்சு உன் பிராவுக்குள் எட்டிப் பார்ப்பேனாம். இப்போ நினைச்சாக்கூட ஆத்திரம் வரது.''

அவர் முகம் குங்குமப் பிழம்பாகி விட்டது.

''நானும் கொழகொழ கண்ணேன்னு இருப்பேன்!'' என்று சிரித்தாள்.

அவர் சிரிக்கவில்லை. பொருமினார்.

''எது எது வக்கிரமோ அதெல்லாம் இப்போ நார்மல். எது நார்மலோ அதன் மேல் சந்தேகப் பார்வை. எல்லாம் தலை கீழ்ப் பாடம். உனக்கும் எனக்கும் வயது வித்தியாசம் என்ன? உறவு இல்லே, அப்பா - பெண் உணர்ச்சி நம்மிடையில் இருக்கக் கூடாதா? மனிதன் ஆதரவை

எப்படி எப்படியோ தேடுகிறான். அதற்குள் இந்தச் சமுதாயத்துக்கென்ன எரிச்சல்?''

அவருக்கு மூச்சுத் திணறிற்று.

மதுவையும், மாமியையும் பற்றிப் பேச மாட்டேன் கிறார். அவர் பேசாதவரை நான் என்னத்தைக் கேட்க முடியும்? சொல்வதற்கு மேல் உள்ளே வெச்சுண்டு அவஸ்தைப் படறார். ஆளைப் பார்த்தாலே ஏதோ ஒரு தினுசில் பயமாயிருக்கு. என்ன ஆறுதல் சொல்வேன்?

சமாதானமாக, ''பேசறவா பேசிட்டுப் போறா. நாம் என்ன செய்ய முடியும்? ஊர் வாயை மூட முடியாது. எல்லாம் ஆன கதை போன கதை. சொன்னவாளும் சிரிச்சவாளும் இப்போ எங்கெங்கே சிதறிக் கிடக்காளோ? புதுசாப் புனையணும்னா அத்தனை பேரும் மறுபடியும் ஒன்று சேர்ந்தாகணும்—''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. இதுக்கெல்லாம் வாரிசு முளைச்சுண்டே யிருக்கும். மணி பத்தாச்சு. உன் வீட்டுக்காரரைக் காணோம்!''

அவரைப் பார்க்காமல், அவள் சுவரைப் பார்த்துக் கொண்டே, ''இன்னிக்கு இனிமேல் வர மாட்டார்!'' என்றாள்.

அவர் திடுக்கிட்டார். ''என்ன சொல்றே?''

அவள் பொட்டென்று உடைந்து போனாள். ''அவர் சரியாயில்லை.''

''சரியாயில்லேன்னா என்ன அர்த்தம்?'' திடீரென வேஷம் கலைந்தாற்போல் அனாதையாக அவள் அழுகையில், அவளைத்தொட்டு, அவள் தலையைத் தன் தோள் மேல் சார்த்திக்கொண்டு, அவள் கண்ணீரைத் துடைத்து...

கை கால்கள் சொன்னபடி கேட்கவில்லை என்பது ஓரளவு உண்மையானாலும்—

ஒரு சமயம், ஒரே ஒரு சமயம், இருவரும் அவரவர் யோசனையில் அமிழ்ந்து, வேகமாக எதிரும் புதிருமாய் வருகையில் மோதிக் கொண்டார்கள். நல்ல வேளை, ஒருவனும் அருகில் இல்லை. இருந்தால் பெரிய முடிச்சாய்ப் போட்டிருப்பான்கள். அவர் உடல் கூசிப் போனார். மேலே ஆபிஸ் அலுவல்கள் அவர்களிடையே நடந்து கொண்டிருந்தன.

பிறகு தனக்கே மனசு கேட்கவில்லை. இரண்டு நிமிஷம் இருவருக்கும் தற்செயலாகத் தனிமை கிடைத்ததும்—

''கோமதி! என்னை மன்னிச்சுடு—''

அவள் வியப்புடன், உண்மையில் புரியாமலே நிமிர்ந்தாள்.

''உன் மேல் அப்படி இடிச்சுக்க நேர்ந்ததுக்கு—''

''அடேயப்பா, என்னவோ ஏதோன்னு பார்த்தேன். நான் அதைப் பத்தி நினைக்கக் கூட இல்லை'' — இது என்ன, அவளுடைய பெருந்தன்மையா? இல்லை, வெகுளியா? கல்மிஷம், நாடகம் எல்லாம் என் மனசில்தானா?

ஸ்பரிசம் — புலன்களுள் ஆபத்தானது. தொடல் என்றாலே நம் மனது அஞ்சறது. இந்தக் கூச்சம்தான் நம் இந்தியப் பண்பாட்டின் உச்சமா? பவித்ரத்தை — அப்படியென்றால் அது என்னவோ ஏதோ? எவ்வளவுதான் சீரழிஞ்சாலும் எஞ்சி யாருக்கும் எட்ட முடியாமல் எவரிடமும் ஒரு பவித்ரம் நிற்கிறது. அதைக் காப்பாற்றியே ஆகணும் என்று எவ்வளவோ ஆழத்தில் மனசடியில் புதைத்தாலும், புதைந்திருந்தாலும் ஒரு ஆட்சேபக் குரல் கதறுகிறது. இந்த அஞ்சலே இந்த ஆட்சேபணையே இருவரையும் காப்பாற்றுகிறது. அழணும் என்று இருந்தால் அழுது அடங்க வேண்டியதுதான். அடங்க முடியாவிட்டால் அழுது கொண்டே யிருக்க வேண்டியதுதான். இது பார்த்தால் கண் துடைப்புக்கடங்கும் துக்கமாகத் தோணலே.

படிப்படியாக அலை அடங்க ஆரம்பித்தது. மூக்கை உறிஞ்சினாள்.

''அவர் சரியாயில்லே. சீட்டாடறார். கலியாணத்துக்கு முன்னாலேயே பழக்கம் இருக்கும் போலிருக்கு. நடு மனுஷாள் பொத்தி வெச்சுப் பண்ணிட்டா. தாலிக் கயிறு சுருக்கா மாறியே போச்சு. அப்போ என்ன தெரியறது? ஆள் அழகா துப்பட்டிக்காரரா! ஏமாந்து போனேன். உண்மையா சொல்றேன். நீங்கள் கூட என்ன வேணுமானாலும் அர்த்தம் பண்ணிக்கலாம். ஏதோ ஒரு தினுசில், முக ஜாடையில் உங்களை ஞாபகப்படுத்தற மாதிரியிருந்ததும் ஒரு காரணமாயிருந்திருக்கலாம். அதுகூட அவருக்கு நாளடைவில் அழிஞ்சுண்டு வரது. எனக்குத்தான் தகப்பன் பித்தோ! ஓ! என்னவோ? அது என் அப்பா மேல் இல்லாமல் உங்களிடம் இருப்பானேன்?'' சந்திரனின் தேசல் போல் ஒரு துக்கச் சிரிப்பு. ''இதோ என் கலியாணப் போட்டாவைக் கொண்டு வரேன். நீங்களே பாருங்களேன்—''

அப்படி ஒன்றும் பெரிய ஒற்றுமை சொல்ல இல்லே. ஆனால் இல்லாமலும் இல்லே. ஒரு வேளை அந்த உதடுகளின் வார்ப்பில், மோவாய்க் குழியில், கண்களின் பழுப்பில் இருக்கலாமோ என்னவோ? இந்தக் கண்களில் ஒரு மழுப்பல் தெரிந்தது. எது எப்படியிருந்தால் என்ன? தோற்றுப் போன வாழ்க்கை இருவருக்கும்தான்.

அவன் மேலும் ஆத்திரம் அவருக்கு வரவில்லை. மாட்ட வைத்து விடுகிறோம். மழைக்காகக் கட்டிடத்தில் ஒதுங்குகிறோம். எதிர்பாராதவிதமாகக் கட்டிடம் தலை மேல் விழுந்து விட்டால் யார் மேல் குற்றம்? ஏன் தெரிந்து ஒதுங்கவில்லை என்று கேட்கிற லக்ஷணம்தான்.

''அவர் சம்பாதனையும் குறைவில்லை. ஆனால் இருவருடையதும் சேர்ந்தும் போதவில்லை.''

எப்படிப் போறும்? சர்க்கார் கஜானாவைத் திறந்து

விட்டாலும் போறாது. பெரிய இடத்தில் சம்பந்தம் பண்ணியிருக்கிறீர்கள். சாபமடி கோமதி. உனக்கு விமோசனம் எப்படி? நான் இங்கு ஏன் வந்தேன்?

''கடன் தொல்லை தாங்க முடியவில்லை. இங்கே தான் என்று இல்லை. மாரியம்மன் விழாவில் எலுமிச்சம் பழம் குத்திண்ட மாதிரி அறுந்து தொங்கறது. அவர் சம்பளத்தைக் கண்ணில் கூடக் கட்டினதில்லை. ஒரு பக்கம் அடைச்சுண்டே வருவேன்; பொத்தல் கூடை இன்னொரு இடத்தில் பிச்சுக்கும். இதுவும் ஒரு பிழைப்பான்னு நடந்துண்டு தானிருக்கு. யாரும் செத்துப் போயிடல்லே. ஒண்ணு பிறந்து வளந்தாச்சு. இன்னொண்ணு பிறக்கப் போறது. அம்மா கல்லு கல்லாய்ப் பூட்டியனுப்பிச்ச அவள் நகையில் வித்தது போக, வெச்சதுபோக, மிச்சம் இதுதான் —'' மஞ்சள் கயிறை வெளியில் எடுத்து ஆட்டினாள்.

ஆரம்ப அதிர்ச்சி நாளடைவில் மாறும் தன்னிரக்கத்தில் நேரும் தராசின் பாரபக்ஷத்தில், இந்தக் குளறுபடியில் யார் பங்கு எவ்வளவு என்று நிர்ணயிப்பது? நிர்ணயிக்க நான் யார்? நிர்ணயித்தாலும் அதனால் ஆகிற காரியம் என்ன? ஓயாத கதை. யாரும் கழற்றிக்க முடியாது. முடியவே முடியாது. இதுவும் நம் பண்பாடுதான். ஆனால் முறிச்சுண்டு போறவாளுமிருக்கா, என் பெண்டாட்டி மாதிரி—பெண்டாட்டி ஏது, மதுவின் தாயார்—

இருவரும் சற்று நேரம் அவரவர் சிந்தனையில் ஆழ்ந்திருந்தனர்.

''கோமதி, உனக்கு எவ்வளவு கடன் இருக்கும்?''

''ஐயாயிரம்.''

''என்ன?''

''ஆமாம். அத்தனையும் என் பேரில். வேணும்னு தான் வெச்சிண்டிருக்கேன். என்னிக்கேனும் ஒரு நாள்

நல்ல காலம் வந்து—எனக்கே சிரிப்பாய்த்தான் வரது—நல்ல காலம் வந்து ஒரு நாள் மீட்க மாட்டேனா என்கிற சபலம்தான். நம்பிக்கைக்குப் பூட்டு கிடையாது. அவர் பேரில் இருந்தால் நகையெல்லாம் இத்தனை நாளைக்கு விற்றாகியிருக்கும். கண்ணில் காட்டியிருக்க மாட்டார். ஸார், நான் உங்களைக் கேட்கணும். இத்தனை நாளா இந்த மனுஷன் சீட்டு ஆடிண்டிருக்கானே, ஒரு தடவை கூட ஜயிச்சிருக்க மாட்டானா? எப்பவும் தோல்விதானா? அப்படி ஒரு ஆட்டம் உண்டா என்ன? அப்படியானால் அந்த ஆட்டத்தில் என்ன ஆர்வம் இருக்க முடியும்?''

''அட அசடே! அவர் ஜயிச்சதெல்லாம் உன்னிடம் சொல்லுவாரா? ஒண்ணு தெரிஞ்சுக்கோ. எல். ஐ. சி. எம்ப்ளம் போல் இவர்கள் ஆசைச் சுடரைப் பொத்திக் காப்பாற்றுவதே, ஜயிப்பு, தோற்பு என்கிற இரண்டு கைகள்தான். ஜயிச்சால், அடுத்த தடவை இதுக்கு மேல் ஜயிக்க மாட்டோமா? தோற்றால், அடுத்த தடவையாவது ஜயிக்கமாட்டோமா? என்றைக்கும் நம்பிக்கையை விடாதே. காண்பது தோற்பு. ஆனால் நினைப்பது ஜயிப்பு. இவர்கள் நம்பிக்கைக்கு அழிவும் கிடையாது. சலிப்பும் கிடையாது. ஆசை அழியாச் சுடராக எரிந்து கொண்டிருக்கும். மனிதனை அழித்துக் கொண்டிருக்கும். நகையைப் பாங்கிலேதானா வெச்சிருக்கே?''

''எங்கள் பாங்கில் நகை மேலே கொடுக்கறதில்லே. அப்படியே பாங்கு கொடுக்கும் ரேட் எங்களுக்குப்பத்துமா? ஒரு சேட்கிட்ட வெச்சிருக்கு. அதுக்கே ஏகப்பட்ட சிபாரிசு. அவன் நகை மேல் பிஸினஸ் பண்ணலே; அவன் பண்றது எம்ப்ராய்டரி பிஸினஸ். கொடுத்தாலும் ரொம்பத் தெரிஞ்சவாளுக்குத் தாட்சண்யத்து மேலே யாருக்கும் தெரியாமல்—பிஸினஸ் பண்றதுன்னா லைசென்ஸ் வாங்கணுமாமே—போனால் போறதுன்னு கொடுத்திருக்கிற மாதிரி அர்த்தம். வாங்கறதென்னவோ இரண்டரை சத விகிதம் வட்டிதான். வெளியில மூன்றாம்!''

''சேட்கிட்ட மாட்டிண்டாச்சா? நீ மீளப் போறேங்கற எண்ணம் உனக்கு இன்னும் இருக்கா?''

கையை விரித்தாள். ''யார் கண்டது? நான்தான் சொன்னேனே, நம்பிக்கைக்குப் பூட்டுக் கிடையாது. என்னிக்காவது நமக்கு நல்ல காலம் வந்து அவர் மனம் திருந்தி விடிவு காண மாட்டோமான்னு ஆசைதான். நிறைவேறத்தான் போறதோ, இல்லை, அந்த எண்ணத் தோடயே மடிஞ்சுதான் போயிடுவேனோ?''

''சரி, யார் இந்த சேட்?''

''யாரோ மனக்சந்த் ஸர்க்காராம்—''

''மனக்சந்த்? மனக்—சந்த். கேட்ட பேராயிருக்கே. அதுவும் சமீபத்தில். ஆ, பெல்ஸ் ரோடா?''

''ஆமாம் ஸார், உங்களுக்குத் தெரியுமா?''

''தெரியாது, தெரிஞ்சுக்கணும்—'' எழுந்திருந்தார். ''சரி கோமதி, போய்வரேன்.''

''இத்தனை நாழிக்கு மேலேயா? என்ன ஸார், பைத்தியம் பிடிச்சிருக்கா? இங்கேயே படுத்துண்டுட்டு காலையில் சாப்பிட்டு விட்டுப் போகலாம்—''

''இல்லே குழந்தே, நான் வரேன்.''

''ஏன்? ஏன்? ஏன்?''

''உன் ஆத்துக்காரர் கூட இல்லை. இருந்திருந்து நான் இன்னிக்குத்தான் வந்து ராத் தங்கணுமா? எனக்கே நன்னா யில்லை.''

''சரியாப் போச்சு. நீங்கள்தான் இப்போ பயப் படறேள். அவர் அப்படிப்பட்ட ஆசாமியில்லே.''

''கோமதி! உன்னை நான் ஒண்ணு கேக்கப்போறேன். உன் மனஸை நீ நன்னா சோதிச்சுப் பதில் சொல்லணும். உண்மையில் உனக்கு விடிவு இருக்குன்னு நீ நம்பறயா?''

அவள் கை கூப்பினாள். அழுகை மறுபடியும் பீறிட்டுக் கொண்டு வந்தது. ''இப்படி என்னை நிறுத்தி வெச்சுக் கேட்டால் என்ன பண்ணுவேன்?''

''ஆமாம். நிறுத்தி வெச்சுத்தான் கேக்கறேன். கேக்கணும்னுதான் கேக்கறேன். உன் உண்மையை நேர் முகமாய்ப் பார். உன் மேல் உனக்கு நம்பிக்கை யிருந்தால் பதில் சொல்; இல்லாட்டா வேண்டாம்.''

கண்ணீரைக் கன்னத்திலிருந்து வழித்தெறிந்தாள். அவள் குரல் தீர்மானம் கொண்டது. திடம் கொண்டது.

''இந்த ரீதியில் நம்பிக்கையில்லைதான்.''

''அப்படியானால் அவர் இல்லாமல் நீ வாழச் சித்தமாயிருக்கையா?''

விழித்தாள். அவளையுமறியாது அவள் கை கழுத்துச் சரடை நாடி நெருடிற்று.

''அவரை நீ விஷம் வைத்துக் கொல்லணும் என்று நான் சொல்லவில்லை. நம் நாட்டுக்குச் சுதந்திரம் வந்த பிறகு இருந்து விட்டுப் போறதுன்னு விவாகரத்துச் சட்டமும் வந்திருக்கு. அது இல்லாமலே தாலி நிழலிலும் அக்ரமங்கள் நடக்கிறது. நீ விவாகரத்து பண்ணிண்டு மறு விவாகம் பண்ணிக்கணும்னு கூட நான் சொல்லவில்லை. ஆனால் உன் குழந்தையின் விடிமோட்சத்துக்கேனும் நீ அவரைப் பிரிஞ்சு வாழவேண்டியதுதான். இல்லையேல் தன் சுழலில் உங்கள் எல்லோரையும் அவன் இழுத்துடுவான். உனக்கு உன் உத்யோகமிருக்கு. உன் குழந்தையாச்சு. தனி வாழ்க்கை பெரிய கஷ்டமில்லை. இது முழுக்க அறிவார்த்தமான கேள்வி. இது நாளைக்கே நடக்கப் போகிற காரியமும் இல்லை. இன்னி ராத்திரி மூணு மணிக்கு அவர் வந்து கதவைத் தட்டினால் நீ திறக்காமல் இருக்கப் போறதில்லை - தருமராஜன் ஸார் சொன்னாரேன்னு. ஆனால் இதில் உன் மனோநிலை என்ன?''

நின்று கொண்டிருந்தவள் சோபாவில் சாய்ந்தாள். கால் விட்டுப் போச்சு. பாவம். முகத்தில் அந்தப் போராட்டத்தைப் பார்க்கப் பரிதாபமாயிருந்தது. இருந்தாலும் உண்மையை உண்மையாகத் தேடுகிறாள். புருவங்களில் ஒரு காம்பிர்யம் சிறகு விரித்தது.

''காலா காலத்தில் கலியாணம் நடக்காட்டா ஸ்திரீ ஜன்மம் புருஷனுக்காக அப்படி ஏங்கறது. ஆயிரம் சுதந்திரம் பேசலாம். பேசறோம். ஆணுக்கு நான் எதிலும் சளைச்சவள் இல்லைன்னு சவால் விடலாம். விடறோம்.''

''ஆமாம்.''

''இருந்தாலும் இந்த மஞ்சளும் குங்குமமும் இருக்கிற வரைக்கும்தான் சமுதாயத்தில் எங்களுக்கு மதிப்பு. இந்த விவாக ரத்துச் சட்டம் எல்லாம் முழு சக்தியோடு இயங்க, எங்கள் ரத்தத்தில் ஜன்மேதி ஜன்மமா ஊறித் தோஞ்சு போன இந்த மஞ்சள் குங்குமம் மறக்க இன்னும் எத்தனை ஜன்மங்கள் ஆகணுமோ? புருஷன் எங்களுடைய அந்தஸ்து சின்னம். இப்போ எனக்கு என் கணவர் மேல் ஆசை பொங்கலே. ஆனால் அவர் எனக்கு வேணும்.''

''அதுதான் நான் தெரிந்து கொள்ள விரும்பினேன், என் குழந்தே, உன்னைக் கடவுள் காப்பாற்றுவார். சரி, நான் போயிட்டு வரேன்.''

''நீங்கள் போய்த்தான் ஆகணுமா?'' முனகினாள். ''நான் தனியாத்தான் இருக்கணுமா?''

''நீ என்ன இன்னிக்குத்தான் தனியா யிருக்கயா?''

''இப்போத்தான் நினைப்பு வந்தது. பஸ் சார்ஜுக்குக் கூட உங்களிடம் காசு இல்லையே—'' தன் பையுள் துழாவினாள். அவர் கையமர்த்தினார்.

''சிரமப்படாதே. இந்த நேரத்தில் பஸ் கிடையாது.

''அப்போ ஏன் போகணும்?''

''கோமதி! சொன்னதையே சொல்லிண்டிருக்காதே.''

''இந்தாங்கோ, கையில் ஒரு அஞ்சு ரூபாயிருக்கட்டும்; போற வழியில் ஒரு நெஞ்சை வலிச்சா ஒரு சோடா குடிக்கணும்னா...''

''சோடா குடிக்கணும்னா சோடாக் கடை இந்த நேரத்துக்கு இருந்தால்தானே! குட் நைட்.''

''மறுபடியும் எப்போ நாம் சந்திக்கிறது ஸார்? இன்று காலை வராப்போல் வந்தேள். நீங்கள் வந்தது எனக்கு எவ்வளவு பெரிசு, எவ்வளவு தைரியம் தெரியுமா? இதோ, உடனே போகணுங்கறேள்!''

''இந்த நேரத்துக்கு என்னை வழியனுப்ப நீ வாசலுக்கு வர வேண்டாம். வாசலில் நிற்க வேண்டாம். உளவறிஞ்சவன் எவனாவது உள்ளே புகுந்துடப் போறான். கடவுள் துணையிருப்பார்.''

அவர் தெருவில் இறங்கி விட்டார்.

திருப்பத்தில் திரும்பிப் பார்த்தார்.

அவள் வாசலில் நின்று கொண்டிருந்தாள்.

# 4

நடை அலுப்பில் அடித்துப் போட்டாற் போன்ற தூக்கம். மாத்திரை கூட மறந்து விட்டது. இந்த அயர் விலும் ஏதோ ஒரு நுண் உணர்வின் ஊடுருவலில் கண் விழித்தால்—எதிரே நாடார், தன் மதலைச் சிரிப்புடன், விபூதி மடலுடன். பின்னால் ஆச்சி, தொங்கும் குழை களுடன், துணி மூடிய தட்டுடன். கண்ணை ஒரு தரம் கசக்கிக் கொண்டார். தூக்கத்திலிருந்து விழிப்பு வழிந்து விட்ட கனவா? இல்லை, நனவேதான், நாடாரேதான்.

''என்ன நாடார்?''

''இடியாப்பங்க.''

என்னத்தையோ கேட்டால் என்னவோ ஒரு பதில். இப்படியும் ஒரு அப்பாவியா?

அப்பாவிதானா?

லேசான, அர்த்தம் புரியாத ஒரு கோபம் லேசாய் நெஞ்சைப் பிராண்டிற்று.

''நாடார், நேற்றுப் பசி. அதனால் நானே கேட்டு வாங்கிச் சாப்பிட்டேன். இன்றைக்கு அதுமாதிரி கெடுபிடி ஒண்ணுமில்லை. இன்னிக்குத் தேவையில்லை.''

நாடார் அழுது விடுவார் போல் முகம் பிசைந்தது. ''ஐயா! அப்படிச் சொல்லாதீங்க. நேற்று சாமி வாய் மலர்ந்து எனக்குக் கொடுத்த தைரியத்தைப் பிடுங்கிக்கா தீங்க.''

''நாடார், எனக்கு இவ்வளவு பெரிய பூச்சூட்டல் வேண்டாம்.''

''நான் தப்பாப் பேசியிருந்தால் சாமி மன்னிச்சுக் கணும்.''

ஒன்று புரிந்தது. இவர்கள் விட மாட்டார்கள்.

பல்லை விளக்கிவிட்டுத் திரும்பிவந்தபோது இருவரு மில்லை. மேசை மீது தட்டும், மடலும் மூடியிருந்த துணி யைத் திறந்ததும்—நேற்றுக் குழித்தட்டில் சேவை—ஒரு கிண்ணத்தில் பால், ஒரு குழியில் தேங்காய்ப் பொடி, மற்றும் ஒன்றில் விழுது நெய்.

வேண்டாம் என்று விரைத்தாலும், தின்னும்போது வேண்டித்தானிருக்கு. தின்னத் தின்னப் பசிக்கவும் பசிக் கிறது. ஹோட்டலில் இது கிடைக்குமா? கிடைத்தாலும் இவ்வளவு அயனாய்க் கிடைக்குமா?

நாடார் வரும் சத்தம் கேட்கிறது. நாடார் மட்டும். வெள்ளிச் சொம்பு, வெற்றிலைத் தட்டுடன். காப்பி என் கிற திருஷ்டியை அனுபவிச்சாகணும். (மடக்—மடக்) அனுபவிச்சாச்சு, வெதவெதன்னு சூடுகூட இல்லை. எப்படித்தான் இதை இவர்கள் ருசிச்சுக் குடிக்கிறாளோ?

''சாமி தாம்பூலம் போடுமா?''

அவசியம் போட வேண்டியதுதான். குமட்டல் அடங்க.

''நாடார், இனி எனக்கு வேணும்னா நானே உங் களைக் கேட்பேன். நீங்கள் சிரமப்படாதீங்க. எனக்கு சங்கோஜம் கிடையாது.''

''இது எப்படிச் சிரமம் ஆகும்? இது என் சந்தோஷம், என் பாக்கியம்.''

''நாடார்! நீங்கள் எல்லாரிடத்திலும் இப்படித்தான் பேசுவீங்களா, இல்லை, இந்த ஐஸ் எனக்கு மட்டுமா?''

நாடார் கன்னத்தில் போட்டுக் கொண்டார். ''சாமிக்குத் தெரிஞ்சு என்ன இருக்க முடியும்?''

''நாடார், நாம் இப்படியே கண்ணாமூச்சி விளையாடிண்டிருந்தால் எப்படி?''

''எனக்கு வாழ்வு கொடுத்ததே சாமிதான். சாமி கிட்ட என் விஷயம் பூரா ஒப்படைச்சாத்தான் எனக்கு மனசு நிம்மதி காணும்.''

''என்னவோ புதிர் பேசறீங்க. நாடார், இப்படிக் குந்துங்க. இதோ கட்டில்லே. என் பக்கத்துலே, பரவாயில்லை.''

''இல்லேங்க. நிக்கறேங்க. அதுதான் ஒழுங்கு. இப்போத்தான் ரெண்டு வருசமா கல்லாவுலே ஒக்காந்திருக்கேனுங்க. முன்னாலே எல்லாரோடும் நானும் சேர்ந்து கஸ்டமரைக் கவனிப்பேங்க. அதுதான் ஒழுங்கு. எனக்கு நின்னு பழக்கந்தானுங்க. ஆரம்பத்துலே கடையிலே நிக்கறதுக்கே மெனக்கெட்டுப் பழக்குவாங்க.''

கடவுளே, இந்த நாடகம் எப்போது முடியும்? ''சரி, நாடார். உங்கள் இஷ்டம். நான் சொன்னாலும் கேட்கமாட்டீங்க.''

நாடார் தலையைத் தடவிக் கொண்டார். ''எங்கே ஆரம்பிக்க? புரியறதில்லே.''

''ஆரம்பத்திலிருந்தே ஆரம்பிங்க.''

''அதுதான் சரி—'' நாடார் முகம் மலர்ந்தது. ''அதுக்குத்தான் சாமி வழி காட்டணும் என்கிறது. சாமி அடியெடுத்துக் கொடுத்தபடி—நம் ஊர் தென்காசி. ரொம்ப ஏழ்மையான குடும்பம், பெரிய குடும்பம். அத்தனை வயத்துக்கும் போட்டாவணும்னா, அன்னாடம் முழுக்கஞ்சிக்கு லாட்டரி. சொந்த நிலம் கிடையாது.

''ஆனால் நாளுக்கு நாள் வயிற்றுக் கொடுமை சமாளிக்க முடியல்லே. ஊர் அப்படி ஒண்ணும் பஞ்சம் பிடிச்சதில்லை. மானம் பார்த்த பூமியில்லே. ஆனால்

ஏழை எங்கேயும் ஏழைதான். தவிர நம்ம ஊரிலே ஒரு வியாபாரம் தொழில்னு முன்னேற வழி கிடையாது. தூக்கம் பிடிச்ச ஊர். வெயில் சுள்ளுனு அடிக்காது. ஆத்தா எனக்கும் தம்பிக்கும் ஆளுக்கு ஒரு காதுத் தோடும் கட்டைக் காப்பும் கொடுத்து எப்பிடியானும் புளைச்சுக் கோங்கோன்னு உதறிட்டா. தம்பியும் நானும் சென்னைக்கு வந்து கூட்டுலே ஒரு காய்கறிக் கடை ஆரம்பிச்சோம். ஒருத்தன் கடையிலே, ஒருத்தன் காலையிலே கொத்தவால் சாவடிக்குப் போய்ச் சரக்குப் பிடிச்சு வருவோம். மிச்சப் போதுக்கு ரெண்டு பேரும் கடையிலே. குடும்பம் ஊரிலே. ஏதோ ஒரு வேளை பொங்கி ரெண்டு வேளைக்கு வெச்சுக்குவோம்.

"காய்கறிக் கடை கொஞ்சம் உருப்பட்டதும் பக்கத்துலே ஒரு இட்டிலிக் கடை ஆரம்பிச்சோம். ஊரிலேருந்து என் சம்சாரத்தை மட்டும் வரவளைச்சேன். மாவு ஆட்டணுமே! இட்டிலி மிஞ்சினா மூணு வவுத்துக்கு ஆச்சு. அன்னிக்கு சோறு வடிக்கத் தேவையில்லை. ஆனால் சரக்கு மிஞ்சாது.

"சாமிக்குத் தெரியாதில்லே. வியாபாரம் சரக்கு சுத்தத்துலே கூட இல்லே. வாய் சுத்தத்துலே தானிருக்கு. இந்த மெட்ராஸ் பாஷையெகேக்கறப்போ ஒரொருசமயம்மனசே கெட்டுப்போவுதுங்க. "ஐயா வாங்க!" "ஐயா அமருங்க!" "ஐயா வறீங்களா?" தெருவிலே பார்த்தால்கூட, "ஐயா வாங்க!" தான் எங்க பாஷையில். "போவே" கிடையாது. இதுக்காவே நம்ம ஊர்ப்பையனையே வரவளைச்சுடறது. கடை வியாபாரம் புளைச்சது. ஊர்க்காரனும் புளைச்சுட்டுப் போறான். கடையில் மரியாதைப் பஞ்சத்துனாலே மூடியாச்சுன்னு பேர் கூடாது. கூலிக்காரன் வாய்க் கொழுப்புக்கு வியாபாரம் பலியாகக் கூடாது.

"ஒரு மூணு வருசத்துக்கு முன்னாலே விஷ சுரத்துலே படுத்துட்டேனுங்க. ஊரைப் பார்க்கப் போயிட்டேன். சென்னையிலே படுத்தால் கட்டுப்படியாவாதுன்னு தெரி

யும். நமக்குள்ளது நாட்டு வைத்தியம். அட கஷாயம். ஆத்தா கையாலே காய்ச்சின கஞ்சி. மூணு மாதம் ஆளை அடிச்சுப் போட்டுட்டுது. அதுலே இடையிலே மூணு வாரம் நினைப்பே யில்லையாம். புளைச்சது குத்தால நாதன் புண்ணியம்னு ஆத்தா சொல்லிச்சு. கிளிச்ச நாராக் கிடந்தேன்- தம்பி ஒண்டியா காய்கறிக் கடை, இட்டிலிக் கடை ரெண்டையும் பாத்துக்க முடியல்லே. இவதாலிக்குப் பயந்துகிட்டு கூடவே ஊருக்கு வந்துட்டா. இட்டிலி தானே நின்னு போச்சு. காய்கறிக்கடையும் படுத்துப் போச்சு. ஒண்டியே சரக்கும் பிடிக்கணும், கடையும் பாத்துக்கணும், தானும் சமைச்சுச் சாப்பிடணும்னா நடக்கற காரியமா? போட்டிக்கு ரெண்டு கடையும் எதிரே முளைச்சுட்டுது. சரியான சோதனைக் காலம். மூட்டையைக் கட்டிக்கிட்டு தம்பியைத் திரும்பிடச் சொல்லவா?

''ஆத்தாகிட்ட யோசனை கேட்டா என்ன சொல்லும்? 'என்கிட்டே இருந்ததைக் கொடுத்தாச்சு. நான் கை கொட்டினால் காப்புச் சத்தம் கேக்காது. கைச்சத்தம்தான் கேக்கும். நீங்க எங்கு இருந்தால் எனக்கென்ன? நான் இங்கேதானே இருக்கேன்.'

''ஆத்தா எடக்கா நல்லாப் பேசும். அந்தப் பேச்சுக்கு மறுப்பும் பேச முடியாது. அதுலே உண்மை யிருக்கல்லே?

''இனிமேத்தான் விசயத்துக்கு வரேனுங்க.

''அன்னிக்கு வெள்ளிக்கிழமை. சுரம் விட்டு மூணு நாளாவுது. இன்னும் உடம்புக்கு ஊத்திக்கல்லே. சிம்மக் குட்டி புதுப் பிறப்புடா!

''நிக்கக்கூட தள்ளல்லே. விடிகாலைகிணத்தடியில் பல் விளக்கிட்டிருக்கேன். தூக்கம் தெளியல்லியா, மயக்கமா தெரியல்லே. பல் விளக்கிட்டேன். அப்போ பளிச்சுனு திடுதிப்புனு வந்தது தெரியாமல் கழுத்திலிருந்து காலை மறைச்சு தும்பையாட்டம் வெள்ளை உடுத்தி, ஐயா கிணத்தடியில் நிக்கறாஹ.''

''என்ன?'' தூக்கி வாரிப் போட்டு அவர் எழுந்து உட்கார்ந்தார்.

''ஆமா, சாமியேதான்—''

''நாடார், பூ சுத்தினீங்க. இப்போ காது குத்தறீங்களா?''

நாடார் உச்சந் தலைமேல் உள்ளங்கையை வைத்துக் கொண்டார். ''ஐயா, ஆணை வைக்கக் கூடாதுன்னு பெரியவங்க சொல்லுவாஹ. ஆத்தாளும் அதுதான் சொல்லும். ஐயா குலமென்ன, வயசென்ன, புத்தியென்ன! கேடுகெட்டவன் நான். நெருப்போடு விளையாடலாமா? ஐயாவுக்கு இதுவே வியப்பா இருக்கு. ரெண்டு மாதங்களுக்கு முன் ஐயா மாடிக்குக் குடி வந்தபோது, முதன் முதலா நான் சாமியைப் பார்க்க நேர்ந்தபோது, ஐயாவை அடையாளம் கண்டுகிட்டபோது, எனக்கு எப்படி இருக்கும்? சாமி நினைச்சுப் பார்க்க வேண்டிக்கறேன். மூணு வருஷத்துக்கு முன்னால் சாமி வழி காட்டிய தோடல்லாமல், கூடவே துணையிருக்கவும் வந்திருச்சின்னு நினைக்கறப்போ நான் என்ன புண்ணியம் செய்தேன்! என் புண்ணியம் மட்டுமல்ல. ஏதோ முன் தலைமுறைக் கொடுப்பனை—''

''இதென்னய்யா கூத்து? முன்னே பின்னே ஒருத்தரையொருத்தர் பார்க்காமல் நினைப்பில் நான் எப்படி வர முடியும்? இதை எப்படி நம்பறது? நாடார், நீங்கள் கண்டது தூக்கத்தில் கனவுகூட அல்ல. அப்படி எத்தனையோ பேத்தல் வரும். அதில் நீங்கள் இப்போ என்னைக் கண்டதை வெச்சுகிட்டு கனவில் கண்டதா உங்களையும் ஏமாத்திக்கலாம், கேக்கறவனையும் ஏமாத்தலாம். இப்பவும்தான் ஏமாத்துக்கு வழியில்லையா என்ன? இதுவேதான் வழிதானோ என்னவோ? நீங்கள் சத்தியம் பண்ணினால் நான் நம்பணுமா என்ன?''

நாடார் உச்சந்தலையில் மறுபடியும் உள்ளங்கையை வைத்துக் கொண்டார்.

''ஐயா நம்பணும்னு சொல்ல நான் யார்? எனக்கு நடந்ததை நடந்தபடி ஐயாகிட்ட ஒப்படைக்கிறேன். ஆனால் ஒண்ணு; ஐயாவுக்குத் தெரியாமல் எனக்கு ஒண்ணும் தெரியாது. எனக்குக் கதை கட்டிப் பேசற அளவுக்குச் சாமர்த்தியம் கிடையாது. ஆனால் நெஞ்சில் வேரூணிப் போனதையும் என்னால் களைய முடியாது—''

நாடார் சாஷ்டாங்கமாக விழுந்து எழுந்தார். சங்கடம்! சங்கடம்!!

''மேலே என்ன நடந்தது, சொல்லுங்க.''

''ஐயா கிணத்தடியில் தோற்றமா வந்து நின்னு குனிஞ்சு, தன் காலடியில், தரையில், ஒரு அடிசுத்தளவுக்கு ஒரு வட்டம் விரலால் கோடு எழுதி அதைச் சுட்டிக் காண்பிச்சுட்டு மறைஞ்சுட்டார்.''

''மறைஞ்சுட்டேனா?''

''ஆமாம், காத்தோடு கலந்துட்டீங்க. கண்ணைக் கசக்கிட்டுப் பார்த்தால் வட்டம் மட்டும் பளிச்சுன்னு தெரியுது. அந்த அளவுக்குள் தோண்டினதும், ஒரு அடி ஆழத்துலே ஒரு செப்புத் தகடு கிடைச்சுதுங்க. அதில் முக்கோணத்து நடுவில் தாமரையில் மகாலட்சுமி எழுதி யிருக்குது. எடுத்துப் போய், மாடத்துலே வளர்த்தின அன்னிலிருந்து சக்கரம் மாறிட்டுது. சென்னைக்கு எடுத்துப் போயிட்டேன். வியாபாரமா? தூள் பறக்குது. கறிகாய் கடையாயில்லே, ஏதோ மளிகைக் கடையாட்டம் கூட்டம். போட்டிக் கடை மூடிப்போச்சு. அடுத்த வருடம் மளிகைக் கடை வெச்சுட்டேன்.''

''நாடார்! ஒரு நிமிஷம் நீங்கள் யோசித்துப் பாருங்க. நீங்களே சொல்லுங்க. இதெல்லாம் நடக்கற காரியமா உங்களுக்கே தோணறதா?''

நாடார் புன்னகை புரிந்தார். ''சாமி என்னைக் கேட்டு சோதிச்சுப் பாக்குது. நம்பினவங்களுக்கு நடராஜா, நம்பாதவங்களுக்கு யமராஜா, ஐயாவோ தருமராஜா! ஐயாவேதான் சொல்லணும்.''

அவர் நெற்றிப் பொட்டை இரு கைகளாலும் அழுத்திக் கொண்டார். ''இந்த நாடக பாணி போதுமய்யா! இனிமேல் என் பேரை அழிச்சு எழுத முடியுமா?''

நாடார் கை கூப்பினார். அவர் குரலில் இதுவரை காணாத ஒரு அழுத்தம், தைரியம், தீர்மானம் ஒலித்தது. ''ஐயா நல்லா வாழ்ந்துகிட்டிருக்கணும். அவர் பேரும் புகழும் பின்னாலேயும் நிலைச்சு நிக்கணும்! ஆனால் ஐயாவை ஒண்ணு கேக்க விரும்பறேன். ஐயா மூலம் வளர்ந்திருக்கும் இந்தக் காய்கறிக்கடை மளிகைக்கடையை அழிக்க முடியுமா? ரெண்டு வருசமா ஐயா ஆசியில் அமோகமா ஓடிட்டிருக்கும் பாத்திரக் கடையை அழிச்சு எழுதறதா? எல்லாக் கடையும் இன்னும் நடத்துகிட்டுத்தா னிருக்கு. நல்லா நடக்குது. தம்பி சென்னையிலே தனியாவே சொந்த வீடு வாங்கி, தனியா சம்சாரம் பண்ணறான். இதெல்லாம் அழிச்சு எழுத முடியுமா? தவிர, எல்லாத்துக்கும் முக்கியம், ஐயா கொடுத்த மஹாலச்சுமித் தகடு இன்னும் மாடத்துலேதான் இருக்குது. அது அப்பிடியேதானே இருக்கு? ஏதோ வந்தேன், இதோ மறைஞ்சு போனேன்னு இல்லியே!''

''நாடார்! நீங்க தாய்னு நினைச்சு குட்டிச் சாத்தானைக் கும்பிடறேங்களோ! பழி என் மேலா?''

நாடார் குரல் இன்னும் ஒரு மாத்திரை ஓங்கிற்று.

''எனக்கு வந்திருக்கும் நல்லதெல்லாம் இப்படி வரும்னு நினைச்சிருப்பேனா? வந்தபடியே போவறதுக்கும் என்னைக் கேட்டுண்டு போவப் போறதில்லே. நான் யாருக்கும் தீம்பு நினைச்சதில்லே. தீம்பு இழைக்கக்கூட ஓரளவு சாமர்த்தியம் வேணும். அது கூட என்கிட்ட இல்லே. ஆண்டவன் படியளக்கறதுதான். நல்லாத்தான் அளக்கறான். எனக்கு ஒரு குறையுமில்லேங்க. ஐயாவை

நான் நேரில முதலாட்டிக் கண்டப்போ, உண்மையிலேயே பயம். 'தெய்வத்தோட பேசத் தைரியம் வருமா? அடே! நீ கண்டது கனவு இல்லை; உண்மைதான்னு உணர்த்திக் காட்டற மாதிரி நேரிலேயே வந்திருக்கங்க. ஆனால் எந்த நிமிசம் காத்திலே கரைஞ்சு போயிடுவீங்களோன்னு ஒரு அச்சம் கூடவே இருக்கத்தானிருக்கு. என்னவோ அவ்வளவு ஸன்னமா உங்களைப் பார்த்தால் எனக்குத் தோணுது."

"நாடார், நல்லாப் பேசறீங்க. உங்கள் பேச்சு நயத்துலே நீங்கள் சொல்றதையெல்லாம் நம்பிடுவேன்."

"ஐயா, எனக்கு நல்லாப் பேச வராது. நாக்கு தடிப்பு."

தருமராஜன் பெருமூச்செறிந்தார். அவருக்கு அசதி கண்டு விட்டது.

"எனக்குத் தெரிஞ்சது, இல்லை, எனக்குத் தோணுது ஒண்ணு சொல்றேனுங்க. ஐயாவுக்குத் தெரியாமலேயே ஐயாகிட்ட அருள் தங்கியிருக்கு."

நாடாருக்கு வாயடைத்து விட்டது. ஒரு கும்பிடு போட்டு விட்டுக் கீழே இறங்கி விட்டார்.

வெகு நாழிகை இருப்புக் கொள்ளவில்லை. அலாவுதீனின் அற்புத தீபம், விக்ரமாதித்தனின் கூடு விட்டுக் கூடு பாயும் கதை, அராபியன் நைட்ல பறக்கும் குதிரை, பறக்கும் ஜமக்காளம்—கட்டுக் கதையோ கண் கூடோ அது அது அந்தந்தக் காலத்தோடு நின்னுடணும். காலம் மாறி வந்தால் அடாது. முதுகெலும்பில் ஒரு முள் எலும்பு கூட முளைச்ச மாதிரி வேதனை தவிர என்ன மிச்சம்?

திடீரென்று ஒரு அர்த்தங் கெட்ட, வயது கெட்ட, மானங்கெட்ட சபலம் அடித்துக்கொண்டது. (சபலத்துக்கு வயது உண்டா என்ன?) நாடார், நீர் என்னால் அடைஞ்

சிருக்கும் செளகரியத்துக்கு காணிக்கையா ஒரு ஐயாயிரம்! அவ்வளவுதா.

இதென்ன தாசி அபரஞ்சி கதையா? கனவில் வந்ததுக்குத் தக்ஷிணை? நாடார் சொன்ன கதையை நான் வளர்க்கணுமா? ஏற்கனவே அவன் முழம்போட்டு அளந்து வெச்சிருக்கும் என் முட்டாள் தனத்தை நானே உறுதிப் படுத்தணுமா? குருட்டு யோசனைக்கும் ஒரு முற்றுப் புள்ளி கிடையாதா?

ஒரு பெரிய சுமையைத் தூக்கி எறிவது போல், யோசனையை உதறித் தள்ளிவிட்டு, பெட்டியிலிருந்து புத்தகத்தை யெடுத்துத் தன் கணக்குகளை ஆராயப் புகுந்தார். ஆமாம், நினைத்த மாதிரியே இன்னும் பத்து நாட்களில் ஒரு ஐயாயிரம் நீண்ட தவணைத் தொகை திரும்புவதற்குத் தயாராகிக் கொண்டிருக்கிறது. ஆனால் இதைத் தூக்கிக் கொடுத்து விட்டால் சோற்றுக்கு மாதாந்திர வட்டியை நம்பியிருக்கும் என் பாடு என்னவா கிறது? என்ன செய்யலாம்? இன்று காலை யிருந்த விச்ராந்தி என்ன! இப்போ ஏன் ஊர்க் கவலையைப் பட்டுண்டு இருக்கேன்? என்ன செய்யலாம்? பிரம்புப் பிடியின் வளைவு போல் கேள்வி, கழுத்தில் மாட்டி யிழுக்கிறது.

ஊரா, உறவா, என்ன தட்டுக்கெட்டுப் போறது? உலகத்தின் துயரத்துக் கெல்லாம் நான் பொறுப்பா? என்னால் தீர்க்கவும்தான் முடியுமா?

இத்தனை வருடங்கள் கழித்துத் தற்செயலாகச் சந்தித்தோம். சந்தோஷமாய்த்தானிருந்தது. இல்லே என்கலே. கஷ்டத்தைச் சொன்னபோது கஷ்டமாய்த் தானிருந்தது. அனுதாபம் தோன்றியவரை உண்மைதான். ஆனால் ஒன்றும் செய்ய முடியாவிட்டால், எதுவுமே உதட்டு உபசாரத்தில்தானே முடிகிறது. இந்த ஐயாயிரத் தைக் கொடுத்தாலும் அவள் கஷ்டம் விடியப் போவதில்லை. நானே கடனைக் கட்டி நகையை மீட்டுக்

கொடுத்தாலும், இன்று இல்லா விட்டால், நாளைக்கு இன்னொரு இடத்தில் வைக்கப் போகிறாள். அவர்கள் நிலைமை அப்படி. அவளை அவன் உருப்படவிடப் போவதில்லை. அவனும் உருப்படப் போவதில்லை. இந்தத் தேறாத கேஸை வெச்சுண்டு என்ன செய்யலாம்?

ஆனால் நகைகள் அந்தக் காலத்து நகைகள். மூழ்கிப் போனாலும் சரி, புதுசாப் பண்ணினாலும் சரி—அது போல் வராது. நகைகளின் விவரங்களைக் கூட நான் தெரிஞ்சு வெச்சுக்கல்லே. வெட்கக் கேடு. தெரிஞ்சு வெச்சுண்டு என்ன செய்யப் போறே?

கட்டிலில் படுக்கையை விரித்தே படுத்தார். நேற்று சரியான நடை. நேற்று சரியான தூக்கம். அதுவும் மெய் மறந்த தூக்கம். மறுபடியும் கிடைக்குமா? இப்போ கூட படுக்கை கதகதப்பு சுகமாய்த் தானிருக்கு.

இவளால் ஆகவேண்டிய காரியம் என்ன? இவளுக்காக நான் ஏன் இவ்வளவு கவலைப்பட வேண்டும்? மிச்ச மிருக்கிற கொஞ்ச நாளை மீன் கொத்தி மாதிரி காலத்தைக் கழித்து விட்டுப் போகாமல்... சொல்வரை காட்டும் இரக்கம், இரக்கமில்லையா? செயல் பட்டால் தான் வீரமா? வீரம் பண்ணி யார் யாருக்கு நிரூபணை? எனக்கு நானேயா? இது அவசியமா? நான் என்ன செய்ய முடியும்?

என்ன செய்யலாம்?

நாடாரே, நல்ல ரீல் விட்டீரய்யா!

காசில்லாமல் என்ன செய்ய முடியறது?

'ஐயா காத்திலே கரைஞ்சு போயிடுமோன்னு அஞ்சினேன்!' ஐயோ, என்ன நகாசு!

ஆனால் கோமதியும் அதுதானே சொன்னாள்—நீங்கள் கரைஞ்சு போயிடுவேளோ'ன்னு.

இதென்ன புது அம்சம்? கிள்ளிப் பார்த்தால் வலிக்கறதே! நான் கனவல்ல.

'ஐயா அறியாமலே ஐயர்கிட்ட அருள் இருக்கு.' இதை நான் ஏத்துக்கணுமா?

என்ன செய்யலாம்?

புல்லாங்குழலை எடுத்து வாசிக்க ஆரம்பித்து விட்டார்.

# 5

அப்போதுதான் யாரோ ஆள் மூலம் வந்த அபிஷேக திரவியங்களை வெகு உன்னிப்பாய்ச் சரி பார்த்துக் கொண்டிருந்த மணி, நிழல் தட்டுவது உணர்ந்து நிமிர்ந்து... நிழலுக்குச் சொந்தக்காரனைக் கண்டதும், முகம் கறுத்தது.

ஏளனமாக, ''ஏது, பஞ்சகச்சமும், இடுப்பில் அங்க வஸ்திரமும், கட்டுக் கட்டா விபூதியும் அமர்க்கள மாயிருக்கு! நாளைக்குத்தானே உன் முறை? இன்னிக்கே எழவெடுக்க வந்துட்டியா?''

''இன்னிக்கு வெள்ளிக்கிழமை அம்பாளுக்கு அபி ஷேகம் பண்ணப் போறே. ஆகாத வார்த்தைகளைச் சொல்றே!''

''என் வயத்தில் அடிச்சதுமில்லாமல் நியாயம் வேறே பேச வந்துட்டான்!''

அவர் சிரித்து விட்டார். ''என்னப்பா, எல்லாரையும் போல் நான் தரிசனம் பண்ணக் கூடாதா?''

"ஓஹோ! அப்படியா? அப்படியானால், இன்னிக்கு உன் இடம், உள்ளே இவ்வளவு நெருக்கமாயில்லே. கொஞ்சம் வெளியே தள்ளி நில்." அவரைப் பார்க்கப் பார்க்க மணிக்கு உள்ளே கொழுந்து விட்டு எரிந்தது.

அவருக்குச் சிவப்பு மின்னல்கள் கர்ப்பக்கிருஹத்தின் இருளில் கண்ணெதிரே கொடி படர்ந்து மறைந்தன. ஆனால் அடக்கிக் கொண்டார். "மணி, கோவிலை நான் கோர்ட்டாக மாத்த விரும்பலே. நீ இவ்வளவு துடுக்காகப் பேச வேண்டிய அவசியமுமில்லே. உனக்கே தெரியும், சாஸனப்படி நான் இந்த நிமிஷமே உள்ளே வந்து, உன் கைக் கோவில் மணியைப் பிடுங்கிக்கலாம். இந்த க்ஷணமே—"

மணிக்குத் தன்னை மட்டுப் படுத்திக் கொள்ள வேண்டிய உசிதம் தோன்றிற்று. ஆனாலும்- "நீ ஏதோ பூச்சி காண்பிச்சிண்டிருக்கையே, அந்த டாகுமென்டையும் நான் பார்த்துடறது நல்லதுன்னு தோணறது."

"தாராளமா! ஞாயிறு காலை காண்பிக்கறேன். உனக்கே ஒரு நகல் எடுத்தும் கொடுக்கறேன். நீ இங்கு வரையா, நான் உன் வீட்டுக்கு வரட்டுமா?"

மணிக்கு நிச்சயமாய்ப் படம் படுத்தது. 'எப்படியானாலும் சரி' என்று முணுமுணுத்தார்.

"நாம் ரெண்டு பேருமே சேர்ந்து தர்மகர்த்தாவிடம் சாஸனத்தை ஒப்படைச்சுடுவோம். அப்பா உனக்கு அது குரங்கு நியாயமாயிடும். அப்போத்தான் உனக்கும் பொது நியாயம் தெரியும். நான் வெளியே போய் உட்கார்ந்துக்கறேன். உள்ளே புழுக்கமாத்தானிருக்கு."

மணிக்கு அஸ்தியில் 'சில்' கண்டது இவன் தலை முறைக்கும் குழி பறிக்கிற மாதிரி, அதில் இன்னும் என்னென்ன புதைவாணமிருக்கோ! எங்கேயோ புத்தி விருந்த பாம்பு ஜலதாரை வழியா வீட்டுக்குள் புகுந்த

மாதிரின்னா ஆயிடுத்து! இந்த மஹானுபாவன் எங்கிருந்து வந்தான்?

மண்டகப்படிக்காரன் வருவதற்கு இன்னும் நேரம் நிறைய இருக்கு-மேல் துண்டால், தோளிலும், அக்குளிலும் படரும் வேர்வையை ஒற்றியபடி வெளியில் வந்து உட்கார்ந்து கொண்டார்.

'படவா! உருவின கத்தி மாதிரி பளப்பளன்னு ஏதோ நெருப்பிலே குளிச்சு வந்த மாதிரி எப்படி யிருக்கான் பாரு!' அவரைப் பார்க்கப் பார்க்க எரிச் சலாய் வந்தது. இவனுக்குன்னு நம் குடும்பத்துலேயே ஒவ்வாத ஒரு கலர், ஒரு உடல் வாகு. ஒழுங்காய் இவன் அப்பனுக்குப் பிறந்திருப்பானா, இல்லே...காலம் இப்பத் தான் கெட்டுக் கிடக்கா, குந்தி நாளிலிருந்தே நாசம் தான்! தேவ ரஹஸ்யத்தைப் போல ஊழல்—உவ்வே!

''என்ன மணி, ஏன் குமட்டறது?''

மணிக்குப் பேச்சு எழவில்லை.

''என்ன மணி, உடம்பு சுகமில்லையா? தலையைப் பிடிச்சிண்டிருக்கையே!''

என்னைப் பத்தி இவனுக்கென்ன கரிசனம் வேண்டி யிருக்கு? வேஷதாரி!

''சாக்கடையில் ஸ்னானம் பண்ணிண்டிருக்கேன்.''

''ஷ்—!''

''தலை வலியா, தலையெழுத்தா தெரியல்லே, அப்படிக் கனக்கிறது.''

''அனாவசியக் கவலைப்படாதே. என்னதான் செய் யறது? நீதான் என்னைச் சந்தேகப்படறே. உன் மேல் மனஸ்தாபப்பட எனக்கு என்ன இருக்கு? நீ விரோதம் கொண்டாடப் பார்த்தாலும், உன் உடம்பைப் பற்றி விசாரிக்க நான் கடமைப் பட்டிருக்கேன். உரிமை உண்டு.''

மணிக்கு உள்ளே ஏதோ கிடுகிடுத்தது. இவனைப் பத்தி ஒண்ணுமே புரிஞ்சுக்க முடியல்லியே!

''தலை வலிக்கிறதா?''

'ஆம்' என்று தலையைப் பிடித்துக் கொண்டு, தலையை ஆட்டினார். தொண்டையை லேசாக அடைத்தது. பரிவுதானமாகக் கேட்டு ரொம்ப நாளாச்சு. அதுக்குப் பெரியவர்ள் வீட்டில் இல்லை. இருக்கிறவாளும் இங்கிதமாயில்லே! 'நீ சரியாயிருக்கையா, நாங்கள் சரியாயிருக்க?' என்கிற அடிப்படையில் நடத்தைகள், நடப்புகள். எனக்குக் கோளாறே இதுதானோ? இவன் என் மன நிலையைப் புரிஞ்சுண்டு அதையே வாத்யம் வாசிக்கிறான். விழியோரம் கண்ணீர் உறுத்திற்று.

தர்மராஜன் நகர்ந்து வந்து, அருகில் உட்கார்ந்து கொண்டு, மணியின் நெற்றிப் பொட்டைத் தடவினார். மணிக்கு எங்கோ கொண்டு போயிற்று. தூக்கமா? அரை மயக்கமா? சந்தேகமில்லாமல் தனக்கு இதுவரை அனுபவமில்லாத ஒரு சுக மண்டலம்.

''இப்போ எப்படி யிருக்கு?''

வெண் மேகங்களின் நடு மத்தியிலிருந்து, மன மில்லாத பதிலில் குரல் புறப்பட்டது.

''ரொம்ப தேவலை, ரொம்ப தேவலை—''

''மணி!''

சுற்றிப் பஞ்சுமேகம் படர்ந்து ஆளைச்சுற்றிக் கொண்டிருந்த சுகத்தில், நினைப்புக்குப் பதில் சொல்லக்கூட அலுப்பாயிருந்தது. வாயுள் கூட அந்த மிட்டாய்ப் படர்ச்சி புகுந்து கொண்டது. தித்திக்கவில்லை. ஆனால் வெகு ஸுகம்.

''மணி!''

"—ங்—ங்—?"

"மணி, அபிஷேகம். அர்ச்சனையெல்லாம் நான் பண்றேன். நீ ரெஸ்டுல இரு."

தன் மேல் படர்ந்து கொண்டு, அவரைத் தன்னுள் இழுத்துக் கொண்டிருக்கும் சுக நித்ரையின் சுழிப்பினின்று ஒரு அசுர ப்ரயத்தனத்தில் தன்னை உதறிக் கொண்டு, மணி விழித்துக் கொண்டார்.

"இது மாதிரி ட்ரிக்ஸ் ஏதேனும் நீ காட்டுவேன்னு எனக்கு அப்பவே தெரியும். என்னை வசியம் பண்றையா?"

அவர் புன்னகை புரிந்தார். "நீ மனோவசியம் ஆனாயோ என்னவோ தெரியாது. ஆனால் நான் பண்ணவில்லை. மனப்பூர்வமா அதெல்லாம் எனக்குத் தெரியவும் தெரியாது."

"எல்லாம் நீ சொல்றதுதான்! உனக்கு இன்னதுதான் தெரியும் தெரியாதுன்னு எனக்கென்ன தெரியும்?"

"இதோ பார் மணி, உன் வருமானத்தில், கற்பூரத் தட்டில் விழற அஞ்சு காசு கூட எனக்கு வேண்டாம். நீ கொடுத்தால் கூட வேண்டாம். நைவேத்தியத்தில், நீ உள்ளங்கையில் கிள்ளப் போற சுண்டலில் ஒரு பருப்புகூட எனக்குத் தேவையில்லை. இன்னிக்கு அம்பாளைத் தொட்டு அபிஷேகம் பண்ண மட்டும் அனுமதி கேட்கிறேன்."

"அதென்னடாப்பா, பக்தி அப்படி கரை புரண்டு ஓடறது?"

"மனசு என்னவோ சஞ்சலமசயிருக்கு. அமைதியைத் தேடறேன்."

"அமைதியை நீ எப்படி எதிர்பார்க்கறே?"

"திரும்பத் திரும்ப இதே பல்லவிதான் பாடிண்டிருக்கப் போறோமா?"

அவர் தன்னிடத்துக்குப் போய் உட்கார்ந்து கொண்டார்

ஒரு கால் மடித்து, மறுகாலைக் குத்திட்டு, குத்திட்ட காலின் முட்டி மேல், யோக தண்டம் போல் ஒரு கையும் மறு கையைத் தரையிலும் ஊன்றிக் கொண்டு, மணி தூணின் செதுக்கலின் மேல் தலை சாய்ந்தார்.

கோவில் வாசலில் கிணற்றிலிருந்து ஒன்றிரண்டு பெண்கள் தண்ணீர் சேந்திக் கொண்டு சென்றனர்.

மதில் மாடப்பிறைகளில் புறாக்கள் கொஞ்சின.

வெய்யிலில் பொன் ஏறிக் கொண்டிருந்தது.

மணி கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டார்.

மண்டகப்படிக்காரன் இன்னும் காணோம். இந்தப் பெரிய மனுஷன்களே இப்படித்தான். எந்தப் பக்கமும் போக விட மாட்டான்கள். கழுத்தறுப்பான்கள்.

''அப்பா ! அப்பா!''

குட்டி, அழுக்குத் துணி போர்த்த ஒரு பிட்டுக் கூடையுடன் காட்சியளித்தாள். புது முகத்தைப் பார்த்ததும், தன் முகத்தை முற்றலாக்கிக் கொண்டாள். இந்தக் காலத்தில் பிஞ்சே கிடையாது. எல்லாமும் வெம்பல்தான்.

''உள்ளே கொண்டு போய் வை!''

அப்படியே செய்துவிட்டு, அப்பாவிடம் காதண்டை கிசுகிசு...

அவர் காது கேட்க - ''இது உன் பெரியப்பாடீ!''

உடனே அவள் விழுந்து பெரியப்பாவுக்கு நமஸ்கரித்தாள். வயது பத்து, பன்னிரண்டு.

பெரியப்பா ஆசிர்வாதம் பண்ணிக் குழந்தையை எழுப்பி விட்டு, இடுப்பைத் துழாவி-

"அப்பா! பெரியப்பா அஞ்சு ரூவா தந்திருக்கா!"

மணிக்கு உடம்பு அலுப்பு திடீரென்று அதிகரித்தது. "இன்னும் அண்டாவில் ஜலம் கட்டவில்லை?" என்றார்.

"தருமு! உன்கிட்டத்தான் சொல்லிண்டிருக்கேன், குடம் உள்ளே யிருக்கு"

அவருக்கு அப்போத்தான் புரிந்தது. சுறுசுறுப்பாய் எழுந்திருந்தார்.

மணி சௌகரியமாய்த் தூண் மேல் சாய்ந்து கொண்டார். மணிக்கு ரொம்ப அலுப்பாயிருந்தது.

நிர்மாலியத்தையும் ஆடையையும் களைந்து, விக்ரஹத்தின் மேல் கை பட்டவுடன், தருமராஜனுக்கு மூர்ச்சை போட்டமாதிரி ஆகிவிட்டது. கர்ப்பக்ருஹத்துக்கு வெளியே நிற்பவர், மற்ற சூழ்நிலையின் நினைவு அனைத்தும் ஒரு பெரும் இருள் குழைவில் கலந்து போயின.

கூரையிலிருந்து சங்கிலியில் பெரிய அகல் விளக்கு லேசாக ஆடிற்று. சுடர் மட்டும் நட்ட சிலையாக அசைவற்று, சிவந்து, பழுத்து, ஓரத்தில் நீலம் காட்டி, திரும்பவும் சிவந்து...கமலாம்பிகை சுடர் வண்ணமாக மாறி, தேவி சொரூபமானாள்.

பிரதிஷ்டையாகி இருநூறு வருடங்களாயிருக்கும் என்று பெரியப்பா சொல்லியிருக்கார். இந்தக் குடும்பமே தலைமுறையாகப் பூஜை செய்து வருகிறது.

பெரியப்பா இருந்தவரை, பெரியப்பா விக்ரஹத்திடம் யாரையும் பூஜை செய்ய விடவில்லை. அண்டாவை அபிஷேகத்துக்கு நிரப்புவோம். தீபாராதனைத் தட்டுகள், பஞ்சமுகம், குடவிளக்கு, உபசாரங்கள், சாமரம், கொடி, கண்ணாடி, இத்யாதிகளை எடுத்துக் கொடுப்போம். ஆனால் அத்தோடு சரி. கற்பூரத்தட்டைப் பெரியப்பாவிடமிருந்து வாங்கி, வெளியே கொண்டு

வந்து காட்டி, விழும் சில்லரையை இடுப்பில் நிமிண்டிப் போம்—மணியோ, நானோ.

பெரியப்பா தன் ஏக சிந்தாக்ரஹத்தில் அப்படிக் காத்த தூய்மைதான் இன்னும் அவள் முகத்தில், நெற்றியில், கன்னங்களில், சிரிப்பில், மோவாய்க் குழிவில் விளையாடுகிறது. இல்லாவிட்டால் நானும் மணியும் அந்த ஆசார சீலத்தைக் கனவிலும் கருத முடியுமா?

மூர்த்தி என்னவோ சின்னதுதான். அடி அகலமான மேடையில் ஆரம்பித்து, அது படிப்படியாகக் குறுகி, தாமரையில் அம்பாள் நிற்கிறாள். உத்ஸவர் கிடையாது. ஆகையால் புறப்பாடுகளுக்கு வழியில்லே. நினைத்த அரை நிமிட, கால் வினாடிக்குக் கனத்த தவத்தின் தருணங்கள் அனைத்தும் ஒரு முகமாய் ஆஹுதியான காரணமோ என்னவோ, கமலாம்பிகை, அவளுடைய அழகு ரஹஸ்யம் ப்ரபை போல் அவளைச் சூழ, அதன் நடுவே கமழ்கிறாள்.

கல்லின் தரமா, இழைப்பின் உயர்வா தெரியவில்லை. உள்ளங் கைக்கு அவள் ஸ்பரிசம் அவ்வளவு மிருது.

அடி வாய், அர்த்தத்தில் கவனமில்லாமல், மந்திரங் களைத் தானே உச்சரிக்கின்றது. என்றோ நெஞ்சடியில் புழக்கமில்லாது புதைந்து போன மந்திரங்கள். அவள் தனக்குத் தொடுக்கும் புஷ்பங்களாக வரவழைத்துக் கொள்கிறாள். எண்ணெயை எடுத்து, அவள் அங்கங்கள் மேல் அப்புகையில் மனம் அஞ்சுகிறது. அம்மா, இது எனக்குப் புது அனுபவம். தப்பில்லாமல் செய்யணும்னு சிரமப் படறேன். என் சிரமம் பார்த்தாவது என்னை மன்னிச்சுடு. இவ்வளவு நெருக்கத்தில் உன் முகம் எனக்குக் கண் கூசறது.

அவள் புன்னகை புரிகிறாள்.

எண்ணெய்க் காப்பில் மேனி பளபளக்கிறாள். உச்சரிக் கும் மந்திரங்கள் என் கவசம்.

ஒவ்வொரு அபிஷேகத்துக்கும்—தண்ணீரை வீசி

இறைத்து, முன் அபிஷேகத்தின் சுவடுகள் அழிந்த பின், அடுத்த அபிஷேகம்-சந்தனம், தேன், பஞ்சாமிர்தம், தயிர், பால்—ஒவ்வொரு அபிஷேகத்துக்கும், உருவம் ஒரு புது பரிணாமத்தில் பிதுங்குவது போல், நெருங்கி வருவது போல், ஒரு பிரமை தட்டுகிறது.

கர்ப்பக்ருஹத்துக்கு வெளியே, இரண்டு வரிசையாக நின்று கொண்டு, தரிசனம் பண்ணிக் கொண்டிருப்பவர்களை அந்த ஸான்னித்யம் கவ்விக் கொள்கிறது. கற்பூரச் சுடர், ஓங்காரத்தை எழுதி, அதனுள் அவளை அடைப்பது போல், தட்டில் வட்டமிடுகையில் அம்பாளின் மூக்குத்தி—அப்பப்பா! மயிர் கூச்செறிகிறது.

நான் கமலாம்பிகை.

வருடக் கணக்கான நித்திரையிலிருந்து இன்று விழித்தெழுகிறேன்.

—தருமராஜன் தன்னை யிழந்தார்.

நெற்றியில் சிவப்புக் கல் கண் திறக்கிறது.

என்ன ஜாஜ்வல்யமான புன்னகை!

—தருமராஜன் நெற்றி முத்திடுகிறது. வேர்வையாலல்ல.

நெஞ்சில் ரத்த நாளங்கள் புடைத்துக் கொள்கின்றன.

செம்பருத்தி பூத்தாற்போல், தர்மராஜன் முகம் குங்குமப் பிழம்பு.

நினைவின் அலமாரியில் புற்றுப் பூத்திருந்த ஒரு ஸ்லோகம் தன் யோகம் கலைந்து, எழுந்து, சிறகு விரித்து, அவர் நெஞ்சை மிதித்துக் கொண்டு, அவர் குரலில் கூடு எடுத்து, கணீரென்று எழும்புகிறது.

**அம்பா ஸாம்பவி சந்த்ரமௌலி ரபலா**
**பரணா உமா பார்வதி**

***காளி ஹைமவதி ஸிவாத்ரி நயனி***
***காத்யாயினி பைரவி...***

கட்டுண்டு அனைவரும் ஸ்தம்பித்து நிற்கின்றனர்.

மணிக்கு, ஒரு வகையில் இன்று கோவில் களை கட்டியிருக்கு. பக்தர் வரிசை த்வஜ ஸ்தம்பம்வரை நிற்கிறது. இன்று வெறும் கற்பூரத் தட்டில் மட்டும் 10, 15க்குப் பஞ்சமில்லை. இன்னொரு வகையில் புளியைக் கரைத்தது—இன்னிக்கே தெரியாத் தனமாக இடத்தைக் கொடுத்து விட்டோமோ? நம் பக்த ஜனங்கள் வியவஸ்தை கெட்டவர்கள். இத்தனை நாள் மணி குருக்களை நிமிஷத்தில் இந்த சூன்யக்காரனுக்காக மறந்து விடுவார்கள்.

''அந்த அய்யர் நல்லாப் பாடினாரே, அவர் எங்கே?''

இப்பவே ஓரிருவர் விசாரிக்க ஆரம்பிச்சாச்சு.

''தூரத்து உறவு. வீட்டுக்கு வந்து மூணு நாளாச்சு. பிழைக்க வந்திருக்கா(ன்) (ர்) (இந்த இடத்தில் ஏதேனும் ஒன்றைத் திடமாய் உச்சரிக்கத் தைரியமும், மனமுமில்லாமல் ஒரு கொழகொழப்பு) பூஜைக்கு ஒரு கோவில் பார்த்தாகணும். அதுவரை ஒத்தாசைக்கு—''

''நாளைக்கு இருப்பாரா?''

கார்க்கோடகன், கார்க்கோடகன். இப்பவே விஷயம் வேலை பண்ண ஆரம்பிச்சுடுத்தே! எங்கிருந்து வந்தார்? இடி விழுந்தாற் போல் விரிசல். எதுவரை ஓடும் தெரியல்லியே! இருந்த இடத்திலிருந்து கத்தினார். எரிச்சல்.

''தருமூ! ஒரு குடம் ஜலம் மொண்டு வா!''

அவருக்குப் போதை தெளியவில்லை. ''அவன் என்னவோ கேக்கறான் பார்!'' என்று அவளே காதில் ஓதிக் கவனத்தில் உரைப்பது போல் இருந்தது.

அபிஷேகமாச்சு, அலங்காரமாச்சு, இப்போ குடம் ஜலத்துக்கு என்ன வேலை?

குடத்தை எடுத்துக் கொண்டு வெளியே வருகிறார். ஜனங்கள் அவருக்குப் பாதை விடும் பரிவு, மேலே அலை மோதுகிறது. எல்லோரும் நல்லவர்களே!

ஒன்றிரண்டு பெண்டிர் தடாலென்று விழுந்து நமஸ்கரிக்கின்றனர்.

மணிக்கு நெஞ்சு கொதித்தது.

கிணற்றிலிருந்து ஜலத்தை மொண்டு, குடத்தை அவர் தோள் மேல் ஏற்றிக் கொள்கையில் ஒரு கார்—மிடுக்காய் ஒரு திருப்பம் காட்டி வழுக்கிக் கொண்டு வந்து த்வஜ ஸ்தம்பண்டை நின்றது.

அதிலிருந்து ஒரு ஆணும், இரண்டு பெண்டிரும் இறங்கினர்.

அவருடைய உலகம் இன்னும் கலையவில்லை. கனவில் நடந்து கொண்டு சன்னதிக்குப் போய்விட்டார்.

மணி அவர்களை எதிர் கொண்டார். யார் என்று தெரியவில்லை. தெரியணுமா என்ன?

''வாங்கோ, நல்ல சமயம்தான். அர்ச்சனை நடக்கப் போறது.''

''நமக்கும் ஒரு அர்ச்சனை செய்யறீங்களா?''

இளவல் சிகை மெய்தான் ஆயினும், விக் அணிந்தாற் போல்—ஆண்டவன் கொடுத்திருக்கும் விசாலமான நெற்றியை மெனக்கெட்டு மறைத்து, மயிரை வெட்டிவிட்டிருக்கும் விதத்தில், ஒரு பொய்மை. பொய்மையே வாழ்க்கையின் நியதியாகப் போய்விட்டது. தொளதொளவென்று தொங்கத் தொங்க, மணிக்கட்டண்டை ரொம்பவும் பிடிப்பாய், ஜிப்பாவுமில்லை, சொக்காயுமில்லை என்று ஒரு

அங்கி. பைஜாமாவா, பாண்டா? கீழே இறங்க இறங்க ஒரு யானைக்கால் உள்ளே புகுந்து மிஞ்சும் தாராளம். நாயனக்காரன் போல் இரு கைகளிலும் மின்னும் மோதிரங்கள். பெரிய மனுஷன் பிள்ளே. அத்தனையும் ஒட்டடைகள். அப்பன் உதிரத்தை உறிஞ்சிக் குடித்துக் கொண்டு! ஒட்டடையாவது உடல் நிரம்பியதும், தானே கழண்டு விழுந்துவிடும். ஆனால் இந்த ஒட்டடைகள் விழாது. நான்தான் சக்கையா, சருகா, அவர்கள் சப்பி, அவர்கள் வாயிலிருந்து உதிர்ந்தாகணும்.

''ஒரு சகஸ்ரநாமம் செய்வீங்களா?''

இந்த தருமு வந்தாலும் வந்தான், அம்மனுக்கே கிரஹப் பெயர்ச்சியா?

ஆனால் இது என்ன, இந்த ரெண்டுங் கெட்டான் வேளையில், இந்த அரை குடம் பெரிய அர்ச்சனை கேட்கறது? இனிமேல் இதுக்குத் தனியா அபிஷேகம், நைவேத்யம, அப்புறம் அர்ச்சனை—சொல்லி அனுப்பிச்சாலும் சீறி விழுவாளே! ''இத்தனை நாழிக்கு மேல் சுண்டலாம், பொங்கலாம். எப்போ ஊர்றது, எப்போ வேகறது? மூலவருக்குப் பின்னால் செங்கல் அடுப்பு வெச்சு ரவா உப்புமா—அங்கேயே சாமான் வாங்கி—கிளறி உங்கள் அம்மனுக்கு வையுங்கோ!'' என்பாளே! முதலில் வீட்டிலேயே இருக்காளோ இல்லையோ? எந்த சினிமாவில், எந்த க்யூவில் போய்த் தேடுவது?

நல்ல வேளை, அந்த இரு பெண்டிரில் மூதானவள் அவன் ஆபத்துக்கு சஹாயமாக வந்து விட்டாள்.

''என்ன மாப்பிள்ளே, அவ்வளவுதான், கால் விட்டுப் போயிடும். வந்த இடத்தில் உங்களுக்குத் திடீர் நினைப்பெடுத்ததுக்கு ஏதோ ஒரு அஷ்டோத்திரத்தைப் பண்ணிட்டுப் போவோமா-ஏதோ பெரிய அடியாப் போடறேளே!''

''உங்களுக்குக் கால் நோவெடுத்தால் — நீங்க கார்லே குந்திட்டிருங்க — நாங்க தரிசனம் பண்றோம்.''

''அப்படியில்லே சார் — அம்மா சொல்றதுலே நியாய மிருக்கு. நைவேத்யம், அபிஷேகம், அலங்காரம் எல்லாம் புதுசா ஏற்பாடு பண்ணணும்.''

''பண்ணுங்க! அதென்ன சாமி, எல்லாம் காசு தானே! எவ்வளவு வேணும்? இந்தாங்க, போதுமா, போதுமா?''

மூணு, நாலு, ஐந்து பத்து ரூபாய் நோட்டுக்கள். மொடமொடவென்று புது நோட்டுக்கள். நிமிஷமாய்க் கையில் திணித்தாயிற்று.

''செலவைப் பத்திப் பேச்சில்லே முதலாளி — ஏறதோ தாழறதோ. உங்கள் நன்மைக்கு நீங்கள்தான் கொடுக்கப் போறீங்க — அம்மா நேரத்தைப் பத்திப் பேசறாங்க.''

''நேரமென்ன நேரம்! தேங்காயை முன்னாலே உடைச்சுடுங்க. கற்பூரத்தை முன்னால் கொளுத்திடுங்க.''

பேஷ்! எனக்கே புதுசா யோசனை சொல்லித்தரானே! சமயத்துக்கு இப்படியும் செய்யலாம் போல இருக்கே!

''அதுக்கில்லே ஸார் — ஹௌரதாமம்னா அதுக்குத் தனி சாந்தி, உபசாரம் எல்லாம் பண்ணியாகணும்; நாளைக்குச் சாவகாசமா, சிரத்தையா வெச்சுப்போமே!''

''நாளைக்கா?'' அவன் ஒரு சிரிப்புச் சிரித்தான். கைக் கடியாரத்தைப் பார்த்துக் கொண்டான்.

''நாளை காலை ஏழு மணிக்கு ப்ளேன்—''

அடிப் பாவீ! ஒரு கையால் கொடுத்து, ஒரு கையால் பிடுங்கிக்காதேடா!

''அப்போ ஒண்ணு செய்வோம். உங்கள் அட்ரெஸ் ஸைக் கொடுத்துட்டுப் போங்கோ. இன்னி ராத்ரி எத்தனை நாழியானாலும் நானே நேரில்வந்து ப்ரசாதத்தைக் கொடுத்துடறேனே!''

''அதுவும் ஒரு ஐடியாதான். அந்த ப்ரசாதத்தைக் கூட ரிஸெப்ஷன்லே கொடுத்துட்டுப் போயிடுங்க. எவனாச்சும் ஆல் நைட் உட்கார்ந்திருப்பான். காலையில் நாங்க வாங்கிக்கிறோம்.''

''பல்லை விளக்கிட்டு வாங்கிக்கங்க—''

கண்கள் ஒரு கணம் பகையில் சந்தித்தன.

(இப்படியும் நம் பிழைப்பு இருக்கணுமா?)

''ஸார்—''

''என்ன?''

''உங்கள் ஆர்டர் ரொம்ப லேட். அதனாலே அதுக்குத் தகுந்த சிரமம் இருக்கு. இன்னும் ஒரு அம்பது தேவைப் படும். வெள்ளிக் கிழமை அம்பாளுக்குப் புடவை சார்த் தினால் ரொம்ப விசேஷம்—''

''எனக்குத் தெரியும். நீங்கள் பிடுங்க ஆரம்பிச்சுட் டீங்கன்னா, விட மாட்டீங்க. லீச் தான்—'' ஒரு முழு நோட்டை உண்மையாகவே அவன் வீசியெறிந்தான்.

''கை தவர்றது — அதிர்ஷ்டம்!'' மணி குனிந்து பொறுக்கி எடுத்துக் கொண்டார். நீ திட்டிக்கோ—இந்த ரீதியில் ரெண்டு அடி கொடுத்தாலும் வாங்கிக்கறேன். திட்டத் திட்டத் திண்டுக்கல். குட்டக் குட்டக் குண்டக்கல். லீச்சாமே! அதென்ன லீச்? வா வா, நடு ராத்திரியிலே உன்னைத் தேடிண்டு வந்து குங்குமப் பொட்டலம் கொடுக்கப் போறேன்னு கனாக் கண்டிண்டிரு! அப்பன் சொத்தை அழிக்கப் பொறந்தவங்க!—

''உள்ளே வாங்கோளேன். அர்ச்சனை நடக்கறது. அம்பாளைத் தரிசனம் பண்ணுங்கள். உங்கள் தீபாரா தனையை முன்னால் காட்டச் சொல்றேன்.''

நடந்து கொண்டே :—

''ராஜசேகரன் பிடிச்ச முயலுக்கு எப்பவும் மூணு கால் தான்!'' பெரியம்மா குரலில் ஒரே சமயத்தில் ஒரு நாடக வியப்பு, பிரமிப்பு, அடித் தளத்தில் ஒரு ஆத்திரம், எல்லாம் கலந்த அவியல்.

''மூணு கால் எதுக்கு? என் முசல் ரெண்டு காலிலேயே நிக்கும். காது ரெண்டு நிக்குதே காலுக்குப் பதிலா—''

இந்தப் பாஷைக்கு, இந்தத் தர்க்கத்துக்கு என்ன அர்த்தம்? இதெல்லாம்தான் பணக்காரனின் புத்தி சாதுர்யமான பேச்சு. இதுக்குச் சிரிச்சால் கூலி உண்டு. மணி சிரிக்கிறார்.

''முசல் சூப் ருசி, இந்தப் பருப்பு சாம்பாருங்களுக்குத் தெரியுமா?''

அந்த மிதப்பு நிலையிலிருந்து இன்னும் சரியாகத் தெளியவில்லை. இடக்கையால் விலாவில் மலர்த்தட்டை அணைத்துக் கொண்டு, மறு கையில் பவித்ர விரலுக்கும் கட்டை விரலுக்குமிடையே ஒரு பூ. அம்பாளின் பாத கமலங்களை, உரிய நாமாவளியுடன் அடைய நடுங்குகையில் வெளியிலிருந்து உள் வெளிச்சத்துள் அந்தச் சிறு குழாம் நுழைவதற்கும், அவர் தற்செயலாக முகம் திரும்புவதற்கும் சரியாக யிருந்தது.

தட்டு கீழே விழாமலிருந்தது அவர் புண்யம். அல்ல. கமலாம்பிகையின் புண்யமா? காலடியில் பூமி நகர்ந்தது. கமலாம்பிகை அரை அங்குலம் சட்டென்று உயர்ந்து நின்றாள்.

அவளும் அவரைப் பார்த்து விட்டாள்.

அவள் தாய், மகளின் பின் ஒளிந்து கொள்ள முயன்றாள்.

லோடு மாற்றமோ என்னவோ, ஒரு கணம், மின்சார விளக்குகளில் வெளிச்சம் முறுக்கேறிற்று.

அம்பாளே எதிர் நோக்கி வந்து விட்டளாா? அதே பச்சைப் புடவை, அச்சுக் கடைந்த உடலில். அவர் அம்மன் பக்கத்தில் நிற்கையில் அவளுடைய அலங்கார ஒளி அவர் மேல் பட்டு ஏற்கனவே செழிப்பான உடல் வண்ணத்தில், ரோஜா திட்டுப் படர்ந்து செம்பொன்னாய் உள்ளே பற்றிக் கொண்டாற் போல், தகதகத்தார்.

கோவில் மதில் ஏப்பம் விட்டாற் போன்று ஒரு குமுறல்.

"மணி, தட்டை வாங்கிக்கோ—"

மணிக்குப் புரியவில்லை.

அவர் நேரே த்வஜ ஸ்தம்பத்தைத் தாண்டி நடந்து, அங்கு தெரு விளக்கடியில்—அங்கே அரைகுறை உருவில் ஒரு பாறாங்கல் கிடந்தது — ஆரம்பித்து, முடிக்காது கல் தச்சன் விட்ட வேலை — அதன் மேல் உட்கார்ந்து விட்டார். காற்று நெற்றியை ஒற்றியது.

மயக்கம் வெடுக்கென விட்டு விட்டது; கமலாம்பிகை அடியில். அதுவும் எப்படி அடிக்கிறாள், கொஞ்சமும் எதிர்பாரா சமயத்தில். ஊமையடி ஸ்பெஷலிஸ்ட். அந்த ஒரு அடியில், ஒரே அடியில், பழைய புண்கள் அத்தனையும் வாய் திறந்து கொள்கின்றன. உன்னிடம் ஆறுதல், எனக்கு வழி காட்ட ஒரு சைகை தேடி வந்தேன். இதுதான் நீ காட்டும் வழியா?

மூவரும் அருகே வந்து நின்றனர். ராஜசேகரன் விஷயம் புரியாமல், ஆனால் அசடு வழிந்து கொண்டு பரிதாபகரமாக நின்றான். இந்த ஆள் யார்? இவங்க ரெண்டு பேரும் இப்படி அஞ்சறாங்களே! அவள் அவனை முழங்கையால் இடித்து அப்பால் விலகும்படி அவசரமாக ஜாடை காட்டினாள். புரிந்து கொள்ளவே அவனுக்குச் சற்று நேரம் பிடித்தது.

"அப்பா! சௌக்யமாக இருக்கேளா?" வரண்டு

உள்ளே குழல் விட்ட குரல்.

"........."

"அப்பா! எத்தனை நாளாச்சு! அப்படியே இருக்கேளே! மயிர்தான் தும்பை. கோவிலுக்குள்ளே வாங்களேன்! நடுத் தெருவில் நமஸ்காரம் பண்ணால் நாலு பேர் பார்க்க நன்னாயிருக்காதே!" தொட முயன்றாள். ஆனால் அவருடைய உள் கூசலில் கை தானே தடைப்பட்டு நின்று விட்டது. சீற்றக் கண்ணீர் ததும்பிற்று.

"நீங்கள் எதிலுமே மாறவில்லை, அப்பா!"

தெய்வமே! என்னைக் கொண்டு போயிடேன்.

அவள் விழிகளில் கண்ணீர் தெரு விளக்கில் பளபளத்தது.

"அப்பா, உங்களை நான் நினைக்காத நாளில்லே. சத்யமா உங்களை மறக்கவே முடியவில்லை, அப்பா—அப்பா!"

விக்கி விக்கி அழுதாள்.

இதயம் பாளை வெடித்து மணிகள் உதிர்கின்றன. மோனக் கண்ணீர் மணிகள். இது என்ன? பிரமாதமான உவமைகள் தோன்றிக் கொண்டு—உண்மையா நான் துக்கப்படல்லே. என் சோகத்தை ருசி பார்த்துக் கொண்டிருக்கிறேன். என் சோகமாய சுகத்தில் திளைத்துக் கொண்டிருக்கிறேன்.

"எவ்வளவோ படிச்சுப் படிச்சு சொன்னேள். இந்த டான்ஸ் ட்ராமா வெல்லாம் ஒரு வயசுக்கு மேல் நமக்கு உதவாது. காலா காலத்தில் குடியும் குடித்தனமுமாக ஆகிவிடுவதுதான் மரபு, குல கௌரவம்னு. கண்ணீர் கூட விட்டேள். ஆனால் கூட்டம், கைதட்டல், மாத்தி மாத்தி அந்த ஸ்டேஜ் லைட்டிங்—அந்த மோகம்

எங்களைக் குருடாக்கிடுத்து. நாங்கள் மனுஷாளாவே யில்லை! எப்படி அப்படி மாறினோம்னு எனக்கு இன்னும் தெரியல்லே. உன் அழகுக்கு மூணு மாசத்திலே நீ பம்பாய்லே ஸ்டார் ஆயிடுவேன்னு அம்மா என்னைக் குழிலே தள்ளிட்டா.''

மரகதம் எப்படித் தடிச்சுப்போயிட்டா! ஒடிய ஒடியப் பெண்ணை விட அவள்தான் அழகும்னு சொன்னால் யார் இப்போ நம்புவா? ஆண் பிள்ளையாவே ஆயிட்டா. பெண்ணின் விவகாரங்களை நிர்வாகம் பண்ணுகிறாளோன்னோ? மரகதம் என்னிக்குமே குதிரை தான். கடிவாளத்தைக் கடிச்சுத் துப்பி எறிஞ்சுட்டா. இனிமேல் அவளை எந்த வேலியும் மடக்க முடியாது.

''பத்து வருஷங்களாச்சு! என்ன பவிஷுக்கு வந்திருக்கேன், நீங்களேபார்த்துட்டேள். ஆமாம், இனிமேல்மறைக்க என்ன இருக்கு? ஒத்தரை யொருத்தர் நொந்துண்டு, அழுது, சண்டை போட்டுண்டு. 'உன்னாலே நான் கெட்டேன், என்னாலே நீ கெட்டே, கட்டம் எல்லாம் தாண்டிப் போயாச்சே. இனி எங்களுக்கு மீட்சியே கிடையாது. ஆசைப்பட்ட பண்டம் ஊசல். இப்போ தெரிஞ்சு என்ன பயன்? அப்பா! பேசுங்களேன்! ஏதேனும் என்னைத் திட்டவாவது திட்டுங்களேன்! உங்கள் குரலையாவது கேக்கறேன். அப்பா! நீங்க நிஜம்மா இங்கே இருக்கேளா? இல்லே, நான் தினமும் நெனைச்சு நெனைச்சு, நெனைச்ச நெனைப்பே தோற்றமா? அப்பா! காணாமல் போயிடுவேளா? அப்பா, உங்களை மன்னிப்புக் கேட்டு அவமானப்படுத்த மாட்டேன். மீட்சி யில்லேன்னு சொல்லிட்டேனே! அப்பா! உங்களைப் பார்த்தால் பயமாயிருக்கு. என்னை எனக்கு நினைவு படுத்த வந்த உங்கள் ஆவி மாதிரி இருக்கேள்.''

''மது! நேரமாவுது!'' எந்தக் கரையிலிருந்தோ குரல் வந்தது. இல்லே. கரையில்லே. நடுக் கடலிலிருந்து.

''வந்துட்டேன்!''

நடுக் கடலை நோக்கிச் சென்றாள்.

கடலுள் போயே விட்டாள்.

# 6

மனக் சந்த் சௌகார் என்றால், தோசை மாவு போல் பொங்கி வழியும் ஊளைச் சதை, உப்பிய கன்னங்களிடையே தொங்கும் கொத்து மீசை, மூன்று மோவாய், பிதுங்கிய தூங்குமூஞ்சி விழிகள், தலையில் சுற்றிய பெரிய மூண்டாசுமாய், தரையில் விரித்த மெத்தை, திண்டுகளிடையே சாய்ந்து கொண்டிருப்பதாய் எதிர் பார்த்துக் கொண்டு போனால், அது உள்ளத்துக்கு எவ்வளவு முரண் என்று எதிரே பார்த்தால்தானே தெரிகிறது.

வெள்ளை மரப்பாச்சி போல், மெலிந்து சிறிய உருவம் ஒன்று சோபாவிலிருந்து எழுந்து, அவரை வரவேற்றது. வெகு குட்டையாக வெட்டிய க்ராப்.

''குட் மார்னிங். என்னால் என்ன காரியம் ஆகணும்?''

பாலிஷ் ஏறிய குரல்

காலடியில் பெரிய கன்றுக் குட்டி போல் ஒரு நாய். அந்தக் காலத்து ராஜாக்கள் புலியை வளர்ப்பார்களாம். நாக்கைத் தொங்கப் போட்டுக் கொண்டு, வந்த ஆளை அலக்ஷியமாக ஒருமுறை பார்த்து விட்டுத் தன் சிந்தனைக்குத் திரும்பி விட்டது. குரைக்கவில்லை. ஆகையால், கடிக்கும். கடித்தால் துண்டுதான்.

ஒரு கணம் பேச்சு வராமல் திகைத்து நின்றார். சம

வயதுதானிருக்கும். அந்தச் சிட்டுருவத்தில் ஓரிரண்டு வயது குறைத்துக் காட்டிற்றோ என்னவோ?

எதிரே சோபாவைக் காட்டினான்.

''சமையல் செய்ய, பேப்பரில் விளம்பரம்...''

''ஆமாம், ஆள் எங்கே?'' அவன் குரலில் ஆவல் தெரிந்தது. உச்சரிப்பு கொச்சைதான். வேற்று பாஷை. ஆனால் தமிழ் அவனுக்குப் பழகின பாஷைதான்.

''நான்தான் ஆள். வேலை கேட்க வந்திருக்கிறேன்.''

''மிஸ்டர்! நீங்கள் வேடிக்கை பண்றீங்க. எனக்கு மதராஸி ஜோக்குகள் ரொம்பப் புரியாது.'' 'பிடிக்காது' என்று வந்ததைக் கடைசி சமயத்தில் அப்படித் திருத்திக் கொண்டது தெரிந்தது.

''இல்லே சேட், மெய்யாத்தான். நான்தான் வேலைக்கு வந்திருக்கேன்.''

அவன் முகம் சுளித்தது. ''நோ, நோ.''

வாளா விருந்தார்.

''நீங்கள் பம்மன் தானே—ப்ராம்மன்?''

''ஆமாம்.''

''நான், நான்—விஜ்...''

''அது எனக்குச் செய்யத்தெரியாது. சாப்பிடவும் தெரியாது.''

அவன் சிரித்துவிட்டு, ''உட்காருங்கள்,'' என்றான்.

''இல்லை சேட், நான் வேலைக்காரன் முறையில் வேலை கேட்க வந்திருக்கிறேன்.''

''பரவாயில்லை. உட்காருங்கள். நல்லாயிருக்கீங்க. நீங்கள் ஜென்டில்மேன்.''

''ஒரு நாள், நல்லா வாழ்ந்தோம். சிநேகிதர்களுக்குக்

கடன் கொடுத்து ஏமாத்திட்டாங்க. இப்போ நாலஞ்சு வருஷமா இப்படிப் புளைப்பு.''

''நல்ல காலம், கெட்ட காலம் மாறி மாறி—''

''ஆமா, காலம் கெட்டுக் கிடக்கு.''

''ஆப்கோ நாம்?''

''தர்மராஜன்.''

''நல்ல பேரு. உங்களை மிஸ்டர் தரம்னு கூப்பிடலாமா? தர்மேந்திரா—பிலிம் ஸ்டார், தெரியுமல்ல?'' சிரித்தான். மழமழவென்று க்ஷவரம் செய்து, மாசுமறுவற்ற முகம். ரத்தம் செத்துப்போய், ஒட்டிய கன்னங்களுக்குக் கொஞ்சம் முகமூடி மாதிரி தானிருந்தது. ஆயினும் சிரிக்கும் போதெல்லாம் ஒரு கவர்ச்சி வெளிப்பட்டது. பல் மெய்தான். வரிசைதான்.

''சேட், இப்போ எனக்குக் கஷ்டம். நான் சமையல் செய்திருந்த இடத்தில் அவங்க குவாயிட்டுக்குப் போயிட்டாங்க. மூணு மாதமா தேடறேன். குதிரல்லே. கொஞ்ச நஞ்சம் சேர்த்து வெச்சிருந்ததெல்லாம் கரைஞ்சுக்கிட்டே வருது. நீங்கள் ஒத்தாசை செய்யணும். நான் பிச்சைக்கு வல்லே. வேலை செய்து கூலி வாங்கத்தான் கேக்கறேன்.''

''நான் பிச்சை போடறவன் இல்லே'' மறுபடியும் அந்தப் புன்னகை. ''ஆனால் உங்களை வெச்சுக்க மனம் இடம் கொடுக்கல்லே, விடவும் மனம் இல்லே. லேபர் கிடைக்கறது அவ்வளவு கஷ்டமா யிருக்குது. ரெண்டு மூணு பேர் வந்தாங்க. சிபாரிசோடு வந்தாங்க. மீட் சமையல் தெரியும்னாங்க. ஆனால் பார்க்கவே அசுத்தம். பிடிக்கல்லே. அனுப்பிச்சுட்டேன். ஆள் கிடைக்கறது கஷ்டம். ஆனால் சமையல்காரன் அவசியம் வேணும். எனக்குச் சங்கடம் பண்ணிட்டீங்க இப்போ...''

''நான் எல்லா வேலையும் செய்வேன் சே!.''

''எல்லா வேலையும் நீங்கள் செய்ய வேண்டாம். மத்த

வேலைக்கு வேலைக்காரி இருக்குது. சமையல் மட்டும் தான். நம்ம ரெண்டு பேருக்கு மாத்திரம். ஜாகை மாடியிலே.'' மேலே சுட்டிக் காட்டினான்.

''அவ்வளவு தானா? ஏழெட்டுப்பேராவது இருக்கும்னு நெனைச்சேன். இது ஒரு வேலையா?''

''ஆமாம், ஆமாம். காலையிலே தோசா, காப்பி. மத்தியானம் ஒரு மணிக்கு கானா. எனக்கு ரெண்டு சப்பாத்தி. அப்புறம் சோறு. மாலை சாயா, பிஸ்கட். அதெல்லாம் டின்லே இருக்குது. ராத்திரி சப்பாத்தி, பூரி, பாஜி, ஆலு ஸ்லேட்...''

''சேட், ஊதித் தள்ளிடுவேன். நான் ஸமோஸா கூடச் செய்வேன். ஆனால் நீங்கள் செய்யற மாதிரி, பூ மாதிரி மடிக்க வராது. மசாலாவை உள்ளே வெச்சே மேலே ஸிம்ப்ளா மூடிப் பொரிச்சு எடுத்துடுவேன். உருவம் தான் வேறே. ருசி ஒண்ணுதான்.''

சலுகையாகச் சிரித்தான். ''இல்லே இல்லே, டேஸ்ட் வேறேதான். சமோஸா வேறே, நீங்கள் செய்யறது வேறே. பரவா நை. நமக்கு நாற்பது வருஷமா இங்கேயே இருந்து மதராஸ் டிஷ்ஷஸ் நல்லா பளகிப் போச்சு. மட்டன் நினைப்பு வந்தால் புஹாரிலேருந்து வரவழைச்சா போச்சு. மேலே வர மாட்டேன். இங்கேயே அப்போ சாப்பிடுவேன். ஆனால், அய்யர் உங்களைப் பார்த்தால் தான் மனசு இன்னும் தகறார் பண்ணுது.''

''சேட், என் தோற்றம் என் துரதிர்ஷ்டம்.''

''ஆமாம், நீங்கள் ஐரோப்பியன் மாதிரி இருக்கீங்க.''

''சேட், அதுக்குக்கூட நான் என்ன செய்வேன் சேட்—''

'' ஆமாம்.''

''ப்ரதி சனிவார் சாயந்திரம் எனக்கு லீவு கொடுக்

கணும். நான் வாரத்துக்கு ஒரு நாள் விடுமுறைன்னு ரூல் பேசல்லே. ஆனால், சாயங்காலம் மட்டும்—''

''அப்போ அன்னி ராத்திரி ரொட்டி, பழம்.''

''தேங்க்ஸ், சேட்.''

''ராத்திரி வந்துடுவீங்களா?''

''பத்து, பதினொண்ணு ஆகுமே!''

''பரவாயில்லை. வாசல் கதவுக்கு டூப்ளிகேட் சாவி கொடுக்கறேன். ராத்திரி எத்னி நேரமானாலும் வாபஸ் ஆயிடுங்க. முக்கியமா ராத்திரி தங்கணும். நமக்கு ஒரு துணை வேணும். நான் சீக்காளி—''

''டீக் ஹை மஹ்ராஜ். நாளைக் காலை வரேன். நாளைக்கு நல்ல நேரம்.''

''நோ மஹ்ராஜ், மிஸ்டர் தரம். என் பேர் மனக்சந்த். நீங்கள் ஒரு ஹம்பக். ஆனால் நல்ல மனுசன்னு நினைக்கிறேன்.''

பிற்பகல், மணி, எதிரே விபூதி மடலுடன் வெளி மண்டபத்தில் உட்கார்ந்திருந்தார்.

''நீ இன்னிக் காலையில் வல்லே. அம்பாள் வாயில் மண்ணைப் போட்டுடுவையோன்னு வந்து பார்த்தேன். நினைச்சபடியே ஆச்சு.''

''நான் உங்கிட்ட சாவியையே வாங்கிக்கல்லையே!''

''இங்கே சாவியை வாங்கிண்டு போறதும், கொண்டு வரதும் கிடையாது. இதோபார். இந்தத் தூணில் கல்லுக் கிடையில் ஒரு சந்து இருக்கே, இங்கே சாவியைச் செருகிட்டுப் போயிட வேண்டியதுதான். காலையும் மாலையும் விளக்குப் போடப் பண்டாரம் வருவான். அவனுக்கும் சாவி இருக்கிற இடம் தெரியும். இங்கே பூட்டிப் பாதுகாக்கற மாதிரி ஒரு பண்டமும் கிடையாது.

ஒண்ணு ரெண்டு இருக்கிறதையும், அம்பாளின் ஆபரணங்களையும் ராவோடு ராவா தர்மகர்த்தா எடுத்துண்டு போயிடுவார். இன்னிக்கு சனிக்கிழமை. அவரிடம் வாங்கவும் வேண்டாம். கொடுக்கவும் வேண்டாம். அம்மனின் சிக்குப் பாவாடையை உருவிண்டு போறவன் போகட்டும். அவள் அம்மணமா நிக்கட்டும்.''

மணி சிரித்தார். அவரவர் வேடிக்கை யுணர்வு அவரவர்க்குத் தனி.

''ஆமாம், நைவேத்யத்துக்கு என்ன ஏற்பாடு பண்ணியிருக்கே! கட்டளைக்குக் கச்சை கட்டிண்டு வந்துட்டியே!''

சரியான, மூக்கை உடைக்கிற கேள்வி. இதுவரை அது பற்றி யோசிக்கவேயில்லை. ரூம்லேயே பொங்கிக் கொண்டு வர வேண்டியதுதானா?

''மணி, ஒரு சஹாயம். நான் காயமா ஏற்பாடு பண்ணிக்கற வரைக்கும் நைவேத்யம் உன் வீட்டிலிருந்தே தயவு பண்ணு. பெண்ணிடம் கொடுத்தனுப்பு. செலவு என்னுடையதாயிருக்கட்டும். அப்புறம் மணி, காலை பூஜை நீயே பண்ணு. ராத்திரி மட்டும் எனக்கு விட்டுக் கொடுத்தால் போதும்.''

மணி ஏளனமாகப் புன்னகை புரிந்தார். என்னவோ மாதிரிதான் இருக்கு. என்ன பண்றது? சிரித்து விட்டுப் போகட்டும்.

இரவு 7-30—8 இருக்கும். மொட்டைமாடியில் இரண்டு கோணங்களிலிருந்து இரண்டு இருநூறு வாட்டுகள் இரவைப் பகலாக்கின. கைப்பிடிச் சுவர்களின் மேல் வரிசையாகத் தொட்டிகளில் க்ரோட்டன்ஸ், பூச்செடிகள், ஃபேன்ஸி கத்தாழைகள். ஓரமாய், குளிருக்கும் வெய்யிலுக்கும் அடக்கமாக இறக்கிய தாழ்வாரத்தில் மேசையில் சேட் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறான்.

''ஐயர்ஜீ பஹுஸுக், பஹுஸுக்.''

சூடாய் சுக்கம் சம்பாத்தியைப் பீங்கான் ப்ளேட்டில் கொணர்ந்து, கை படாமல், இடுக்கியால் அவன் ப்ளேட்டில் போடுகிறார். பக்கத்தில் பீங்கான் கிண்ணத்தில் **தாலில்** ஒரு விள்ளல் தோய்த்துச் சுவைக்கிறான்.

''தரம்ஜி! இவளோ ஸாஃப்டா நான் சப்பாத்தி சாப்பிட்டு எனக்கு மறந்துகூடப் போச்சு. ஆள் வைக்கிறோம். சம்பளம் கொடுக்கறோம். செய்ய வேணாமா? நான் ரெண்டுதான் சாப்பிடறது. இது இன்னிக்கு நாலுன்னு நினைக்கிறேன். பஸ், என் நலத்துக்கு. இந்த ஸாலட் நன்றாக இருக்கிறது'.''

''தேங்க்யூ சேட்.''

''அசல் குக் இவ்வளவு நல்லா செய்ய மாட்டான். அவனுக்குச் செய்ய வராது.''

''தேங்க்யூ சேட், ஆனால் இப்போ அஞ்சாறு வருடமா நான் சமையல் வேலைதான் செய்யறேன்.''

''மிஸ்டர் தரம், நீங்க சொல்லிட்டிருங்க. நீங்க மதராஸிஸ் க்ளவர்தான். ஆனால் நான் சௌகார். தங்கத்தை உரைச்சுப் பார்க்கறோம். அந்த எக்ஸ்பீரியன்ஸ். ஆளை எங்களைப் போல் நீங்கள் எடை போட முடியாது.''

''சரி சேட், நீங்க சொல்லிட்டிருங்க.''

''மிஸ்டர் தரம், இந்த ஏற்பாடு எங்கேயோ சரியில்லே. ஓட்டை விழுந்திருக்கும் இடம் தெரிஞ்சுதுன்னா, அப்புறம் எல்லாம் சரியாயிடும்.'' சேட் காலடியில் நாய் ஒரு முறை கம்பீரமாய்த் தலையைத் தூக்கி அவரைப் பார்த்துவிட்டுத் தலை படுத்தது. அட சனியனே! இது கூட சம்பாஷணையில் கலந்து கொள்ளுமா என்ன?

''நீங்கள் ஏதோ பாண்டவ் ராஜ்குமார் மாதிரி

அஞ்ஞாதவாஸ். காரணம் சொல்ல உங்களுக்கு இஷ்டமில்லே. நான் கேட்க மாட்டேன். உங்களிஷ்டம். ஆனால் நான் உங்களை நம்பல்லே. நம்ப மாட்டேன்.''

பிடரியில் முள் பிடுங்கிற்று.

''இந்த பாஜி ரொம்ப நல்லாயிருக்கு.'' விரலை அதில் தோய்த்து வாய்க்குள் விட்டுக் கொண்டான். ''உங்களை எனக்குப் பிடிக்கிறது. பலதரம். நீங்க நல்லா சாப்பாடு செய்யறீங்கன்னு இல்லே. உங்களுக்காகவே உங்களைப் பிடிக்கிறது. ஆனால் நீங்கள் நாளையிலிருந்து சமைக்க வேணாம். நீங்கள் வீட்டுக்குப் போயிடலாம். நான் மானேஜ் பண்ணிக்கறேன்!''

''இப்படிச் சொன்னால் என்ன அர்த்தம், சேட்? நோ நோ. மிஸ்டர் மனக்சந்த்.''

ஊசி முனை போன்ற கண்கள் அவர் முகத்தைத் துருவின.

''ஆல்ரைட், இதற்கு முன்னால் எங்கே யிருந்தீங்க?''

''நாலு மாசத்துக்கு முன்னால் அவங்க குவாயிட் போயிட்டாங்கன்னு சொன்னனே!''

''அவங்களுக்கு முன்னால்?''

''அவங்ககிட்டேதான் அஞ்சாறு வருஷமாயிருந்தேன். ஸ்வஜாதி. அந்த வீட்டு லேடிதான் என் கஷ்டம் பார்த்துச் சமையல் வேலைகளைச் சொல்லிக் கொடுத்தாங்க—''

''ஹ்ம்'' — பல்லுக் குச்சியால் பல்லைக் குத்திக் கொண்டு சேட் அருகே தொட்டியில் ஒரு பூவைச் சிந்தித்துக் கொண்டிருந்தான். பெரிய பூ, இதழ்கள் திறக்க யத்தனம் பண்ணிக் கொண்டிருந்தது. இரவுப் பூ.

''மிஸ்டர் மனக்சந்த், உங்களுக்கு என்னைப் பத்தி ஏதேனும் சர்ட்டிபிகேட் வேணுமா?'' இது ஒரு குருட்டாம் போக்கு அடி. அவன் வேணும் என்று கேட்டு விட்டால்?

அவன் ஒரு கணம் மௌனம் சாதித்துவிட்டு, "சரி, போயிட்டுப் போவுது. போற வழி, வர வழி எங்கேனும் பிள்ளையார் உண்டியலில் கால் ரூபா போட்டுட வேண்டியதுதான். ஒரு ரூபாயே போட்டு விடுவோம்."

"சேட், நான் எவ்வளவோ சொல்லிப் பாத்துட்டேன். நீங்கள் மனசுக்கு ஏத்துக்க முடியாட்டி, என் அதிர்ஷ்டத்தை வேறே எங்கானும் தேடணும்னு கடவுள் சித்தம்னா—"

"தரம்ஜி, பரவாயில்ல. நான் சொன்னதை மறந்துடுங்க."

சேட் அறையில் 'ட' வாகில் இரண்டு கட்டில்கள் ஒட்டிப் போட்டிருந்தன. ஒன்று சேட்டினுடையது. அடியில் போய் நாய் படுத்து விட்டது.

இரண்டு கட்டில்களுக்குமிடையே ஒரு டீப்பாயில் மருந்துக் கடையே இருந்தது. விதவிதமான கலர் சைஸ் சீசாக்களில் மாத்திரைகள், கேப்ஸ்யூல்ஸ், இன்ஜெக்ஷன் டியூப்ஸ், டானிக்குகள், பெரிய சைஸ் ஹார்லிக்ஸ், பெரிய சைஸ் க்ளுகோஸ், பார்லே, மொனாக்கோ, ஒரு கண்ணாடி ஜாடியுள் ரொட்டித் துண்டு, ஃபஸ்ட் எயிட் பாக்ஸ்—

"தரம்ஜி, இந்தக் கட்டிலில் நீங்கள் படுங்கள்."

"ஸேட், எக்ஸ்க்யூஸ் மீ. எனக்கு ஓபன் ஏர்தான் பழக்கம். வராந்தாவில் படுக்கறேன்."

"ஓ. கே. குட்நைட்."

**பா**தி ராத்திரி விழிப்பு வந்து விட்டது. எண்ணெய் போடாத கீல் போல் 'க்றீச்—க்றீச்' உள்ளிருந்து ஒரே சீரில் வந்து கொண்டிருந்தது.

"ஹரே ராம்! ஹரே ராம்!"

பதறி ஓடிவந்து விளக்கைப் போட்டார். ஸேட், மடி

மேல இரண்டு தலையணைகளின் மேல் தலை கவிழ்ந்திருந் தான். விலாவில் புரியைக் கட்டி இழுத்தது.

"என்ன பாய்?"

"ஆஸ்துமா"—திணறினான்.

"என்ன வெச்சிருக்கீங்க?"

டீபாயில் ஒரு சீசாவைக் காட்டினான். பரபரவெனத் தைலத்தை எடுத்து முதுகில் தேய்க்கத் தேய்க்க, உள்ளங் கையில் நெருப்பு பற்றிக் கொண்டது. ஆனால் சேட்டுக்கு முதுகில் கொப்புளித்த வண்ணமாயிருந்தது.

"சேட், இன்ஜெக்ஷன்? மாத்திரை?"

மேஜை மேல் ஒரு அட்டையைக் காட்டி, மேஜை மேலேயே போனையும் காட்டினார். டாக்டர் ஹமீது.

"இந்த நேரங் கெட்ட நேரத்திலே வருவாரா?"

"இவர் வருவாரு."

போன் பண்ணினால், டாக்டர் ஊரில் இல்லை.

"சேட், இதுக்கு ஒரு சித்த மருந்து பௌடர் இருக்கு. புகை பிடிக்கணும். உடனே குணம் கிடைக்கும்."

அங்கே ஒரு பாட்டிலைச் சுட்டிக் காட்டினான். விலா வில் துருத்தி பார்க்கச் சகிக்கவில்லை. வென்னீருள்ளுக்கு ஓடினார். நல்ல வேளை, அங்கு ஒரு கும்மட்டியும் கரியும் இருந்தது. இதற்குத்தான் போலும். ஒரு கட்டை விசிறி கூட போனஸ். கெரோசினை ஊற்றி, மூட்டி விசிறி தணல் பண்ணி, மருந்தைத் தூவி — அவசரமாய்த் தன் இடுப்பு வேட்டியை அவிழ்த்துச் சேட்டைப் போர்த்தி—

நாய் கட்டிலைச் சுற்றிச் சுற்றி வருகிறது. துயரத்தில் அதன் விழியழகு கூடிற்று. அதன் பாஷை யென்னவோ அதன் கண்களில் பேசுகின்றன.

கோழை, மார்பிலிருந்து கரண்டிக் கொண்டு வந்தது

சுற்று முற்றும் பார்த்தால் பீங்கானைக் காணோம். வேலைக்காரி எங்கே பத்திரம் பண்ணி விட்டாளோ? அய்யோ, கடவுளே! சட்டென்று கையைச்சேட்டின் வாயடியில் ஏந்தினார். சேட் ஆக்ஷேபணையில் தலையைப் பலமாக ஆட்டினான். தர்மராஜனுக்கு நரஸிம்மாவதாரம் வந்து விட்டது.

"டாம் யூ. துப்புங்கள்—சீக்கிரம்."

வாஷ்பேஸினில் கையைச் சோப்புப் போட்டு எட்டுத் தரம்கழுவிக் கொண்டு திரும்பி வருகையில் சேட் படுக்கையில்தலையணை மேல் கண்களை மூடிய வண்ணம் சாய்ந்திருந்தான். விலாவில் வயலினின் அபஸ்வரம் அடங்கிக் கொண்டிருந்தது. முகத்தில் அமைதி. சங்கோசத்துடன் மெள்ள மெள்ள—

அவன் கை, அவர் கையை நாடிப் பிடித்துக் கொண்டு நன்றியில் அழுத்திற்று.

நெற்றியை ஒற்றினார்.

"தரம்ஜி—தலகாணி அடியில் சாவி. பீரோவில் பிராந்தி—"

"ஆ!" பீரோவைத் திறந்து லாக்கரைத் திறந்ததும் முன்னணியில் கண்ணெதிரே சாவிக் கொத்து. இரண்டு பெரிய சாவிகள் (ராக்ஷஸ்கள்). மூன்று சின்னது.

ஆ! கண்ணோட்டம் அந்த அவசரத்தில் கண்டு கொள்ள முடிந்தது அவ்வளவுதான். உள்ளே தள்ளிப்பாட்டில் தட்டுப் பட்டது. முக்காலுக்கு மேல் இருக்கும்.

காலையில் சேட் தோசையை ரஸித்துக் கொண்டே, "தரம்ஜி, இப்போ என் பிரச்னை என்ன — மாலும்? எனக்கு குக்—கம்—நர்ஸ் வேணும். முதல்லேயே சொன்னா மிரண்டுடுவாங்க. என்ன சொல்றீங்க?"

"சேட், யாருமில்லே. தனியா மாட்டிக்கிட்டால் என்ன செய்வீங்க?"

"இது மாதிரி நடந்ததில்லே. இதனால்தான் இங்கே வந்தவங்க தங்கறதுமில்லே. நேத்து அட்டாக் மோசம். டாக்டர் போன் செய்த உடனே வருவார். அவர் குடும்ப சினேகிதர். நேத்தி லக் பெக்கூலியர்."

"இருந்தாலும் நீங்கள் இப்படித் தனியா யிருக்கக் கூடாது. என்ன வேணுமானாலும் நேரும்."

"என்ன செய்யலாம்? அப்புறம் இட் இஸ் கடவுள் சித்தம்."

"டாக்டரைக்குடும்ப சினேகிதர் என்றீங்க. குடும்பம்?"

"கடந்த முப்பத்தைந்து வருடமா குடும்பம் கிடை யாது."

சேட் புன்னகை புரிந்தான். "அது எனக்குத் தெரிஞ்ச இங்கிலீஷ். வொய்ப் முதல் டெலிவரியிலேயே போயிட்டுது. குழந்தையும் கூடவே போயிட்டுது. நான் அப்புறம் ஷாதி செய்துக்கல்லே. அவங்களுக்கு ஒரு ரூல், நமக்கு ஒரு ரூலா? நான் கொஞ்சம் தனித் தரம், தரம்ஜி."

"கஷ்டமாச்சே!"

"கஷ்டம். இஷ்டம் எல்லாம் மனஸ். கட்டுப்பாடு. வைராக்கியம் அப்பிடி இப்பிடி, அனேகமா முடிஞ்சு போச்சு. இனிமேல் என்ன?" கண்ணைச் சிமிட்டினான்.

"அப்போ ஊரைப் பார்க்கப் போய்ச் சேரலாமே! இங்கே என்ன தலையெழுத்து? உங்களுக்கு இன்னும் சம் பாதிச்சு என்ன ஆவணும், சேட்? ஒண்டியாளுக்கு உங்களி டம் போதுமானது இருக்கும்னு நினைக்கிறேன்."

"ஊரிலே என்ன இருக்குது, தரம்ஜி? இங்கே வந்து நாற்பது வருடத்துக்கு மேலே ஆவுது, இனிமேல் இதுதான் நம்ம ஊர். பொழுது போவணுமே. அதுக்குத்தான்

வேலை செய்யறது. சும்மா யிருக்க முடியுமா? உட்காந்து சாப்பிட்டா எத்னி நாளைக்கு? நான் ஒரு நோயாளி. ஆடம்பர வாழ்க்கை.''

''நான் பாடற பாட்டை நீங்கள் பாடினால் எப்படி?''

''நோ, அது ஒரு கொள்கை கூட. நேரமாயிட்டுது. நான் கீழே போறேன். தேங்க்யூ சொல்ல மாட்டேன் உங்களுக்கு. நேத்திலிருந்து நீங்கள் எனக்கு சகோதரன் மாதிரி—'' அவர் முதுகில் அறைந்தான், சற்று சுளீரென்று தான். அவனுக்கு அவன் மேலேயே கோபம் என்னவோ? இப்படித் தன்னையே காட்டிக் கொடுத்துக் கொள்ளும்படி ஆயிட்டுதே என்றோ? ''நீங்கள் என்னை விட்டுட்டுப் போவக்கூடாது. காது கேக்குதா?''

பதிலுக்குக் காத்திராமலே கீழே யிறங்கிப் போய்விட்டான். அவன் அப்பிக் கொண்டிருந்த பௌடர் வாசனை அவரைச் சூழ்ந்து தயங்கிற்று. சேட்டுக்குக் குளியல் அலெர்ஜி. இப்படி உடம்பு இருந்தால் என்ன செய்வது?

அன்று மாலை டாக்டர் வந்திருந்தார்.

''ஸாரி, மனக்சந்த்ஜி. நேத்து செங்கல்பட்டில் ஒரு டெலிவரி கேஸ். ரொம்ப தெரிஞ்சவங்க, உங்கள் மாதிரி. முஸ்லிம். என் மாதிரி கொஞ்சம் இசை கேடு.''

தர்மராஜன் டீயையும் பிஸ்கட்டையும கொண்டு வந்து எதிரே வைத்தார்.

''தேங்க்ஸ். புது சமையல்காரரா?''

''சமையல்காரன்னு அழைக்காதீங்க. என் சகோதரன் மாதிரி. அவர் மிஸ்டர் தரம்ஜி—''

''என்ன சேட்ஜி, உங்கள் ஜாதியில்லே. எனக்குத் தெரிஞ்சு இதுக்கு முன்னால் உங்களோடு சேர்ந்து இவரைப் பார்த்ததில்லே. ஆனால் உங்கள் உடன்பிறப்பு?''

''நேற்று அவர் இல்லாட்டி நான் மர்கயா—''

''சேட், நீங்க ஸெண்டிமெண்டல் ஆயிட்டீங்க. குட் டீ.''

''நெவர் மைண்ட்.'' சேட்டுக்குக் கோபம், டாக்டர் தன்னைச் சீண்டுவது.

''வெரி குட்!'' டாக்டர் எழுந்தார். ''மிஸ்டர் தரம், தேங்க்யூ. அவரை நல்லா பார்த்துக்கோங்க. ஹி இஸ் எ ஹார்ட் பேஷண்ட். அவர் எதிரேயே சொல்றேன்னு பார்க்கறீங்களா? அவருக்குத் தெரியும். சமாளிச்சுக்கற மனுஷன்! தைரியசாலி.''

அவர்கள் இருவரும் சிரித்தார்கள்.

**கோ**வில் மண்டபத்தில் உட்கார்ந்து தர்மராஜன் குங்கும ப்ரஸாதம் வழங்கிக் கொண்டிருந்தார். சனிக் கிழமையிலும் இது ஒரு மந்த நாள். ஸ்வாமி தரிசனத் துக்குக்கூட மாஸக் கடைசி உண்டா?

இன்றுதான் அந்த நாள்.

வேலைக்குப்போய்ப் பதினைஞ்சு நாளாவது. தீர்மான மில்லாமல் ஓட்டிக் கொண்டே போனால், வந்த காரியம் நடக்கவே போவதில்லை.

அது என்ன காரியம்? சேட்டிடம் வேலைக்குப்போகும் போதே இந்தத் திட்டத்துடன்தான் வந்தேனா? வேலைக் குப் போனதுக்கு நிறுத்தி வெச்சு காரணம் கேட்டால், கண்டிப்பாகச் சொல்லத் தெரியாது. என்னவோ பொழுது போக்காக வந்தேன். என்னவோ கூடவே யிருந்து ஆளை நோட்டம் பார்க்க வந்தேன். இந்த ஆள்கிட்ட வேலையை வாங்கிடறது ஒரு சவாலாக நெனைச்சு வந்தேன். ஆனால், இந்தத் திட்டத்தின் கரு—மஞ்சள் கருவோ, வெள்ளைக் கருவோ - இங்கு வரும்போதே மண்டையுள், மண்டையின் பின்னால் ஒளிஞ்சிட்டிருந்திருக்கணும். இல்லாட்டா, கோமதியைச் சந்திக்கும் முன்னாலேயே, இவனுடைய விளம்பரத்தை நான் பார்ப்பானேன்? நாங்

கள் இப்படித்தான், இதற்காகத்தான்—கோமதி காரண மாகத்தான் சந்திக்கணும்னு விதிச்சிருக்கு... சூழ்நிலை, சம்பவங்கள், சந்தர்ப்பங்கள் எல்லாம் இந்த விதியை நோக்கித்தான் என்னை உந்தித் தள்ளிக் கொண்டிருக் கின்றன. நான் வந்த காரியம் இதுதான். இது எனக்காக அல்ல. கமலாம்பிகைக்கே தெரியும். கமலாம்பிகே, உன் உத்தரவு என்ன?

கமலாம்பிகைக் கென்ன, புன்னகை பூத்த வண்ணம் தான். புன்னகையரசி கே. ஆர். விஜயா இவளிடம் என்ன பண்ணிக்க முடியும்?

எண்ணி எண்ணி என் தூக்கம் - இருக்கிற அரைகுறை யும் கெட்டுப் போயாச்சு. கண் மிளகாய்ப் பழமா எரி யறது. இன்னிக்கு ரூமிலிருந்து தூக்க மாத்திரையை எடுத் துண்டு போகணும். ஆச்சு, இங்கேயும் சுருக்கக் கடையைக் கட்ட வேண்டியதுதான். நவ க்ரஹப்ரதிஷ்டையிருந்தால் சனி பகவானை உத்தேசிச்சுக் கொஞ்சமாவது சுறுசுறுப்பு இருக்க வழியிருக்கு. திரும்பத் திரும்ப அம்மன் மட்டுந் தானே!

பன்னிரண்டு மணி வாக்கில் ஒரு கையில் பென்சில் டார்ச், ஒரு கையில் சாவிக் கொத்துடன் படியிறங்கி வருகையில் தர்மராஜனுக்கு உடம்பில் ஒரு ஜில்வு - தண் ணீரில் குட்டிக்கரணம் போடுகையில் அடி வயிறு சுருள்வது போல். தன் வாண்டு நாட்களில் கிராமத்தில், மரத்தின் உச்சாணிக் கிளையிலிருந்து துரவுக் கிணறில் 'டைவ்' அடிப்பது போல் 'த்ரில்' — உடம்பிலேயே ஒரு லேசு. அந்த லேசுனாலேயே ஏம்தா ஆத்மானுபவ ஆனந்தம். அதி கணக்காய்ப் பார்த்தால், இடையில் வேறு சிக்கல் நேராம லிருந்தால் பத்து நிமிடங்களில் முடிந்து விடுகிற வேலைக் குத்தான் இத்தனை நாள் தவம். தான் கவனித்தவரை. அறிந்து கொண்டவரை சிக்கல் இருக்கவோ நேரவோ நியாயமில்லை. இது ஸிம்பிளாய்த் திறந்து மூடல் கேஸ் தான்.

ஆபீஸ் கதவு இரண்டாவது சாவிக்குத் திறந்தது.

இரண்டு கைகளிலும் கைக்குட்டையைச் சுற்றிக் கொண்டு — க்ளோவ்சுக்கு எங்கே போறது? நாளைக்குச் சேட்டு வந்து கை பட்டால் எல்லாம் சரியாகப் போய் விடும் - இருந்தாலும் தூப்பறியும் நாவல்களில் படிக்கிறோம், சினிமா பார்க்கிறோம். எச்சரிக்கையாக இருந்து விடல் நல்லது - கைக்குட்டையைச் சுற்றிக் கொண்டு பெரிய சாவிகளுள் பெரிய சாவியைப் போட்டுத் திருப்பினதும்-

நல்ல கனம். நாலு இஞ்சுக்குக் குறைவில்லை. உள்ளே இன்னொரு சொர்க்கவாசல் கதவு - அடுத்த பெரிய சாவி. அதுவும் திறந்த பின்தான் மூச்சு தெம்படைந்தது, குபீரென்று கிளம்பிய குங்குமப்பூ மணத்தில் மண்டை கிறங்கிற்று. அலாரம், காம்பினேஷன் லாக். இது பற்றியும் புத்தகங்களில் படித்ததும்,சினிமாவில் பார்த்ததோடும் சரி. அசட்டுத் தைரியம்தான். கமலாம்பிகை அருள் காப்பாற்றுகிறது. ஆனால் இந்தக் கதவுகளை வைத்துக் கொண்டு சேட்டுக்கு வேறு சிங்க நாதங்கள் எதுக்கு? கவலையே வேண்டாம். இது ஏதோ பழங்காலத்துக் கற்கோட்டை.

மொத்தம் மூன்றடுக்குகளில் மேலும் கீழும் ஏதேதோ தஸ்தாவேஜுகள், புஸ்தகங்கள், பதிவேடுகள். மேல் தட்டில் ஒரு குட்டி லக்ஷ்மி படம்.

நடுவில் லாக்கர் கொத்தில் தேடி, அதற்கொரு குட்டிச் சாவி. அந்தச் சாவியைச் சேட் எங்கேனும் தனிப் படுத்தியிருந்தால் இத்தனை ரிஸ்க்கும், சிரமமும் பாழ்.

திறந்ததும் இரண்டு நகைப் பெட்டிகளைத் தாண்டி, உள்ளே பத்துப் பதினைந்து குட்டித் துணிப் பைகள். சுத்தமாக முடித்துப் போட்டு, ஒவ்வொன்றிற்கும் லேபல் கட்டித் தொங்க விட்டு, இரண்டு வரிசைகளில் அடுக்கியிருந்தன. இதிலேயே குறைஞ்சது ஐம்பதாயிரம்

மூடக்கியிருப்பான்னு தோன்றது. ஒரு லட்ச ரூபாய் மதிப்பு இந்தப் பைகளுள் மட்டும் இருக்கும். குத்து மதிப்பில். சரி சரி, நமக்கென்ன? நாம் தேடி வந்தது ஒரு முடிச்சுத்தான். இதோ சுருக்கவே அகப்பட்டு விட்டது.

மிஸஸ். கோமதி

ரூ. 5000/-

எடுத்து ஜேபியில் போட்டுக் கொண்டு, மீதி முடிச்சுகளை அதனதன் இடங்களுக்கு நகர்த்தி விட்டு, லாக்கரைப் பூட்டி, உள் கதவை யடைத்து, பிடியைத் துடைத்து, வெளிக் கதவைப் பூட்டிப்பிடியைத் துடைத்து, அசைன்மெண்ட் ஓவர் - நோ, நாட் எட். எதையேனும் ஞாபக மறதியா வெளியில் வெச்சிருக்கப் போறேன். இல்லை. வெளியில் வந்து ஆபீஸ் அறையைப் பூட்டி, மாடியேறிப் பீரோவைத் திறந்து, சாவிக் கொத்தை இருந்த இடத்தில் வைத்துவிட்டு, பீரோவைப் பூட்டி, பீரோ சாவியைச் சேட் தலையணையடியில் வைத்துவிட்டு, மறுபடியும் கீழிறங்கி வாசற்கதவைத் திறந்து, தன் பின்னால் பூட்டிக் கொண்டு, வேகமாய் நடக்கலானார். இதுவரை தன்னைத் தாங்கிக் கொண்டிருந்த உவகை வடிய ஆரம்பிப்பதை உணர்ந்தார். ஜல்தி! ஜல்தி!

தன்னையே விரட்டிக் கொண்டு, கோவிலை அடைந்ததும், சாவியை அதன் மறைவிடத்திலிருந்து எடுத்துக் கதவைத் திறந்தார். விளக்கில் சுடர், அசைவற்ற தீக்ஷண்யத்தில் பம்பரம் போல் தூங்கிக் கொண்டிருந்தது. அம்பாளின் பின்புறத்தில், அவள் பீடத்தில் துழாவினார். தெரிந்தவனுக்கும், தேடித் தேடித் தேடினால்தான் கிடைக்கும்.

பெரியப்பா சொந்தப் பிள்ளையை நம்பவில்லை.

பென்சில் டார்ச்சில் ரொம்பவும் உஷாராய்த் தேடினதில் விளிம்பின் கோடு—வெகு நுட்பமான கோடு—வெகு நுட்பமாக விரல் ரேகைக்கு இடறிற்று. ஜாக்கிரதை

யாக அதன் மேல் விளம்பிக் கொண்டே, அது போன வழி போனதும், கல்லின் கறுப்போடு கறுப்பாய், இத்தனை வருட காலமாய் வடிந்து வறண்டு போன எண்ணெய்ப் பிசுக்கோடு பிசுக்காய், அதுவே ஒரு பிசுக்குருண்டை போல—

பை முடிச்சு இருக்கும் ஜேபி தீயத் தொடங்கி விட்டது.

ஆ! அகப்பட்டுக் கொண்டாரய்யா!

பொத்தானை அழுத்தியதும் ஒரு சிறிய கல் கதவு விட்டுக் கொண்டாற் போல்—விட்டுக் கொள்ளவில்லை—தொங்கிற்று. பிரதிஷ்டையோடேயே, சிற்பியின் வேலைத் திறன். உள்ளே கை விட்டுத் துழாவியதும், அன்று பெரியப்பா தனக்குக் காண்பித்தபடியே, ஓலைச் சுவடி பத்திரமாக இருந்தது. இன்னும் ஏதேதோ புத்தகங்கள். அவைகளை வைக்க வீட்டில் பத்திரம் போதாது என்று பெரியப்பாவுக்குத் தோன்றியிருக்க வேண்டும்-சோதித்துப் பார்க்க இப்போ நேரமில்லை—நகைப் பையை உள்ளே தள்ளிக் கதவை மூடின பிறகுதான் தன் முகம் ஜலகண்டமாகக் கொட்டியிருப்பது உணர முடிந்தது. நோ டைம் ஃபார் எனிதிங்.

ஒரு முறை குனிந்து அம்பாள் முகத்தைப் பார்த்தார். என்ன சொல்கிறாள்?

சிரிக்கிறாள்.

சிந்திக்க நேமில்லை. உள் வெலவெலப்பு அதிகரித்துக் கொண்டே வந்தது. காரியம் முடிந்து விட்டதும் முறுக்குத் தளர்ந்து விட்டது. எல்லாம் மனோ பலத்தில்தான் நடக்கிறது. வீடு போய்ச் சேரணும்.

கதவில் சாவியைப் போட்டுத் திருப்பிக் கொண்டிருக்கையிலேயே, பின்னாலிருந்து—

''பிராணாம் மஹ்ராஜ்!''

இதயம் ஒரு தரம் தொண்டைவரை தாவிக் குதித்தது. திரும்பிப் பார்த்தால் தெரு கூர்க்கா ஸல்யூட்டில் அசையாமல் நின்றான். அவனுக்குத் தலையை ஆட்டிவிட்டுக் கதவை அவசரமாய்த் திறந்து மூடிக் கொண்டு உள்ளே கதவின் மேல் சாய்ந்தார்.

சந்தேகமில்லை. எனக்கு வயசாகிக் கொண்டு வரது. சாவியை அதன் ஆணியில் மாட்டிவிட்டுப் படுக்கையில் உட்கார்ந்தார்.

அப்பா, என்ன தாகம்! தலைமாட்டில் சொம்பு தீர்த்தத்தையும் மடக்—மடக். பசி வேறு. ஆனால் தின்ன ஒண்ணுமில்லை. ரொட்டிக்காரன் காலையில்தான் வருவான். டின்னில் உப்பு பிஸ்கட் நாலைந்து - இந்தப் பசிக்கு எந்த மூலை? - இன்னும் கிளப்பி விட்டது. தலையணையில் தலை சாய்ந்ததே யொழிய, தூக்கம் ஏது?

அடுத்தது என்ன? சுருள் ஓடத் தலைப்பட்டது. அன்று பார்த்த பின் கோமதியைச் சந்திக்கவில்லை. அவளைக் கண்டு தன்னிடம் இருந்த ஐயாயிரத்தைக் கொடுத்து, சேட்டிடம் கடனைப் பைசல் பண்ணி நகையைத் திருப்பச் சொன்னால் என்ன ஆகும்? தேடுவான், குழம்புவான். இரண்டு நாள் கழித்து வரச் சொல்வான். மறுபடியும் தேடுவான். கலாட்டா; அமர்க்களம். நாளை ஏற்படுமோ?

அடகு பிஸினெஸை ஒழுங்காய் லைசென்ஸ் எடுத்துப் பண்ணுகிறானோ? இல்லையென்று கோமதி சொன்னதாக நினைப்பு. தன் நகை மேல் கடன் வாங்கவே ஏகப்பட்ட சிபாரிசு என்றாள். அடகு வியாபாரம் முறையாக நடத்தவில்லையென்றால், இது மாதிரி விளம்பரத்துக்கு இடம்கொடுக்க முடியாமல் திருடனுக்குத் தேள் கொட்டினாற் போல் தவிப்பான். கடன் போக நகை மதிப்பை, தற்போதைய மார்க்கெட் ரேட்டில் ஈடு பண்ணியாகணும்; என் பணத்தை வாபஸ் பண்ணி, மிச்சம் அவளுக்கு லாபம்.

உங்களுக்காக வருத்தம் சேட். ஆனால் அவள் கஷ்டம் உங்கள் நஷ்டத்தை விட அதிகம். அப்புறம் நாளா வட்டத்தில்—அது நாளோ, மாதமோ, வருடமோ—ஏதேனும் சாக்குச் சொல்லி—அப்போ என்ன சாக்குச் சொல்ல வருமோ, நகை எப்படி என் கைக்கு வந்தது என்பதற்கு—சமத்தாயிரு என்று கோமதியிடம் நகையை ஒப்படைச்சாகணும்.

என் பணத்தைக் கொடுத்து சேட்டிடம் ஸெட்டில் பண்ணச் சொல்வதற்கே, என்ன கேள்வி கேக்கறாளோ? சம்மதிக்கறாளோ இல்லையோ? இதுகளுக்கெல்லாம் பிசுக்கென்று ஒரு அசட்டுக் கௌரவம் வந்துவிடும்.

இதில் இன்னொரு விஷயம் இருக்கிறது. கோமதி எல்லாம் தெரிஞ்சவளல்ல. அவளும் இடை மனுஷன் சொல்வதைக் கேட்பவள்தான். சேட்டின் அடகு வியாபாரம் லைசென்ஸுடன் சாங்கோபாங்கமாக நடப்பதாய் வைத்துக் கொள்வோம். அப்பவும் கேஸைத் தாக்கல் பண்ணுவானா? இவர்கள் ஒரு லேவாதேவிக்கு மூணு புத்தகம் வைத்திருப்பவர்கள். கிணறு வெட்டப் பூதம் புறப்படுவதை விரும்ப மாட்டார்கள். இதனால் ஏற்படக் கூடிய ஹானியை விட, படும் நஷ்டமே தேவலை.

எப்படியும் கோமதியை முன்னாலேயே எனக்குத் தெரியும். அவளுக்கு என்னைத் தெரியும் என்பது எந்த நேரத்தி அவனுக்குத் தெரியக் கூடாது. இதை எப்படி மானேஜ் பண்ணப் போறேன் ?

இதெல்லாம், நம் இஷ்டப்படி நாம் நினைத்துக் கொள்வது. பாதுகாப்பாய் இருந்த பண்டத்தைக் காணோம் என்றால் சும்மா விடமாட்டான். இதென்ன இல்லி பில்லி சூன்யமா? முட்டாள் ஆக்கப்பட எவன்தான் விரும்புவான்? ஒரு கை பார்த்துத்தான் விடுவான். யார் யாரைச் சந்தேகப் படுவான்? எம்ப்ராய்டரி ஓர்க்கர் களையா? அவன் ஏமாந்த சமயம் இருந்தால்தானே அவர்

களைச் சந்தேகப்பட? ஒரு சமயமேனும் அசட்டையாக பாதுகாப்பாய்க் கதவில் சாவி தொங்கிப் பார்த்த ஞாபகம் அவருக்கு இல்லை.

அப்புறம் நான்தான், ஆயிரம் பழகி விட்டாலும், ப்ரதர் மாதிரி ஆகிவிட்டாலும் நானும் அவனிடம் வேலை பார்க்கும் ஆட்களில் ஒருவன்தானே! நேரிடையா நாக்கில் பல் பட்டுக் கேட்கக் கொஞ்சம் அஞ்சலாம். ஆனால் ஒரு நாள் கேட்டேதான் ஆக வேண்டும். பீரோவிலிருந்து பிராந்தி எடுக்கச் சாவியைக் கொடுத்தது எப்போ ஸ்பஷ்டமாக ஞாபகம் வருகிறதோ அப்போ—

ஆனால் என்னத்தை நிரூபிக்க முடியும்? அந்தக் கசப்பே, அந்தச் சந்தேகம் காரணமாக, நான் வேஷம் போட்டு நின்னுடணும். அதுவரை? நடக்கிறதைப் பார்த்துண்டு ஒண்ணும் செய்ய முடியாமல் சகிச்சுண்டு காத்திருக்கணும். அந்த டென்ஷனைத் தாங்க நமக்குத் தெம்பு இருக்கா? இன்னிக்கே நாடி ஆட்டம் கொடுத்துப் போச்சு.

இல்லை, நானாவே, ''சேட், நான் என்னவோ நினைச்சேன். எனக்கும் உடம்பு தள்ளல்லே. செலவு வாங்கிக்கறேன்...''னு இப்பவே நோட்டிஸ் கொடுத்தால், அப்பவும் நகை களவு போனதை எப்போ கண்டு பிடிக்கிறானோ? முதல் சந்தேகம் என் மேல்தான். வேட்டை நாய்களை அவிழ்த்து விடுமுன்னர், நான் ஊரை விட்டே போயிடுவேன். இப்பவே ஜுலி மண்டைக்குள் என்ன ஓடிண்டிருக்குன்னு எனக்கு அஸ்தியிலே ஜுரம்தான். அதன் மோனமும் தோரணையும், உலகத்தையே ஒரு அலட்சியமாக்கும் பாவனையும்—ஒரு யோகீஸ்வரன் அதனுள் புகுந்துண்ட மாதிரியிருக்கு.

எதிலும் மாட்டிக் கொள்ளாமல் வாழ்க்கையில் மிதந்து செல்ல வேண்டுமென்று நான் பட்ட ஆசையென்ன? இப்போ நடக்கிறதென்ன? வகையாக ஆழந் தெரியாமல் மாட்டிக் கொண்டு விட்டேன்.

மாட்டிக் கொண்டேனோ? இப்பவும் மிஞ்சிப் போயிடவில்லை. இன்னிக்கு இனிமேல் நாளைக்கு விஷயங்களை யதார்த்ததளத்துக்குக் கொண்டு வந்து விட்டால்?—கோமதி மேல் அனுதாபம் என்னால் தாங்க முடியாதபடி இருந்தால் முடிந்த சகாயம்—அத்தோடு சரி. அவரவர் கஷ்டம்,விதி அவரவர்களுடையது. மாற்றியமைக்க நான் யார்? கடவுளா? இவ்வளவு தூரத்துக்கு உளையில் அழுந்தின பிறகுதான், இப்படித்தான் இந்தப் பாடத்தை நான் தெரிஞ்சுக்கணும்னு இருக்காப் போலிருக்கு. இந்த யோசனையெல்லாம் ஏன் முன்னால் தோணவில்லை? கண் கெட்ட பின் சூரிய நமஸ்காரம் இல்லை. முழுக்கக் கெடல்லை. நாளை ராத்திரி பழைய நிலைக்குத் திருப்பி வெச்சுடுவோம். அதுதான் சரி. இந்த ஸ்டண்டுக்கெல்லாம் நாம் லாயக்கில்லை.

கொஞ்சத்துக்குக் கொஞ்சம் மனதை அமைதிப் படுத்திக்கொண்டு கண் மூடிக் கண் திறப்பதற்குள் நன்றாய் விடிந்து இருந்தது. சேட் இன்னும் எழுந்திருக்கவில்லை. உடம்பை முறித்துப் போட்டாற் போல் வலித்தது. இன்னிக்கு ஏதாவது ஸிம்பிளாகப் பண்ணிக்கணும். அதைவிட மேல், சேட்டை இன்னிக்கு ஹோட்டலிலிருந்துவரவழைத்துக் கொள்ளச் சொல்ல வேண்டியதுதான். அவனும்தான் பிரியாணிக்கு அலைவானே? இன்னிக்கு நமக்கு ஓய்வு நாள்.

கீழேயிறங்கி வாசற்கதவைத் திறந்துவிட்டார். சாணி தெளிக்க வேலைக்காரி வர மாட்டாள். அவர்களெல்லாம் இப்போ ரொம்ப மேட்டிமை ஆகி விட்டார்கள். பற்றுத் தேய்க்க வருவதே ஒன்பது மணிக்குத்தான். வாசலில் பால் புட்டி இருந்தது. இது பழக்கம்தான். இந்த நேரத்துக்கு அது 'லவுட்டீஸ்' ஆகாமல் இருந்ததுதான் ஆச்சரியம்.

பல் விளக்கிவிட்டு, வடிகட்டியில் டிகாக்ஷன் இறக்கிக் கொண்டிருக்கையில் ஒரு ஊளை—முதன் முதலாக அதைக் கேட்கையில்—குடலைக் கலக்கிற்று. என்னவென்று ஓடி வந்தார். ஜூலியின் மூக்கு நுனி கூரையை முட்டிக்

கொண்டு ஊளை. இன்னும் அதன் முதன் மூச்சு முடிய வில்லை—இன்னும் புறப்பட்டுக் கொண்டேயிருந்தது.

அந்த ஓலத்துக்கும் சேட் எழுந்திருக்கவில்லை.

சேட்! சேட் !

ஊ—ஹூம்.

சேட் மூக்கிலிருந்து ஒரு நூல் சளி வழிந்து, உதட் டோரம் எச்சிலோடு கலந்திருந்தது.

சேட் நெற்றியைத் தொட்டுப் பார்த்தால் ஐஸ்.

மூக்கு அடியில் கை வைத்துப் பார்த்தார். மூச்சின் அசைவு தெரியவில்லை.

மை காட் ! அவருக்கு உடம்பெல்லாம் உதறிற்று.

போன். போன். "டாக்டர் ஹமீத்! டாக்டர் ஹமீத் !"

போன் பண்ணினதற்கு டாக்டர் ஹமீத் வந்தது சுருக் கென்றாலும், அவர் பரிசோதனை சர்வ நிதானமாகத் தான் நடந்தது. ஸ்டெத். அப்புறம் கண் இமையைத் தூக்கிப் பார்த்துவிட்டு டீபாயில் ஒவ்வொரு மருந்து சீஸா வாக—அதுவும் பழக்க தோஷம்தான்-எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்தார். பரிசோதனைக்கு என்ன இருக்கும்?

"அவர் போய் நாலு மணி நேரம் ஆகியிருக்கும். நீங் களும் நானும்தான் அவருக்கு இப்போ நெருங்கியவர்கள் ஐ ஆம் சாரி மிஸ்டர்-ஸாரி, உங்கள் பேர் சட்டுனு வர்லே—"

"தர்மராஜன்."

"யெஸ், மிஸ்டர் தர்மராஜன். அப்பவே சொன் னேனே. கார்டியாக் கேஸ். இவங்க முடிவு எப்போ வரும், எப்படி வரும்னு சொல்ல முடியாது. நேத்து ஆஸ் துமா அட்டாக் இருந்திச்சா?"

"இல்லே டாக்டர், நேற்று நிலைமை நல்லாயி யிருந்தது."

"ஹல்லோ, வாட் இஸ் திஸ்?" டாக்டர் ஒரு பாட்டிலை உயரத் தூக்கி ஆட்டிக் கொண்டிருந்தார்.

"எனக்குத் தெரியாதே!"

"தூக்க மாத்திரை."

"அதுவும் எனக்குத் தெரியாது அவர் மருந்து வழிக்கு நான் போவதில்லை. அவரேதான் சாப்பிடற வழக்கம்."

'இங்கே இருக்கிற ஐட்டம்ஸ்ல ரெண்டு தூக்க மாத்திரை ஆனால் இது கார்டினால்னா!"

"அப்படீன்னா?"

டாக்டர் பதில் சொல்லவில்லை. அலைந்து கொண்டிருக்கும் பார்வை தற்செயலாக ஜூலி மேல் தங்கிற்று. கொஞ்ச நேரம் அதையே மௌனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"ஹல்லோ ஜூலி, கமான், கமான்". - கையை நீட்டினார். ஜூலி வரவில்லை. அது இட்ட ஊளையில் அதன் பலமெல்லாம் வடிந்து விட்டாற்போல் சொரத்தாயில்லை. வாயில் கொட்டாவி வழிந்தது. படுத்துக் கிடந்தது. அதன் அருகே அதன் தட்டில் நேற்றையச் சோறு கொஞ்சம் சிதறிக் கிடந்தது.

டாக்டர் பெருமூச்செறிந்தார். மனதை ஏதோ திடம் பண்ணிக் கொண்டு போன் பண்ணினார். டயல் பண்ணிக் கொண்டே அவர் கண்கள் தர்மராஜன் கண்களைச் சந்தித்தன.

"இது ஒரு மோசமான உலகம், மிஸ்டர் தர்மராஜன். அவர் ஒரு நல்ல மனுஷன். ஒரு பெரிய மனுஷன். நான் மிஸ்டர் மனக்சந்தைச் சொல்றேன்."

தர்மராஜனுக்கு முகம் வெளிறிட்டது. அந்த நிறம் இன்னும் வெளுக்க முடியுமோ? முடியும் போலதான் இருக்கு.

மார்ச்சுவரி வான் வந்து, சேட்டைத் தூக்கிக்கொண்டு போயாகி விட்டது. கூடவே நாய்த் தட்டும் போய் விட்டது.

போலீஸ் — வந்தது என்னவோ நாலு பேர்தான். ஆனால் இடத்தை அப்படியே மொய்த்துக் கொண்டு அப்பிக் கொண்டாற் போலிருந்தது அவரை அவர்கள் சட்டை செய்யவே இல்லை. இருப்பதாகப் பாவிக்க வில்லை. வீட்டை அவர்களே சார்ஜ் எடுத்துக் கொண்டு விட்டார்கள்.

அவரோடு யாரும் பேசக்கூட இல்லை. அவர்களே இதை எடுத்து, அதைத் திறந்து, அங்கே நோண்டி, இங்கே மூடி, என்னவோ பண்ணிக் கொண்டிருந்தார்கள். டப்பாவைக் கவிழ்த்தாற் போல் வீட்டைத் தலைகீழாக்கித் தட்டிக் கொண்டிருந்தார்கள். இத்தனை ரகளை அவசியமா? ஆனால் இதுதான் அவர்கள் முறை போலும்! எங்கேயோ அடித்தால் எங்கேயோ பல் போச்சு என்கிற மாதிரி. ஆனால் கேட்க முடியுமா?

அவர் வழிக்கு யாரும் வரவில்லை. ஒரு கேள்வி கூடக் கேட்காமல் இது என்ன துப்பு? அவர் நடமாட்டத்தையும் யாரும் கட்டுப் படுத்தவில்லை. ஆனால் அவர் வெளியே போக நேரும்போது, சாப்பாட்டுக்கும் காப்பிக்கும் ஓட்டலுக்கோ — ப்ளேடு வாங்கக் கடைக்கோ — உள்ளேயே உட்கார்ந்திருந்தால். பைத்தியம் பிடித்து விடும். இதற்காக வெளியில் போகாமல் இருக்க முடியுமா?— யாரும் போக வேண்டாம் என்று சொல்லவில்லை—வெளியில் போகும் போதெல்லாம் ஒரு 'வால்' அவர் பின்னால் ஒட்டிக் கொண்டது. எங்கே போனாலும் தொடர்ந்து...

எத்தனை நாழியானாலும் விடவில்லை. தான் அவ்வப் போது முளைப்பதை மறைக்கவும் முயலவில்லை.

தூண்டிலில் மாட்டிக் கொண்ட மீனுக்கு நூல் விடு கிறார்கள். தானாக ஓய்வதற்குக் காத்திருக்கிறார்கள். அவர்களுக்கு அவசரமே யில்லே. எதற்காகக் காத்திருக் கிறார்கள்?

அவர் தன் ரூமுக்குப் போகவில்லை. அது வேறு தன் னையே காட்டிக் கொடுத்துக் கொள்ளணுமா?

கோவில்? இன்னும் சனிக்கிழமை வரவில்லை. ஆனால் வேறு போக்கிடமில்லாமல் கால் அவரை அங்கே இழுத்துச் சென்றது.

மண்டபத்தில் உட்கார்ந்திருந்தார். என்ன செய்ய லாம்?

நேரம், அதன் நியதிகள் யாரைச் சட்டை செய்கின் றன? ரம்மியமான சந்தியா வேளை. தெருவில் மும்முர மான போக்கு வரத்து. அவரவர் ஜோலி அவரவர்க்கு.

என்ன செய்யலாம்?

கிணற்றில் மொள்ள வந்தவள் யாரோ அவரை அடை யாளம் கண்டு கொண்டு நமஸ்கரித்துவிட்டுச் சென்றாள்.

என்ன செய்யலாம்? இப்படியே கம்பி நீட்டலாமா? நேரே ரூமுக்குப் போய்—சாவி—ஜேபியில் தொட்டுப் பார்த்துக் கொண்டார்.

நல்லவேளை—கேஷ், பெட்டியில் ரொம்ப இருக்கற மாதிரி தெரியல்லே—ஏதோ இருக்கிறது தான். மோதிரம், ரிஸ்ட் வாட்ச் இருக்கு, புல்லாங்குழல், மறக்காமல்—தெரு வில் துண்டை விரிச்சு நாலு காசு விழுந்து-இனி அப்படித் தான் பிழைப்போ என்னவோ? — மறந்து போச்சே, கோமதியின் நகையிருக்கே — மறுவேஷ்டி மறு சொக்காய் மட்டும் ஒரு சின்ன பாக்கிங், நேரே ரயிலேறி விட வேண்

டியதுதான். முடியுமா? சுற்று முற்றும் ஓரக் கண்ணால் பார்த்தார்.

மண்டபம் தாண்டிக் குறைச் செதுக்கலில் கிடந்த பாறை மேல் உட்கார்ந்த வண்ணம் ஒருவன் பீடி குடித்துக் கொண்டிருந்தான். தற்செயலாக — தற்செயலாகவா?— அதே சமயத்தில் அவன் முகமும் அவர் பக்கம் திரும்பி, இருவர் கண்களும் சந்தித்தன. சட்டென்று முகத்தை அந்தப் பக்கம் திருப்பிக் கொண்டான்.

ஊஹூம். ஹோப்லெஸ். கோபக் கண்ணீர் விழியோரங்களில் உறுத்திற்று.

ராத்ரி?

முடியாது. விக்ரமாதித்தன் சிம்மாஸனப் படிப் பொம்மைகள்—''அகோ வாரும் பிள்ளாய் தர்மராஜரே, எங்கே போகிறீர்''?

வேறு வழியேயில்லே. காத்திருந்து அனுபவிக்க வேண்டியதுதான்.

வெள்ளிக் கிழமை யன்று காலை பத்து மணி வாக்கில் அவர் ஓட்டலுக்குக் கிளம்ப ஆயத்தமாகிக் கொண்டிருக்கையில், ஒரு ஆள் ஒரு டிபன் காரியரைக் கொணர்ந்து மேஜை மீது வைத்தான்.

''என்னப்பா அது?''

''சாப்பாடு.''

''யாருக்கு?''

''உங்களுக்குத்தான்.''

முதுகுத் தண்டு குறுகுறுத்தது. சுவர்கள் நெருக்கலாச்சு. சாப்பாடே தான் எச்சரிக்கை. வெளியே போகாதே.

ஏதோ விதிக்கப்பட்ட உணர்வு வந்து விட்டது. ஆனால் அந்த விதி என்ன?

அசையாமல் வெகு நேரம் தரையைப் பார்த்த வண்ணம் உட்கார்ந்திருந்தார்.

விதி தரையிலா எழுதியிருக்கிறது?

மாலை, சுமார் நாலு மணியிருக்கும்.

ஒரு சிவப்புத் தலைப்பா மாடிக்கு வந்தது.

''ஸார், உங்களை இன்ஸ்பெக்டர் அழைத்து வரச் சொன்னார்.''

அப்பாடி!

ஆபீஸ் அறையில் இன்ஸ்பெக்டர் உட்கார்ந்திருந்தார்.

''ஆ, குட் மார்னிங், மிஸ்டர் தர்மராஜன். இப்படி உட்காருங்க. இதோ இங்கே எதிரே. சிகரெட்?''—பாக்கெட்டை நீட்டினார்.

''நோ?''

புகையைப் பலமாக ''உஸ்''—வெளியே விட்டார். ஏதோ காரியம் முடிந்த இன்ப அசதி.

''மிஸ்டர் தர்மராஜன், நாம் கொஞ்சம் பேச வேண்டியிருக்கு. ஏ 433 ! ஏன் இப்படி குட்டி போட்ட பூனை மாதிரி நீ அலையறே? நியூஸென்ஸ். வெளியிலே நில்லு. இதோ, இந்த வாசல்படியிலே-கண்ணிலே படற மாதிரி.''

433ஐ அவருக்குப் பிடிக்கவில்லை என்று தெரிகிறது. 433ஐ யாருக்கும் பிடிக்காது. ராக்ஷஸவளர்த்தி.கொரில்லாவுக்குக் காக்கி உடுத்தின மாதிரி. அந்தக் குறுகிய நெற்றியும், சப்பை மூக்கும், தடித்த உதடும்—

''மிஸ்டர் தர்மராஜன், இதுவரை உங்களைக் கூப்பிட்டு விசாரிக்கவில்லையே என்று உங்களுக்குத் தோன்றியிருக்கலாம். எங்கள் சோதனைகளை முடிச்சுகிட்டு அப்புறம் உங்களை அப்ரோச் பண்ற மாதிரிதான் இருந்தது. என்ன அவசரம்?''—புக் புக்—

''நான் தலையைச் சுத்தி மூக்கைப் பிடிக்கப் போற தில்லே. உங்களுக்கும் ரொம்ப சஸ்பென்ஸ்தான். ரொம் பவும்தான் சகிச்சிட்டிருந்திருக்கீங்க. எனக்குப் புரியல் லியா? வயசில் உங்களுக்கு நான் பிள்ளை மாதிரி''— சிகரெட் நுனியைக் கீழே போட்டுக் கால் பூட்ஸில் தேய்த்து அணைத்தார்.

''மிஸ்டர் மனக்சந்துக்குக் குடும்பமிருந்தால் குடும்பத் தில் யாரேனும் இந்தக் காரியத்தைச் செய்திருப்பாங்க ளோன்னு விசாரணை வேறே மாதிரி போயிருக்கும். மரி யாகசி பாத்திரம் தேய்க்க காலை ஒரு மணி நேரம். அப் புறம் நாய்க்கு ஐவ்வு போட மத்தியானம் ஒரு கால் மணி நேரம். அத்தோடு சரி. எம்ப்ராய்டரி வொர்க்கர்ஸுக்கு பகல் வேலையோடு சரி. ராத் தங்கி, இறந்தவருக்குச் சாப்பாடு செய்து அவரோடு பேசிப் பழகி, அவரைப்பற்றி மத்தவங்களை விட விவரங்கள் தெரிஞ்சவர் நீங்கள் ஒருத் தர்தான். ஸோ யூ ஆர் த சஸ்பெக்ட். ஒன்லி சஸ்பெக்ட். அதனால், உங்களைப் பத்தி எங்களுக்கு என்ன அவசரம்- நீங்கள் போகாதவரை? நீங்கள்தான் ஓடிப் போகல்லியே! நீங்கள் சரியாத்தான் நடந்துக்கிட்டிங்க. வேறு வழியும் இல்லை. அது உங்களுக்கே தெரியும். ஸென்ஸிபிள் மேன்.

''ஒரு விஷயம். மனக்சந்த் தூக்க மாத்திரையால் தான் செத்துப் போனார்னு போஸ்ட்மார்ட்டம் ரிப்போர்ட்படி நிச்சயமா ருசு ஆவல்லே.''

அம்மாடி! பெருமூச்சைத் தர்மராஜன் வெளியில் தெரி யாதபடி சிரமப்பட்டு அடக்கிக் கொண்டார். மகராஜன் இன்ஸ்பெக்டர். அழகாய்த்தானிருக்கான். மூக்கும் முழி யும் ஆண்மையுமா. இது மாதிரி பிள்ளை இருந்தால் வலிக்கிறதா?

''ஏற்கெனவே இதயக் கோளாறு கேஸ். தூக்கத்தில் இறந்திருக்கார். ஆனால் விஷயம் அத்தோடு முடியல்லியே. அப்போ எல்லாருக்கும் நிம்மதிதான். வேறே சிக்கல் வந் திடுச்சே. கார்டினால் மாத்திரை எப்படி சேட் மருந்து ஸ்டாக்கிலே வந்திருச்சு? டாக்டர் ஹமீத் பிரிஸ்கிரைப்

பண்ணல்லே. சேட் கண்டிஷனுக்கு அது பவர் ஜாஸ்தி. ஒத்துக்காதாம்.

''அத்தோடு இருந்தாலும் பரவாயில்லே. நாய் சாப்பாட்டில் சில்மிஷம் நடந்திருக்குது. எதுக்காக? இந்தக் காரியத்தைச் செய்தவனுக்கு எண்ணம் சரியாயில்லே. ஒப்புக் கொள்றீங்களா?

''சேஃப் கதவு, கைப்பிடி - அது மேலே ரேகை கூட இல்லை. தினம் புழங்கற சேட்டினுடைய கை ரேகை கூட காணோம். அப்படி எப்படியிருக்க முடியும்? இருக்கலாம். மெனக்கெட்டுத் துடைச்சிருக்குது.

''சரி, சேஃப்பைத் திறந்து பார்த்தோம். ஒரு பை காணோம். என்ன முழிக்கிறீங்க? பையைக் காணோம்னா கணக்குப் புத்தகங்கள் கூடவா காணாமல் போச்சு? முழு முழுன்னு கட்டெறும்பு மாதிரி அவங்க பாஷையில்தான் இருக்குது. அவங்க ஜாதிக் கணக்கன் ஒருத்தனை வரவழைச்சு செக் பண்ணினோம். கோமதி அம்மாள் பேருக்கு உரிய பை காணோம். நாங்கள் கோமதி அம்மாளைக் கண்டு பேசியாச்சு.''

மை காட்! அறை தட்டாமாலை சுற்றிற்று.

''மிஸ்டர் தர்மராஜன், இதில் பிரமாதச் சிக்கல் இல்லை. இது ஒரு திறந்து மூடற கேஸ்தான். முன்னாலேயே சொன்ன மாதிரி சந்தேகம் உங்கள் ஒண்டி மேல் தான். நான் உறுதிதான் பண்ணிக்கிறேன். உங்களுடைய துரதிர்ஷ்டம். ஆள் நாள் பார்த்த மாதிரி அன்னிக்குப் பார்த்துச் செத்தானே, அதான். அவர் மட்டும் சாதாரணமாய் மறுநாள் முழிச்சு எழுந்திருந்தால் பை காணாமல் போனது என்னிக்கு அவர் கவனத்துக்கு வருதோ அன்னிக்குத்தானே! உங்களுக்கு அதற்கு வேண்டிய நேரம் இருந்திருக்கும். ஆனால் இந்த யோசனைக் கெல்லாம் இப்போ இடமில்லை. நான் டிராமா நடத்தப் போவதில்லை. நீங்கள் எதாவது சொல்வதற்கு இருக்கா?''

தர்மராஜன் எங்கேயோ பார்த்துக் கொண்டிருந்தார்.

எங்கே என்றுகூடத் தெரியவில்லை.

''கல் சிரிக்கிறது!''

இன்ஸ்பெக்டர் விழித்தார்.

''கல் சிரிப்பதைத் தெய்வம் சிரிப்பதாக எண்ணிக் கொண்டு, அந்தச் சிரிப்புக்கு நமக்கு இஷ்டமான அர்த்தத்தை வரவழைத்துக்கொண்டு, தெய்வம் கொடுத்த உத்தரவாக நினைத்துக் கொண்டு, காரியத்தில் இறங்குகிறோம். காரியம் முடிஞ்ச பின், கல் தெய்வமாக மாறி அப்போ தெய்வம் சிரிக்கிறது.''

இன்ஸ்பெக்டருக்கு ஒண்ணுமே புரியவில்லை.

''தர்மராஜன், என் ரிப்போர்ட் கம்ப்ளீட் ஆவறதுக்கு உங்களை ஒண்ணு கேக்கணும். அதுக்குத்தான் உங்களை வரவழைச்சது. கோமதி அம்மாளின் பார்ஸல் எங்கே இங்கே நாங்கள் தேடாத இடம் பாக்கி இல்லே.''

P. C. 433 நகர்ந்து உள்ளே வந்து விட்டான். இன்ஸ்பெக்டர் அனுமதிக்கு அவன் காத்திருக்கவில்லை. அவர் பின்னால் நின்றான்.

''மிஸ்டர் தர்மராஜன், கோமதி அம்மாளின் நகைப் பொட்டலம் எங்கே?''

P. C. 433க்குத் தன்னை அடக்கிக் கொள்ள முடியவில்லை. இழுத்து ஒரு அடி. அடியா, குத்தா?—அவர் தாடையில். தர்மராஜன் நாற்காலியிலிருந்து விழுந்தார். அவரைத் தூக்கி நிற்க வைத்து அதே இடத்தில்? இன்னொன்று. கீழே விழுந்தவருக்கு இப்போ எழுந்து நிற்க முடியவில்லை.

உதட்டோரத்தில் சிவப்பு ரிப்பன் புறப்பட்டது.

ஏற்கெனவே செழிப்பான அவருடைய வெள்ளை ரோஸ் கலரில் அந்த ரிப்பன் சிவப்பு மோவாயில் வழிகையில், இருவரும் வசியங் கண்டவராய்ப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

★

